சேக்கிழார்

டாக்டர், மா. இராசமாணிக்கனார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
1969

சேக்கிழார்

சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்

டாக்டர், மா. இராசமாணிக்கனார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலை நகர்

1969

முதற்பதிப்பு : செப்டம்பர் 1969.

சொர்ணம்மாள் சொற்பொழிவு — வரிசை 6.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

அண்ணாமலைநகர்.

பொருளடக்கம்.

1.	முன்னுரை	I
2.	சேக்கிழார் — முதல் ஆராய்ச்சி அறிஞர் ...	1— 46
3.	சேக்கிழார் — வரலாற்று அறிஞர் ...	47— 73
4.	சேக்கிழார் — பெருங்காவியப் புலவர் ...	74—110

முன்னுரை

தமிழகத்தார் போற்றச் செந்தமிழ்ப் புலமைப் பணிபுரிந்த டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், தம் அன்னையார் சொர்ணம்மாள் அவர்கள் பெயரால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவியுள்ள அறக்கட்டளையின் சார்பில் ஆண்டு தோறும் நிகழ்ந்துவரும் புலவர்திருநாளில் ஆறுவது ஆண்டில் டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள் சேக்கிழார் என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது.

தமிழிலக்கிய இலக்கணத்துறையுடன் தமிழக வரலாற்றுத் துறையிலும் நிரம்பிய புலமையுடையராய்த் தமிழுக்கு ஆக்கமாகும் ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை எழுதியுதவியவர் காலஞ்சென்ற டாக்டர் மா. இராசமாணிக்கனுர் என்பதனைத் தமிழகம் நன்கு உணரும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் பேராசிரியர் இராசமாணிக்கனுர் அவர்கள் நிகழ்த்திய சொர்ணம்மாள் நினைவுநிதிச் சொற்பொழிவுகளின் தொகுப்பாகிய 'சேக்கிழார்' என்னும் இந்நூல், திருவருட்புலமைச் செல்வராகிய சேக்கிழார் பெருமானது ஆராய்ச்சி நுட்பத்தினையும் வரலாற்றறிவினையும் பெருங்காப்பியப் படைப்பாற்றலையும் இனிது விளக்கும் முறையில் அமைந்துளது.

தமிழிலக்கிய வரலாற்றுத்துறையில் ஆர்வம் உடையார் அனைவர்க்கும் சுவை பயக்கும் இனிய புலமை விருந்தாக இந்நூலை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றது.

அண்ணாமலைநகர்,
16-8-69

க. வெள்ளைவாரணன்,
தமிழாராய்ச்சித்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

8- OCT 1969

சொற்பொழிவு — I

சேக்கிழார் — முதல் ஆராய்ச்சி அறிஞர்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றி ***இளங்கோ வடிகள்*** புகழ்பெற்றார். பல படிப்பினைகளைக் கொண்ட இராம காதையைத் தம் புலமைத்திறத்தால் பெருநூலாகச் செய்து ***கம்பர்*** அழியாப் புகழ்பெற்றார். இப்பெருமக்களைப் போலவே, சுந்தரர் என்னும் சைவசமயத் திருத்தொண்டரது வரலாற்றைச் சீரிய முறையில் ஒரு காப்பியமாகச் செய்து ***சேக்கிழாரும்*** சிறப் புற்றார். சிலப்பதிகாரம் இன்றேல் இளங்கோவடிகள் இல்லை; இராமாயணம் இன்றேல் கம்பர் இல்லை; இங்ஙனமே பெரியபுராணம் இன்றேல் சேக்கிழாரும் இல்லை. இங்ஙனம் ஆசிரியர் பெயரும் நூற்பெயரும், பருந்தும் அதன் நிழலும்போல அமைந்திருத்தலைக் காணலாம். இம் முதற் சொற்பொழிவில் — சேக்கிழார் வரலா றும் காலமும், அவர் இயற்றிய திருத்தொண்டர் புராணத்திற்கு அமைந்த மூலங்களும் ஆராயப் பெறும்.

சேக்கிழார் வரலாறு :

பெரியபுராணப் பதிப்புக்களின் முதலில் அல்லது ஈற்றில் ***திருத்தொண்டர் புராண வரலாறு*** அல்லது ***சேக்கிழார் புராணம்*** என்னும் பெயர்கொண்ட செய்யுட்பகுதி சேர்க்கப்பட் டுள்ளது. அச் செய்யுட் பகுதியிற்றான் சேக்கிழார் வரலாறு காணப்படுகிறது. அப்பகுதியில் கூறப்படும் சேக்கிழார் வரலாறு இதுவாகும்.

"தொண்டை நாட்டுக் கோட்டங்கள் இருபத்து நான்கு. அவற்றுள் புலியூர்க் கோட்டம் ஒன்று. அக்கோட்டத்தில் குன்றை வளநாட்டுக் குன்றத்தூரில் வேளாளர் மரபில் ***சேக்கிழார் குடியில் அருண்மொழித்தேவர்*** என்னும் பெயருடன் ஒருவர் பிறந்து வளர்ந்தார். அவர் தம்பி பெயர் ***பாலறுவாயர்*** என்பது. அருண்மொழித்தேவர் காலப்போக்கில் சிறந்த புலவராய் விளங்கினர். அதனல் அவர், குடிப்பெயரால் '***சேக்கிழார்***' என்று கூறப்பட்டார்.

அக்காலத்தில் சோழப் பேரரசனுய் இருந்தவன் ***அநபாயன்***[1] என்பவன். அவன் சேக்கிழாரது பெரும்புலமையைக் கேள்வியுற்றுன்; அவரை வருவித்துத் தன் முதலமைச்சராகக் கொண்டான்; அவருக்கு 'உத்தமசோழப் பல்லவன்' என்ற பட்டத்தையும் வழங்கினுன்.

"சோழநாட்டில் 'திருநாகேசுவரம்' என்னும் சிவத்தலம் உள்ளது. சேக்கிழார் அத்தலத்துப் பெருமானிடம் மிக்க ஈடுபாடு கொண்டார்; அதனல் தமது ஊரான குன்றத்தூரில் ஒரு கோவிலைக் கட்டி, அதற்குத் 'திருநாகேசுவரம்' என்றே பெயரிட்டு மகிழ்ந்தார்.

"அநபாயன், சமணப் பெருங் காவியமாகிய ***சீவகசிந்தாமணி***யைப் படிக்கக் கேட்டு மகிழ்ந்தான். அவனது மசிழ்ச்சியைக் கண்ட சேக்கிழார், இளவரசனை நோக்கி, "சிந்தாமணி சமணர் செய்த பொய்ந்நூல். அதனைப் படிப்பதால் இம்மை மறுமைப் பயன்களைப் பெறுதல் இயலாது. சிவகதை ஒன்றே இம்மை மறுமைகட்குப் பயன் அளிக்கவல்லது", என்று கூறினர். சேக்கிழாரது இக் கருத்தை இளவரசன் வாயிலாக அறிந்த சோழ வேந்தன், சிவகதையின் வரலாற்றுமுறை கூறும்படி சேக்கிழாரை வேண்டினுன். சேக்கிழார், "திருவாரூர்ப் பெருமான் அடியெடுத்துத் தரச், சுந்தரர் சிவனடியார்களைப் பற்றிப் பதினெரு பாடல்களைப் பாடியுள்ளார். அப் பாமாலை ***திருத்தொண்டத் தொகை*** எனப்படும். பிற்காலத்தில் வந்த நம்பியாண்டார் நம்பி என்பவர், பொல்லாப் பிள்ளையார் அருளால், திருத்தொண்டத்

---

1 *திருத்தொண்டர் புராண வரலாறு, செ. 98*

தொகையை விரித்துத் ***திருத்தொண்டர் திரு அந்தாதி*** என்று ஒரு சிறு நூல் பாடினர். உம்முடைய முன்னோராகிய[2] ***திருமுறை கண்ட இராசராச தேவரும்*** பிறரும் அந்நூலைப் பாராட்டினர்.'' என்றார். அதுகேட்ட அரசன் மகிழ்ந்து, அவ்வடியார் வரலாற்றைக் கூறும்படிவேண்டினான். சேக்கிழார் அடியார் வரலாறுகளைத் தாம் அறிந்த அளவு விரிவாகக் கூறினார். அவ் வரலாறுகளைக் கேட்டு மகிழ்ந்த மன்னன், அவற்றைப் பெரியதோர் காவியமாகப் பாடும்படி வேண்டினான்; அவருக்கு வேண்டிய ஆள் உதவியையும் பொருள் உதவியையும் தந்து அவரைத் தில்லைக்கு அனுப்பினான்.

''சேக்கிழார் தில்லையை அடைந்து, கூத்தப்பெருமான் திருமுன் நின்று, 'அடியேன் உம் அடியார் சிறப்பை எங்ஙனம் எடுத்து உரைப்பேன்! எனக்கு அடியெடுத்து உதவி அருள்க,' என்று வேண்டினார். அப்பொழுது '**உலகெலாம்**' என்ற சொல் சேக்கிழார் காதில்பட்டது. அவர் அதனையே தம் புராணத்திற்கு முதன்மொழியாகக்கொண்டு, பல நாட்கள் முயன்று, அடியார்களின் வரலாற்றைப் பெரிய புராணமாகப் பாடி முடித்தார். அநபாயன் பெருமகிழ்ச்சியோடு தில்லைத் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் சைவர் கூட்டத்தைக் கூட்டுவித்தான். சேக்கிழார் அப்பெருங் கூட்டத்தில் தமது பெருநூலை அரங்கேற்றம் செய்தார்; அரசனால் பெருஞ் சிறப்புப் பெற்றார்; 'தொண்டர் சீர்பரவுவார்' என்ற பட்டமும் பெற்றார்.

'' அநபாயன், பெரிய சிவ பக்தராகிய சேக்கிழாரைத் தன்கீழ் அமைச்சராய் இருக்கவிடாமல், அவர் தம்பியார் பாலறுவாயரை அமைச்சராக்கித் 'தொண்டைமான்' என்ற பட்டத்துடன் தொண்டைநாட்டை ஆளும்படி விடுத்தான். பின்பு சேக்கிழார் தில்லையில் தங்கிக் கூத்தப்பெருமானை வழிபட்டு முத்திபெற்றார். அவர் மரபினர் இன்றுவரையில் அரசியலில் உயர் அலுவலராய் இருந்து வருகின்றனர். எதிர்காலத்திலும் இருப்பர்.''

இவ்வரலாற்றில் பல செய்திகள் நம்பத்தக்கவையே. ஆயினும், சேக்கிழார், சீவகசிந்தாமணி 'சமணர் பொய்ந்நூல் என்று கூறினார்

---

2 - ஷ - , செ. 24.

என்பது பொருந்துவதாகத் தெரியவில்லை. சிந்தாமணி, சேக்கிழார் போன்ற பெரும்புலவர்கள் வெறுத்து ஒதுக்கத்தகும் கீழ்த்தரமான பெருங்காவியம் அன்று. மேலும் சேக்கிழாரே சிந்தாமணியை நன்குப் படித்தவர் என்பதற்குப் பெரிய புராணத்திலிருந்து பல சான்றுகள் காட்டலாம் எனவே, 'திருத்தொண்டர் புராண வரலாறு' என்னும் சிறு நூலைப் பாடிய ஆசிரியர், சிந்தாமணியின்மீது தாம் கொண்ட வெறுப்பைச் சேக்கிழார்மீது ஏற்றிக் கூறியிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும்.

இச் சிறுநூலைப் பாடிய ஆசிரியர், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தையே நன்கு படித்தவராகத் தெரியவில்லை. அவர், 'நாயன்மாருள் **முடிமன்னர்** அறுவர்' என்று கூறி, 'அவருள் இடங்கழியார் ஒருவர்' என்று கூறியுள்ளார்; '**குறுநிலமன்னர்** ஐவர்' எனக் கூறி, 'அவருள் காடவர்கோன் கழற்சிங்கன், ஐயடிகள் காடவர்கோன் என்பவர் இருவர்'[3] எனவும் கூறியுள்ளார்.

சேக்கிழார், இடங்கழியார் கொடும்பாளூரை ஆண்ட[4] ***சிற்றரசர்*** என்றும், கழற்சிங்கனும் ஐயடிகளும் பல்லவப்[5] **பேரரசர்** என்றும் தமது நூலில் தெளிவாகக் கூறியுள்ளார். திருத்தொண்டர் புராண ஆசிரியர் இச் செய்திகளைப் படித்தவராகவே தெரியவில்லை.

இங்ஙனமே இந்த ஆசிரியர் பாடிய 'திருமுறை கண்ட புராணம்' என்ற நூலிலும் சில தவறுகள் காணப்படுகின்றன. நம்பியாண்டார் நம்பி இராசராசன் காலத்தவர், (கி.பி. 985–1014). ஒன்பதாம் திருமுறையில் உள்ள சில பாடல்களைப் பாடிய வேணாட்டு அடிகள், சேதிராயர், பூந்துருத்திநம்பி, காடநம்பி ஆகியோர் பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[6]

---

3 திருத்தொண்டர் புராண வரலாறு, செ. 39
4 இடங்கழியார் புராணம், செ. 2, 3.
5 கழற்சிங்கர் புராணம், செ. 1 2; ஐயடிகள் புராணம், செ. 1, 27,
6 கே. ஏ. நீலகண்ட சாத்திரியார், சோழர் வரலாறு, தொகுதி 2, பதிகு 1, பக். 537-538; மு. இராகவையங்கார், சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 37; டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 72-74.

திருத்தொண்டர் புராண வரலாறும் திருமுறைகண்ட புராணமும் இயற்றியவர் சந்தான ஆசிரியருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் என்று பெரியபுராணப் பதிப்புக்களில் காணப்படுகின்றது.[7] சைவ சித்தாந்த நூல்கள் எட்டினைச் செய்த ஆச்சாரியரான உமாபதிசிவம், மேலே கூறப்பட்ட எளிய தவறுகளைச் செய்திருப்பார் என்று கூறுதல் அறமன்று. உமாபதி சிவத்திற்கு முன்போ, பின்போ வந்த சைவப் புலவர் ஒருவர் இச் சிறுநூல்கள் இரண்டையும் பாடினர் என்பது பொருத்தமாகும்.

சேக்கிழார் காலத்துச் சோழப் பேரரசனாகிய ***அநபாயன் யாவன்*** என்பதை அடுத்துக் காண்போம்.

அநபாயன்

சேக்கிழார் பெரியபுராணத்துள் தம் காலத்து அரசனைப் பத்து இடங்களில்[8] 'அநபாயன்' என்றே குறித்துள்ளார். இம் மன்னனைப் பற்றிக் கூத்தர் பாடிய உலா, பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி ஆகிய மூன்று நூல்களும் பெரியபுராணமும் கூறுவனவற்றைக் கீழே காண்க:

1. அநபாயன் பேரம்பலம் பொன் வேய்ந்தவன்.
2. இவன் சிறந்த சிவபக்தன்.
3. இவன் செங்கோல் அரசன்.
4. இவன் தில்லையில் பல திருப்பணிகள் செய்தவன்.
5. இவன் சிறந்த கொடையாளி.

இந்நூல்கள் அனைத்திலும் இவனுக்குக் கூறப்பட்டுள்ள பெயர்களுள் 'அநபாயன்' என்பதே மிகப் பல இடங்களில் காணப்படுகின்றது.[9] தண்டியலங்கார மேற்கோள் பாக்களில்

---

7 *பெரியபுராணம்—நாவலர் பதிப்பு; C. K சுப்பிரமணிய முதலியார் பதிப்பு.*

8 *பெரியபுராணம் சமாஜப் பதிப்பு, (1937), பக்கம் 2, 5, 13, 15, 62, 84, 182, 409, 589 & 631.*

9 *டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 20-21.*

எட்டுப் பாடல்கள்[10] அநபாயனைப் பற்றியே அமைந்துள்ளன. அவை அவனுடைய செங்கோன்மை, கொடைத்தன்மை ஆகிய வற்றைச் சிறப்பிக்கின்றன. இவற்றை நோக்க, சேக்கிழார் காலத்து அரசன் '**அநபாயன்**' என்ற பெயர் ஒன்றையே தனது சிறப்புப் பெயராகக் கொண்டவன் என்பது தெளிவாகத் தெரி கிறது.

இவன் பேரம்பலம் பொன் வேய்ந்தமை திருமாணிக்குழி, திருப்புறம்பயம், திருக்கோகரணம் கல்வெட்டுக்களில் குறிக்கப் பட்டுள்ளது. இவன் சிறந்த சிவபக்தன் என்பதை, 'அநபாயன், தில்லை நடராசர் திருவடித் தாமரையில் ஈப்போன்றவன் என்ற திருவாரூர் வடமொழிக் கல்வெட்டைக் கொண்டு அறியலாம். இவனது கோப்பெருந்தேவி 'புவனமுழுதுடையாள்' என்று இவனது உலா உரைக்கின்றது. இவளையே திருமழபாடிக் கல் வெட்டும் கூறுகின்றது. இவன் தில்லை–கோவிந்தராசர் சிலையை அப்புறப்படுத்தியவன் என்று இவனது உலா உரைக்கின்றது. திருஆவடுதுறைக் கல்வெட்டும் இச்செயலையே குறிக்கின்றது. இவனை 'அநபாயன்' என்றே திருவாரூர் வடமொழிக் கல் வெட்டும் குறிக்கின்றது. இவனுடைய அரசியல் அலுவலன் '**அநபாய மூவேந்த வேளான்**' எனப் பெயர்பெற்றான். இவன் காலத்தில் சில கோவில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் '**அநபாய** நல்லூர்' என்றும், '**அநபாய** மங்கலம்' என்றும் பெயர் பெற்றன.[11]

இந்த அநபாயன் ***இரண்டாம் குலோத்துங்கனே*** என்பது ஆராய்ச்சியாளர் பலரது முடிவாகும். இம் முடிவே பொருத்த மானது என்பது கீழ்வரும் கல்வெட்டுச் செய்தியாலும் வலி யுறுதல் காண்க. இரண்டாம் இராசராசன் காலத்துத் திருவானைக் காக் கல்வெட்டில், விக்கிரமசோழ நல்லூரிலும் அநபாய மங்கலத் திலும் இருந்த சில நிலங்கள் ஆனைக்காவுடைய மகாதேவர்க்கு விற்கப்பட்டன என்பது காணப்படுகிறது.[12] விக்கிரம சோழ

---

10 தண்டியலங்காரம், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் பதிப்பு (1926), பக். 1, 28, 81, 81, 93, 115, 152 & 184.

11 டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 23-24.

12 108 of 1937

னுக்கு (கி. பி. 1118—1135) மகன் இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133—1150). அக் குலோத்துங்கனுக்கு மகன் இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146-1173). ஆகவே, கல்வெட்டில் குறிக்கப்பட்ட விக்கிரம சோழ நல்லூர் என்பது, விக்கிரம சோழன் பெயர் கொண்டது. அதனை அடுத்துக் கூறப்பட்ட அநபாய மங்கலம் என்பது, அவ் விக்கிரம சோழனுக்குப் பின்பு பட்டம் பெற்ற இரண்டாம் குலோத்துங்கனின் பெயர் கொண்டது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது அல்லவா? எனவே, அநபாயன் என்பது இரண்டாம் குலோத்துங்கனது சிறப்புப் பெயரே என்பது தெளிவாகும்.

மேலே கூறப்பெற்ற இரண்டாம் இராசராசன் பெயரால் குடந்தைக்கு அண்மையில் அமைந்ததே ***இராசராசபுரம்*** என்பது. அவ்வூர் காலப்போக்கில் உருக்குலைந்தாற் போலவே அவ்வூரின் பெயராகிய 'இராசராசபுரம்' என்பதும் இன்று 'தாராசுரம்' என்று வழங்குகிறது. அவ்வூரில் இம் மன்னன் எடுப்பித்த பெரிய சிவன்கோயில் ஒன்று உள்ளது. அது சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. அங்குள்ள இறைவனது கருவறையின் நான்குபுறச் சுவர்களிலும் நாயன்மார் வரலாற்றுச் சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.[13] ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியே சுவரில் செதுக்கப்பட்டுள்ளது என்பதை நோக்க, இரண்டாம் இராசராசனது காலத்தில் எல்லா நாயன்மார் வரலாறுகளும் தெளிவாகத் தெரிந்திருந்தன என்னும் உண்மை ஐயமற விளங்குகின்றது. எல்லா நாயன்மார் வரலாறுகளையும் தெளிவாகக் கூறக்கூடிய முதல்நூல் திருத்தொண்டர் புராணம் எனப்பட்ட புராணமேயாகும். எனவே, இரண்டாம் இராசராசன் காலத்தில் பெரியபுராணத்தின் உதவி கொண்டே அச் சிற்பங்கள் செதுக்கப்பட்டன என்று கருதுதல் பொருத்தமாகும்.

மேலும், சேக்கிழார் அநபாயன் ஆட்சியில் ***இளவரசனிடமே*** சிவகதையைப்பற்றி முதலில் கூறினர் என்று திருத்தொண்டர் புராண வரலாறு தெரிவிக்கின்றது. அநபாயன் இரண்டாம்

---

13 A. R. E. *1920*, Part II, Plates I to VI

குலோத்துங்கனே என்பது மேலே கண்டோம். எனவே, அவன் காலத்து இளவரசன், அவனை அடுத்துப் பட்டம்பெற்ற **இரண்டாம் இராசராசனே** ஆவான். தன் தந்தையின் ஆட்சியில் பெரியபுராண அரங்கேற்றத்தை நேரில் கண்டுகளித்த இரண்டாம் இராசராசன், தனது ஆட்சியின்போதே எடுப்பித்த கோவிலில் நாயன்மார் வரலாற்றுச் சிற்பங்களைப் பொறிக்கச் செய்தமை பொருத்தமே அன்றோ ?

இரண்டாம் இராசராசனுக்குப் பின்பு இரண்டாம் இராசாதி ராசன் பட்டத்தை அடைந்தான். அவன் கி. பி. 1153 முதல் 1179 வரையில் அரசாண்டான். அவனது ஒன்பதாம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 1171) திருவொற்றியூரில் திருவிழா நடை பெற்றது. அவ்விழாவில் அவனுக்கு எதிரில் ***ஆளுடைநம்பி ஸ்ரீபுராணம் படிக்கப்பட்டது*** என்று திருவொற்றியூர்க் கல் வெட்டுத் தெரிவிக்கின்றது.[14]

'ஆளுடைய நம்பி' என்பது சுந்தரர் பெயர். எனவே, அவரைப் பற்றிய புராணமே திருவொற்றியூர்க் கோவிலில் படிக்கப்பட்டது என்பது தெரிகின்றது. அக்காலத்தில் நாம் அறிந்த வரையில் சுந்தரர் வரலாற்றைக் கூறத்தக்க நூல் பெரியபுராணம் ஒன்றே ஆகும். சுந்தரர் வரலாறு பெரிய புராணத்தில் முதலிலிருந்து கடைசி வரையில் ஆங்காங்குப் பரவி இருக்கின்றது. 'திருத் தொண்டர்' என்பது சுந்தரரையே குறிக்கின்றது ஆதலால் திருத் தொண்டர் புராணம் என்ற பெரிய புராணமே 'ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணமா'தல் வேண்டும். இங்ஙனம் எந்த முறையில் நின்று ஆராய்ச்சி செய்யினும், சேக்கிழார் காலத்து அரசன் அநபாயன் என்ற இரண்டாம் குலோத்துங்கனே என்பது வெள்ளிடை மலை போல் விளக்கமாகிறது.

சேக்கிழார் காலம்

சேக்கிழார் குடியினர் பலருடைய பெயர்கள், அரசர் பல ருடைய ஆட்சிக் காலங்களில் பல ஊர்களைச் சேர்ந்த கல்வெட்டுக் களில் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்வருமாறு கால முறைப்படுத்திக் கூறலாம் :

14 South Indian Inscriptions, Vol. 5. No. 1358.

	அரசன் பெயரும் ஆட்சிக் காலமும்	கல்வெட்டுள்ள இடம்	கல்வெட்டின் காலம்	செயல்
1	கண்டராதித்தர் (கி. பி. 949-957)	உடையார்குடி	கி. பி. 954	சேக்கிழான் அரையன் சங்கர நாராயணன் என்ற மணவிற்கோட்டத்து மேலைப் பழவூர்ச் சோழ முத்தரையன் நிலதானம் செய்தான் 585 of 1920
2	பரகேசரிவர்மன்	திருச்சோற்றுத் துறை	மூன்றாம் ஆண்டு	சேக்கிழான் சத்திமலையன் என்ற மேலூர்க் கோட்டத்துக் காவனூர்ச் சோழ முத்தரையன் விளக்குத் தானம் செய்தான். 183 of 1931
3	குலோத்துங்கன் I (கி பி. 1070-1120)	திருக்கழுக் குன்றம்	கி.பி. 1092	புரவுவரித் திணைக்களம் சேக்கிழார் ஆணைப்படி திருக் கழுக்குன்றத்திற்கு எல்லைகள் வகுக்கப்பட்டன. 180 of 1894
4	இராசராசன் II (கி.பி. 1146-1173)	திருமழபாடி	கி.பி. 1162	சயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்கச் சோழ வள நாடான புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராம தேவனை உத்தமசோழப் பல்லவராயன் திருமழ பாடி மகாதேவர்க்கு விளக்கு வைக்க 90 ஆடுகள் தந்தான். 95 of 1920
5	குலோத்துங்கன் III	திருஅரத்துறை	கி.பி. 1164	திருவரத்துறையிலிருந்து மாசி, வைகாசி காலங்களில் ஆளுடைய பிள்ளையார் திருமேனியைத் திருமாறன் பாடிக்கு எடுத்துச் செல்கையில் பூசை முதலியவற்றுக்

	அரசன் பெயரும் ஆட்சிக் காலமும்	கல்வெட்டுள்ள இடம்	கல்வெட்டின் காலம்	செயல்
				காகச் சேக்கிழான் பாலருவாயன் களப்பாளராயன் வரியிலியாக நிலதானம் செய்தான். 221 of 1919.
6	குலோத்துங்கன் III (கி.பி. 1178-1218)	கோட்டூர்	கி.பி. 1179	குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலருவாயன் களப்பாளராயன் விளக்கு எரிக்கப் பணம் தந்தான் 445 of 1912
7	,,	திருக்கடையூர்	கி.பி. 1181	குன்றத்தூர்ச் சேக்கிழான் அம்மையப்பன் பராந்தக தேவனை கரிகால சோழப் பல்லவராயன் நிலதானம் செய்தான், 39 of 1906
8	,,	குன்றத்தூர்	,,	சேக்கிழான் புவனப் பெருமாள் என்ற துண்டக நாடு உடையான் மனைவி திருநாகேச்சரம், கோவில் சபையாரிடம் விளக்கெரிக்கப் பணம் தந்தாள், 230 of 1930
9	இராசராசன் III	திருப்பாலைவனம்	கி.பி. 1225	குறன்த்தூர்ச் சேக்கிழான் பட்டியதேவன் ஆட்கொண்டான் விளக்கு எரிக்க ஆடுகள் தானம் செய்தான் 314 of 1929

	அரசன் பெயரும் ஆட்சிக் காலமும்	கல்வெட்டுள்ள இடம்	கல்வெட்டின் காலம்	செயல்
10	,,	திருப்பாசூர்	கி.பி. 1226	குன்றத்தூர்ச் சேக்கிழான் அரையன் ஆட்கொண்ட தேவன் என்ற முனையதரையன் விளக்கு எரிக்கப் பசுக்கள் அளித்தான். 136 of 1930.
11	,,	குன்றத்தூர்	கி.பி. 1140	குன்றத்தூர்ச் சேக்கிழான் வரந்தரு பெருமாள் என்ற திருவூரகப்பெருமாள் திருநாகேச்சரம் கோவிலில் விளக்கு வைக்கப் பணம் தந்தான். 218 of 1930.
12	மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி 1270-1305)	குன்றத்தூர்	கி.பி. 1300	குன்றத்தூர்ச் சேக்கிழான் ஆடவல்லான் என்பவன் திருநாகேச்சரர்க்கு நிலதானம் செய்தான். 208 of 1930.

நாம் இக் கல்வெட்டுச் செய்திகளால் கீழ்வருவனவற்றை அறியலாம் :

1. சேக்கிழார் குடியினர் தொண்டை மண்டலத்து மணவிற் கோட்டம், மேலூர்க் கோட்டம், புலியூர்க் கோட்டங்களில் வாழ்ந்து வந்தனர்.

2. அக்குடியினர் 'சோழ முத்தரையன்' 'உத்தம சோழப் பல்லவராயன்', 'களப்பாளராயன்', 'கரிகால சோழப் பல்லவ ராயன்', 'முனையதரையன்', என்ற பட்டங்களைப் பெற்றுச் சோழர் அரசியலில் சிறந்த பங்குகொண்டிருந்தனர்.

3. அங்ஙனம் அரசியலிற் பங்கு கொண்டவருள் குன்றத் தூர்ச் சேக்கிழார் மரபினரே பலர் ஆவர்.

4. இம் மரபினர், திருத்தொண்டர் புராண வரலாறுடையார் குறித்தபடி, சோழராட்சி முடியுமளவும் அதற்குப் பிறகும் அரசியற் பதவிகள் தாங்கியிருந்தனர்.

5. இம் மரபினர் சைவப் பற்றுடையவராய்ப் பல தளிகட்குத் தானம் செய்த பெருமக்களாவர். [15]

6. மேலே காட்டப்பெற்ற சேக்கிழார் குடியைச் சேர்ந்த பன்னிருவருள், எழுவர் குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினராய்க் காண்கின்றனர். அவரும், இரண்டாம் குலோத்துங்கன் காலமுதலே சோழ அரசியலில் சிறப்புப் பெறலாயினர் என்பனவாம்.

இரண்டாம் இராசராசனது 17-ஆம் ஆட்சியாண்டுத் திருமழபாடிக் கல்வெட்டிற் காணப்பெறும் 'குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனுன உத்தம சோழப் பல்லவராயன்' என்பவர் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் ஆகலாம்.

---

15 டாக்டர் மா. இராசமாணிக்கனுர், பெரிய புராண ஆராய்ச்சி, பக். 29-34.

இரண்டாம் குலோத்துங்கன் மகனுன இரண்டாம் இராசராசனது 17-ஆம் ஆட்சி ஆண்டில் உயிரோடு இருந்த இவரைப் பெரிய புராணம் பாடிய சேக்கிழாராகக் கொள்ளுதல் பொருத்தமேயாகும்.

சேக்கிழார் சிறந்த சிவபக்தர். அவர் பெரியபுராணம் பாடிச் சிறப்புப் பெற்ற பின்பு "**குன்றைமுனி** சேக்கிழார்" எனவும், "அண்டவாணர் அடியார்கள்தம்முடன் **அருந்தவந்தனில் இருந்தவர்**" எனவும் திருத்தொண்டர் புராண வரலாறு [16] அவரைக் கூறுகிறது. எனவே, கல்வெட்டில் கண்ட '**மாதேவடிகள்**' என்ற சிறப்பு பெயர், அவர் பெரியபுராணம் பாடிய பின்பு வழங்கப்பட்டது என்று கொள்ளுதலும் பொருத்தமாகும்.

திருத்தொண்டர் புராண வரலாற்று ஆசிரியர், சேக்கிழாரது இயற்பெயர் 'அருண்மொழித்தேவர்' என்று கூறியுள்ளார். கல்வெட்டில் '**இராமதேவன்**' என்னும் பெயர் காணப்படு கின்றது. சுந்தரரை வளர்த்த முனையதரையர் என்ற சிற்றரசர் '**நரசிங்கர்**' என்ற வைணவப் பெயரைப் பெற்றிருந்தார். ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பதிகங்களைப் பாடியுள்ள சிவ னடியார் **புருடோத்தம நம்பி** என்ற வைணவப் பெயரைப் பெற்றவர். பழுத்த சைவப்பற்றுடைய முதல் குலோத்துங்கன் மனைவியருள் ஒருத்தியின் பெயர் **சீராமன்** அருள்மொழிநங்கை[17] என்பது. இந்த இராமதேவன் மரபில் வந்த ஒருவன் **திருவூரகப் பெருமாள்** என்று பெயர் பெற்றிருந்தான் என்பது ஒரு கல் வெட்டால் தெரிகின்றது.[18] திருவூரகப் பெருமாள் என்பது குன்றத்தூரில் கோவில் கொண்டுள்ள திருமாலின் பெயராகும்.[19] மேலே கூறப்பெற்ற சான்றுகளை நோக்க, சைவமரபில் வந்த வர்க்கு வைணவப் பெயரும் இடப்பெறுதல் அக்கால வழக்கம் என்பது தெரிகிறது. குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினரருள் சிலர் **இன்றும்** வைணவப் பெயரினராய் உள்ளனர்.

---

16 செ, 84, 100
17 304 of 1907
18 218 of 1913
19 177 - 179 of 1930

உத்தமசோழப் பல்லவன் என்ற பட்டம் சேக்கிழார்க்கு அநபாயனால் வழங்கப்பட்டது என்பது திருத்தொண்டர் புராண வரலாற்று ஆசிரியரின் கூற்றாகும்.[20] இக் கல்வெட்டும் இச்சேக்கிழார்க்கு 'உத்தமசோழப் பல்லவராயன் என்ற பட்டம் இருந்ததைத் தெரிவிக்கின்றது.

சோழர் அரசியலில் பல துறைகள் இருந்தன. ஒவ்வொரு துறைக்கும் ஒரு தலைவன் இருந்தான். அத்தகைய தலைவர்களும், அமைச்சர்களும் 'மூவேந்த வேளான், காலிங்கராயன், கேரள ராசன், தொண்டைமான், வாணகோவரையன், பல்லவராயன், காடவராயன், கச்சிராயன், சேதிராயன், விழுப்பரையன்' முதலிய பட்டங்கள் அரசரால் வழங்கப்பெற்றனர்.[21] எனவே, முதலமைச்சராய் இருந்த சேக்கிழார், '***உத்தமசோழப் பல்லவராயன்***' என்ற பட்டம் வழங்கப்பெற்றனர் எனக் கொள்வது மிகவும் பொருத்தமேயாகும்.

மூன்றாம் குலோத்துங்கனது இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (கி. பி. (1179 இல்) ***குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறாவாயன் களப்பாளராயன்*** சோழநாட்டில் இருந்ததைக் குறிக்கின்றது. அப் பாலறாவாயர் பெரியபுராணம் பாடிய குன்றத்தூர்ச் சேக்கிழாருக்குத் தம்பியாக இருக்கலாம்.

சோழநாட்டுத் திருநாகேசுவரம் கோவிலில் சேக்கிழார், அவர் தம்பி பாலறாவாயர், அவர் தாயார் ஆகிய மூவர் உருவச் சிலைகளும் இன்றும் உள்ளன. இவை, சேக்கிழார் அமைச்சராய் இருந்தபொழுது, அத் திருநாகேசுவரம் கோவிலில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார் என்று திருத்தொண்டர் புராண வரலாறு கூறுவதை உறுதிப் படுத்துகின்றன என்னலாம். சேக்கிழார் அக் கோவிலைப் போன்றதொரு கோவிலைத் தம் குன்றத்தூரில் எடுப்பித்து, அதற்குந் 'திருநாகேசுவரம்' என்றே பெயரிட்டார் என்பது திருத்தொண்டர் புராண வரலாற்றுக் கூற்றாகும்.[22] குன்றத்தூரில் திருநாகேசுவரம் என்னும் கோயில் இன்றும் உள்ளது. அங்கு 44 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் பழமையானவை இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவையே. அக் கோவிலில்

---

20 செ. 18
21 சதாசிவ பண்டாரத்தார், முதற் குலோத்துங்கன், பக். 82.
22 செ. 19

சேக்கிழார்க்குத் தனிக்கோயில் அமைந்துள்ளது. அங்குச் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சிறப்பாய் நடைபெறுகிறது. திருநாகேசுவரம் என்ற கோயிலின் பெயர் இன்று அக் கோவிலுள்ள ஊரின் பகுதிக்கு வழங்கிவருகிறது. இவை அனைத்தும், சேக்கிழார் சோணாட்டுத் திருநாகேசுவரத்தை நினைவிற்கொண்டு, தமது ஊரில் ஒரு கோவிலைக் கட்டினார் என்று புராணம் கூறுவதை மெய்ப்பிக்கின்றன என்னலாம்.

பெரியபுராண ஆசிரியர் காலமுதல் சோழர் அரசியலில் குன்றத்தூர்ச் சேக்கிழார் மரபினர் சிறப்புற்று வந்தனர் என்று திருத்தொண்டர் புராண வரலாறு உரைக்கின்றது.[23] சேக்கிழாருக்குப் பின்பு அம் மரபினர் சோழப் பேரரசில் உயர்நிலையில் இருந்தனர் என்பதற்கு முன்பு கூறப்பெற்ற கல்வெட்டுச் செய்திகளே ஏற்ற சான்றாகும்.

முடிவுரை

நாம் இதுகாறும் செய்த ஆராய்ச்சியால், திருத்தொண்டர் புராண வரலாற்றில் கூறப்பட்டுள்ள சேக்கிழார் காலத்தையும், அவரைப் பற்றிய செய்திகளுட் பெரும்பாலன, கல்வெட்டுச் செய்திகளோடு ஒத்து வருகின்றன என்னும் உண்மையையும் கண்டோம். அடுத்து சுந்தரர் காலத்தைக் காண்போம் :

சுந்தரர் காலம் :

சுந்தரர், நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். அவர் தாம் முதன் முதலில் தம்மையும் சேர்த்துச் சிவனடியார் அறுபத்து மூவர் பெயர்களைத் திருத்தொண்டத் தொகையாகப் பாடினவர். எனவே, நாம் அவர் காலத்தைக் கண்டறிவோமாயின், நாயன்மார் அறுபத்து மூவரது இறுதிக்கால எல்லையை அறிந்தவராவோம். சுந்தரர் தம் காலத்தில் வாழ்ந்த பல்லவ அரசனைச் சிவனடியாருகக் கீழ்வருமாறு பாடியுள்ளார்.

"கடல் சூழ்ந்த உலகெல்லாங் ***காக்கின்ற பெருமான்***
காடவர்கோன் ***கழற்சிங்கன்*** அடியார்க்கும் அடியேன்"

'கழற்சிங்கன்' என்ற தொடரில் 'கழல்' என்பது அடைமொழி;

---

23 செ. 18-19

'சிங்கன்' என்பது இயற்பெயர். சிங்கன் என்ற இறுதிச் சொல்லுடன் பல்லவ மன்னர் இருவர் இருந்தனர். ஒருவன் ***நரசிங்கன்*** (கி. பி. 630—668); மற்றவன் ***நரசிங்கன்*** எனப்பட்ட ***இராச சிங்கன்*** (கி. பி. 685-720). இவருள் முதல்வன் காலத்தில் அப்பர் – சம்பந்தர் வாழ்ந்தனர். எனவே, சுந்தரர் இராசசிங்கன் காலத்தவராகவே இருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சி அறிஞர் சிலர் கருதுகின்றனர். [24]

'கழற்சிங்கன்' என்ற பெயர்கொண்ட பல்லவ மன்னன் ஒருவன் இருந்ததாக வரலாறு கூறவில்லை. நரசிங்கன் என்ற பெயர் கொண்ட இருவரே இருந்தனர். சுந்தரர் அவ்விருவருள் ஒருவரைக் குறித்தார் என்பது உண்மையாயின், அவர் அம் மன்னனை 'நரசிங்கன்' என்றே குறித்திருப்பார்.

இரண்டாம் நரசிங்கன் 'இராசசிங்கன்' என்று பெயர் பெற்றான். சுந்தரர் அவனை நரசிங்கன் அல்லது இராசசிங்கன் என்று குறிப்பிட்டிருக்கலாம். இவ்விருவகைப் பெயர்களையும் விட்டு அவனை 'கழற்சிங்கன்' என்று கூறினர் என்பது பொருத்தமாக தெரியவில்லை. 'நரசிங்கன்' என்பது மன்னன் பட்டம் பெற்ற போது வைத்துக்கொண்ட பெயர். அவனது இயற்பெயர் 'இராசசிங்கன்' என்னலாம். இவ்வாறே, கழற்சிங்கன் என்பதை இயற்பெயராகப் பெற்ற பல்லவ மன்னன் ஒருவனைச் சுந்தரர் தம் பாடலில் குறித்தார் என்று எண்ணுதல் பொருத்தமாகும்.

காடவர்கோன் கழற்சிங்கன் வரலாறு பெரிய புராணத்துள் பன்னிரண்டு பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது. கழற்சிங்கன் பல கோயில்களை வழிபட்டுக்கொண்டு திருவாரூரை அடைந்தான். மனைவியை அழைத்துக்கொண்டு அங்கிருந்த சிவன் கோயிலுக்குச் சென்றான். அவன் சிவபெருமானை வணங்கும்பொழுது, அரசி கோவில் திருச்சுற்றைப் பார்த்துக்கொண்டு நடந்தாள்; பூமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்தில் விழுந்துகிடந்த புது மலரை எடுத்து மோந்தாள். பூமாலை கட்டிக்கொண்டிருந்த

24 சதாசிவ பண்டாரத்தார்; தமிழ்ப் பொழில், தொகுதி 3, பக். 205-209; மு. இராகவையங்கார், ஆழ்வார்கள் காலநிலை 2, பக். 135-136.

செருத்துணை நாயனர் என்பவர் பூவினை முகர்ந்த அரசமாதேவி யின் மூக்கை வாளால் அறுத்துவிட்டார். இறைவனுக்கு மாலை கட்டுவதற்கு இருந்த மலர்களுள் ஒன்றை முகர்ந்த காரணத்தால், அடியார் தம் மனைவியின் மூக்கை அரிந்தாரென்பதை உணர்ந்த மன்னவன், மலரை எடுத்த அரசியின் வலக்கையையும் தன் வாளால் வெட்டி வீழ்த்தினுன் என்பது வரலாறு.

இவ்வரலாற்றில் இரண்டு நிகழ்ச்சிகள் கவனிக்கத் தக்கவை: கணவன் கோவிலில் சிவபெருமானை வணங்கும் பொழுது அவன் மனைவி உடனிருந்து வணங்காமை ஒன்று; கோவிலில் உள்ள மலரை மோத்தல் ஆகாது என்பதை அறியாமல் மலரை மோந்தமை மற்ருென்று. இவ்விரு குற்றங்களையும் செய்த அரசி எவளாக இருத்தல் கூடும்?

காஞ்சியில் கயிலாசநாதர் கோயிலை எடுப்பித்த இராச சிங்கன் மனைவியான ரங்கபதாகை என்பவள், கயிலாசநாதர் கோவிலுள் ஒரு சிறு கோவிலைக் கட்டியவள் ஆதலால் சிவநெறிச் செல்வியாவாள். அவள் மேலே கூறப்பெற்ற இரு தவறுகளையும் செய்திருத்தல் இயலாது. இராசசிங்கனுக்குப் பின்பு நாட்டை யாண்ட இரண்டாம் நந்திவர்மனும் அவன் மகனுன தந்திவர்ம னும் வைணவப் பற்று மிக்கவர். அவர்களுக்குப் பின்பு நாட்டை யாண்ட ***மூன்ரும் நந்திவர்மன்*** (கி. பி. 840–865) மிகச் சிறந்த சிவபக்தன் என்பது வேலூர்ப் பாளையப் பட்டயத்தாலும் பல கல் வெட்டுகளாலும் தெரிகிறது.[25] இவன் சிறந்த போர்வீரன்; தன் தந்தை காலத்தில் இரட்ட அரசனுல் கைப்பற்றப்பட்ட பல்லவ நாட்டின் வடமேற்குப் பகுதியைப் போரிட்டு வென்ருன். அப்பொழுது இரட்ட அரசனுயிருந்தவன் ***அமோகவர்ஷ நிருபதுங் கன்*** என்பவன். அவன் சிறந்த சமண பக்தன். அவன் நந்தி வர்மனது வீரத்தைப் பாராட்டித் தன் இரண்டாம் மகளான ***சங்கா*** என்பவளை நந்திவர்மனுக்கு மணம் செய்வித்தான். அப்பெரு மாட்டி சமண பக்தனின் மகள். அதனுற்ருன் அவள் கோவிலில் தன் கணவனுடனிருந்து சிவனை வழிபடவில்லை; கோவிலுள் கிடந்த மலரை முகர்தலாகாது என்பதை அறியாமல் முகர்ந்தாள்.

---

25 S. I. I. *2. 98*, S. I. I. *8. 309*, *197* of *1907*, *162* of *1938*, *27* of *1931*, *11* of *1899*, S. I. I. *3* p, *93*.

அவளது அறியாமையால் நடந்த செயலைக் கண்டு வேற்றுச் சமயத்தினளான அவளும் தண்டிக்கப்பட்டாள்.

கழற்சிங்கன் மாதேவி, "*உரை சிறந்து உயர்ந்தவள்*" என்பது சேக்கிழார் கூற்று.[26] நந்திவர்மன் பட்டத்து அரசியான சங்கா என்பவள் மகனே நந்திவர்மனுக்குப் பின்பு நாட்டை யாண்ட *நிருபதுங்கபல்லவன்* என்பவன். அவன் தான் விடுத்த பாகூர்ச் செப்பேடுகளில் தன் தாயின் சிறப்பியல்களைக் கீழ்வருமாறு கூறியுள்ளான்: "அரச மாதேவியான சங்கா என்பவள் சிறந்த பேரழகி; கலைகளில் வல்லவள்; குடிகட்குத் தாய்போன்றவள்; அரசனது நற்பேறே உருவெடுத்தாற் போன்றவள். இவள் இராஷ்டிரகூட அரச மரபினள்.[27]

இங்ஙனம் கழற்சிங்கன் மனைவி பற்றிய செய்திகள் பெரும்பாலும் மூன்றும் நந்திவர்மன் மனைவியான சங்கா என்பவளுக்கு ஒத்து வருவதாலும், சேரமான் பெருமாளது காலக்கணக்கு முதலிய வற்ருலும் கழற்சிங்கன் மூன்ரும் நந்திவர்மன் என்று கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது. இம் முடிவு பொருந்துமாயின், *சுந்தரர் காலம் மூன்ரும் நந்திவர்மன் காலமாகும்* (கி. பி. 840—865). இக்காலமே நாயன்மார் அறுபத்து மூவரது இறுதிக் கால எல்லையுமாகும்.

நம்பியாண்டார்நம்பி காலம்

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையைத் துணையாகக் கொண்டு, திருத்தொண்டர் திரு அந்தாதியைப் பாடிய நம்பியாண்டார்நம்பியின் காலத்தை அடுத்து ஆராய்வோம்:

'நம்பியாண்டார்நம்பி பொல்லாப் பிள்ளையாரிடம் பாடம் கேட்டவர்; அவர் காலத்தில் நாட்டையாண்ட சோழன் இராசராசன் தில்லையில் இருந்த சைவத் திருமுறைகள் எழுதப்பெற்ற ஏடுகளை எடுத்து நம்பியைக் கொண்டு முறைப்படுத்தினுன்', என்று திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது.

---

26 *கழற் சிங்க நாயனுர் புராணம், செ. 4*

27 Bahur Plates of Nirupatunga, Ep. Ind, Vol. 18; pp. 5-15.

நம்பியோ தம் நூல்களில் ஓரிடத்திலேனும் இவன் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆயினும் அவர் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் புகழ்ச் சோழரைச்,

“ ... ... *சிங்கள நாடு பொடிபடுத்த*
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன் ”

என்று கூறுதல் நோக்கத்தகும். இதனில் குறிப்பிட்ட சிங்கள நாடு பொடி படுத்தவன் எவனோ அவனே நம்பியின் காலத்தவன் ஆவன். புலவர் இவ்வாறு தம் பாடல்களில் தம் காலத்து அரசனை வைத்துப் பாடுதல் மரபு என்பதை, அதே புகழ்ச் சோழர் புராணத்தைப் பாடிய சேக்கிழாரும், அவரைச்

சென்னிநீ *டநபாயன்* திருக்குலத்து வழி முதலோர் ”

என்று கூறுவதனால் அறியலாம். ஆதித்தன் வழிவந்த பிற்காலச் சோழருள் சிங்கள நாட்டைப் பொடிபடுத்தியவன் ***முதலாம் இராசராசனுவான்.*** அவன் படைகள், சிங்கள நாட்டின் தலைநகரமான அநுராதபுரத்தை அழித்து விட்டன; வட இலங்கை முழுமையையும் கைப்பற்றின. பொலநருவா புதிய தலைநகரம் ஆக்கப்பட்டது. இராசராசன் மாதோட்டத்தில் பெரிய சிவன்கோயிலைக் கட்டி அதற்குத் தன் பெயரிட்டான்; மாதோட்டத்தை இராசராசபுரம் என்று அழைத்தான்; ஈழத்திற்கு மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிட்டான்; தஞ்சையில் தான் கட்டிய பெரிய கோவிலுக்குச் சிங்கள நாட்டிலிருந்து பணமும் இலுப்பைப் பாலும் கொண்டுவர ஏற்பாடு செய்தான்.[28]

இராசராசனுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களில், மிகச் சில சிவன் கோயில்களில் மட்டும் திருப்பதிகம் ஓதப்பட்டது என்னும் குறிப்புக் காணப்படுகின்றது. ஆயின், இராசராசன் காலத்திலும் அவனுக்குப் பின்பும் பல கோவில்களில் திருப்பதிகம் ஓதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்னும் உண்மையைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். இராசராசன் தஞ்சையில் எடுப்பித்த பெரிய கோவிலில் திருப்பதிகம் ஓதுவதற்கு 48 பேர் நிய

---

28 நீலகண்ட சாஸ்திரியார், சோழர் வரலாறு, பகுதி 1, பக். 206-207,

மனம் பெற்றனர். இராசராசனுக்கு முன்பு எந்தக் கோவிலிலும் இத்துணையர் நியமனம் பெறவில்லே. இவையனைத்தையும் நோக்க, இராசராசன் காலத்தில்தான் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளை முறைப்படுத்தினர் என்று கொள்வது மிகவும் பொருத்தமாகும். நம்பி இராசராசன் காலத்தவராகலாம் என்பதே வரலாற்ருசிரியரான ஸ்ரீ கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கருத்துமாகும்.[29]

அறுபத்துமூவர் காலம்

முன்பு சுந்தரர் காலம் (கி. பி. 840–865) என்பதைக் கண்டோம். அவர் அறுபத்து மூன்று நாயன்மாரையும் குறிப்பிட்டவராதலால், அவர் காலம் நாயன்மார் கால எல்லேயின் கீழ்ப்பகுதி என்னலாம். பிற நாயன்மாருள் வரலாற்றுத் துணையைக் கொண்டு காலம் கூறத்தக்க நிலேயிலிருப்பவர் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தருமே ஆவர்.

அவ்விருவர் காலமும் கண்டறியப்படின், அவர்களால் பாடப்பெற்றவரும் அவருக்கு முற்பட்டவருமான நாயன்மாரது கீழ்க் கால எல்லே விளங்கும்; சுந்தரரால் மட்டுமே குறிக்கப்பட்டு அவருக்கு முற்படவிருந்த நாயன்மார் காலமும் தெளிவாகும்.

"முதலில் சமண அரசனுக இருந்து அப்பர்க்குத் தீங்கிழைத்துப் பின்பு சைவனுன பல்லவ அரசன் தன் பெயரால் *குணதர ஈச்சரம்* கட்டினுன்" என்று சேக்கிழார் கூறுகிருர்.[30] 'குணபரன்' என்ற பெயர்கொண்ட பல்லவன் முதலாம் மகேந்திர வர்மனே ஆவன். இப்பெயர் பெரியபுராண ஏடெழுதுவோர் குறையால் 'குணதரன்' என்று எழுதப்பெற்று விட்டதுபோலும்! இவனைக் '*குணபரன்*' என்றே வல்லம், திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுக்கள் [31] குறிக்கின்றன. இவன் எடுத்த குணபர ஈச்சரம் திருவதிகையில் இருக்கிறது.[32] மகேந்திரனது திருச்சி மலேயில் உள்ள

29 *ஷை, பக், 637.*
30 *திருநாவுக்கரசர் புராணம், செ. 146*
31 S. I. I. I. 33 and 34, S. I. I. II. 72
32 C. K. S. *பெரியபுராணம், பகுதி 3, பக். 171.*

குகைக்கோவில் கல்வெட்டு, இவன் சைவனாக மாறியதைத் தெளிவாகக் குறிக்கின்றது காண்க :

"*குணபரன்* என்ற அரசன் லிங்கத்தை வழிபடுபவன். விபத்திமார்க்கத்திலிருந்து (தீநெறியினின்று) குணபரனைத் திருப்பிய பேரறிவு, இந்த லிங்கத்தின் அருளால் இவ்வுலகில் நீண்ட காலம் பரவியிருக்கட்டும்." [33]

இக் கல்வெட்டுச் சான்றுகளையும் அப்பர் வரலாற்றையும் ஆராயின், அப்பர் மகேந்திரவர்மன் காலத்தவர் என்பது தெளிவாகிறது. மகேந்திரன் காலம் கி. பி. 615–630. [33a]

சம்பந்தரும் அப்பரும் ஒரே காலத்தவர் என்பது, சேக்கிழார் பெரிய புராணத்தால் அறியப்படும் உண்மையாகும். சம்பந்தர் தமது தேவாரத்தில் திருச்செங்காட்டங்குடியில் வாழ்ந்த சிறுத்தொண்டரை 11-பாக்களில் புகழ்ந்துள்ளார். [34] அவற்றுள், (1) '*சீர்* (புகழ்) *உலாம்* சிறுத்தொண்டன்' எனவும், (2) ***செருவடிதோள்*** சிறுத்தொண்டன்' [35] எனவும் வரும் தொடர்களால், சிறுத்தொண்டர் ***போரிற் புகழ்பெற்றவர்*** என்பது குறிப்பாகப் பெறப்படுகின்றது. இதற்கு ஏற்பப் பெரிய புராணம், 'இவர், தம் மன்னன் சார்பாகத் தண்டுடன் சென்று பழைய நகரமான *வாதாபி*யைத் தூளாக்கினர் [36] என்று கூறுகிறது. இங்ஙனம் வாதாபியைத் தூளாக்கி அங்குத் தூண் நாட்டிய பல்லவன் மேற்சொன்ன மகேந்திரன் மகனான முதலாம் ***நரசிம்மவர்மன்*** என்று வேலூர்ப் பாளையப்பட்டயம் பகர்கின்றது. [37] வாதாபி ஏறத்தாழ 13 ஆண்டுகள் சாளுக்கியர் ஆட்சியில் இல்லை என்பதையும், நரசிம்மவர்மன் வெற்றித்தூண் அங்கு இருப்பதையும் நோக்கச் [38] சேக்கிழார் குறித்தபடி ***அத் 'தொன்னகரம் அழிக்கப்பட்டது'*** என்பது நன்கு புலனாகிறது. இச் செய்தியை இவ்வளவு நுட்பமாகக்

---

33 S I I, I. 33

33a Dr. N. Venkataramanayya, Article on Mahendravarman.

34 *சம்பந்தர் தேவாரம் செங்காட்டங்குடிப் பதிகம் "பைங்கோட்டு"*

35 *ஷை, செ. 5, 7*

36 *சிறுத்தொண்டர் புராணம், செ. 6*

37 S. I. I. II 98

38 Ind. Antiquary Vol. 9, p. 1, 50

கூறும் சேக்கிழார், அவ் வாதாபிப் படையெடுப்பில் தலைமை தாங்கிய தானைத் தலைவர் ***பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர்*** என்று கூறுதலால், சிறுத்தொண்டர் நரசிம்மவர்மன் காலத்தவர் என்பது நன்கு விளங்குகிறது. அவர் ஓய்வுபெற்ற பிறகு செங்காட்டங்குடி அடைந்து சிவத்தொண்டில் ஈடுபட்டிருந்தார் என்பதும், அக்காலத்தேதான் சம்பந்தர் அவரைச் செங்காட்டங்குடியிற் சந்தித்தார் என்பதும் பெரியபுராணத்தால் விளக்கமாகும். விளங்கவே, சம்பந்தர் சிறுத்தொண்டரைச் சந்தித்த காலம் ஏறத்தாழ வாதாபிப் போருக்குப் (கி. பி. 642-க்கு) பின்னர் என்னலாம். சம்பந்தரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்ட ***மாறவர்மன் அரிகேசரி*** என்ற ***நெடுமாறன்*** காலம் கி. பி. 640–670 என்பர் ஆராய்ச்சியாளர்.[39] எனவே, இவ்விரண்டு பேரரசர் காலங்களில் வாழ்ந்தவர் சம்பந்தர் என்பது உறுதிப்படுகின்றது ''[40]

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய இவ்விருவராலும் பாடப்பெற்ற நாயன்மார் பலராவர். அவருள் இவ்விருவர் காலத்தவர் யாவர் என்பதைப் பெரியபுராணவுதவிகொண்டு அறியலாம். எஞ்சியவர் இவ்விருவருக்கும் முற்பட்ட காலத்தவர். அவர் – (1) கோச்செங்கணான், (2) சண்டீசர், (3) கண்ணப்பர், (4) சாக்கியர், (5) கணம் புல்லர், (6) அமர் நீதியார், (7) அரிவாள் தாயர், (8) நமிநந்தி, (9) தண்டியடிகள், (10) புகழ்த்துணையார் என்பவர். இவருள் கோச்செங்கணான் காலம் ஏறத்தாழக் கி. பி. 450 – 500 என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.[41]

இன்றுள்ள சங்க நூல்களில் எந்த நாயன்மார் பெயரும் காணப்படவில்லை. எனவே, சங்க காலத்திற்குப் பிற்பட்டதே நாயன்மார் காலம் என்னலாம். சங்க காலத்தின் இறுதிப் பகுதி

---

39 T. V. *சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 40 & 44*

40 *டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி பக், 72 - 82.*

41 *எஸ் வையாபுரிப் பிள்ளை, திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும், பக். 10, 11 & 75; டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரிய புராண ஆராய்ச்சி, பக். 86 94.*

யில் ஏறத்தாழக் கி. பி. 300 இல் பல்லவர் காஞ்சியைப் பிடித்து ஆளத் தொடங்கினர். ஏறத்தாழ அக் காலத்தில் ***களப்பிரர்*** என்ற வேற்று நாட்டுக் கூட்டத்தினர் தமிழகத்தைக் கைப்பற் றினர். அவர் தம் தலைவரே பின்பு ***கூற்றுவ நாயனர்*** எனப் பெயர் பெற்றவர் என்னலாம். களப்பிரரது குழப்ப காலத்தில் மதுரையில் வாழ்ந்தவர் ***மூர்த்தி நாயனர்*** என்பவர். ஐயடிகள் காடவர்கோன் என்ற பல்லவர் கி. பி. 6-ஆம் நூற்றுண்டினர். திருமூலர் காலம் கி. பி. 4 அல்லது 5-ஆம் நூற்றுண்டு என்பர் ஆராய்ச்சியாளர். இவர் அனைவரும் கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அப்பருக்கும் சம்பந்தருக்கும் முற்பட்டவர் ஆவர். சங்கத்தின் இறுதிக் காலம் நாயன்மார் காலத்தின் தொடக்க மாகக் கொள்ளலாம். எனவே, நாயன்மார் காலம் ஏறத்தாழக் கி. பி. 300 – 865 என்னலாம்.

இதுவரையிற் கண்ட முடிவுகள்

நாம் இதுவரையில் கண்ட காலங்களை முறைப்படுத்திக் கீழ் வருமாறு கூறலாம்.

1.	நாயன்மார் அறுபத்து மூவர்	காலம் கி. பி.	300 – 865
2.	சுந்தரர்	காலம் கி. பி.	840 – 865
3.	நம்பிகள்	காலம் கி. பி.	985 – 1014
4.	சேக்கிழார்	காலம் கி. பி.	1133 – 1162

மேற்கண்ட காலங்கள் சில உண்மைகளை உணர்த்துகின் றன. அவை — (1) நாயன்மார் அறுபத்துமூவரது பரந்துபட்ட காலம் ஏறத்தாழ 550 ஆண்டுகளைக் கொண்டது, (2) நம்பி, சுந்தரருக்கு ஏறத்தாழ 120 ஆண்டுகள் பிற்பட்டவர், (3) சேக் கிழார், நம்பிக்கு ஏறத்தாழ 120 ஆண்டுகள் பிற்பட்டவர் என்பன வாகும். சேக்கிழார் சுந்தரர்க்கு ஏறத்தாழ 240 ஆண்டுகள் பிற்பட்டவரென்னலாம்.

சுந்தரர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் பதின்மூவர். எனவே, எஞ்சிய 50 நாயன்மாரைச் சுந்தரரும் நேரில் கண்டவ ரல்லர். சேக்கிழார் அறுபத்துமூவர் காலத்தவர் அல்லர். அந் நாயன்மார் வரலாறுகளை விளக்கமாகக் கூறும் முதல் நூல்களும்

இல்லை. "நாயன்மார் பெயர்களைக் கூறும் அளவில் சுந்தரர் பாடிய தொகையும், அதனினும் ஓரளவு விளக்கம் பெற்ற நம்பி செய்த அந்தாதியும், மூவர் அருளிய திருமுறைகளும், செவிவழி வரலாறுகளுமே அவர்க்குச் சிறப்புடை மூலங்களாகும். மூவர் பாக்களில் நாயன்மார் சிலருடைய சிவப்பணிகள் பாராட்டப் பட்டுள்ளனவேதவிர, அவர் தம் நாடு, ஊர், மரபு முதலியன தெளிவாக உணருமாறு இல்லை. நாயன்மாருள் அப்பர் – சம்பந் தர்க்கு முற்பட்டார் பலர்; சுந்தரர்க்கு முற்பட்டார் மிகப்பலர். இந்த நிலையில், தாம்தாம் கேள்வியுற்ற அளவே அந் நாயன்மார் வரலாறுகள் மூவராலும் குறிக்கப்பெற்றன. அந்தாதி பாடிய நம்பி நிலை பின்னும் இரங்கத்தக்கதாகும். அவர் சுந்தரர்க்கு ஏறத்தாழ 120 ஆண்டுகள் பிற்பட்டவர். ஆதலின் அவர் மூவர் தேவாரம், தொகை, தம் காலத்து வழங்கிய கதைகள் இவற்றை உளங்கொண்டு, தம்மால் முடிந்தவரை திருத்தொண்டர் திரு அந்தாதி பாடிமுடித்தார். இங்ஙனம் வந்த மூலங்களைக் கொண்டு, நம்பிக்கு ஏறத்தாழ 120 ஆண்டுகட்குப் பின் வந்த நம் சேக்கிழார் பெருமான், பெரியதோர் காவியம் பாடுவதெனின், அஃது எளிதில் இயலும் செயலாமோ? [42]

சேக்கிழார் ஆராய்ச்சி

சேக்கிழார் சோழப் பேரரசின் முதலமைச்சர் ஆதலால் அர சியற் கண்கொண்டு, நாயன்மார்களைப் பற்றிச் சுந்தரரும் நம்பி யும் தந்துள்ள குறிப்புக்களை ஆராய்ந்தார். கீழ்வரும் விவரங் களைக் கண்டார். நாயன்மார் அறுபத்து மூவருள்,

1. சேரர் ஒருவர் — சேரமான் பெருமாள்
2. சோழர் இருவர் — (1) கோச்செங்கணான் (2) புகழ்ச்சோழர்
3. பாண்டியர் ஒருவர் — நெடுமாறன்
4. அவர் மனைவியார் — சோழன் மகளாரான மங்கையர்க் கரசியார்

---

42 *டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரிய புராண ஆராய்ச்சி, பக். 195*

5. பல்லவர் இருவர் — (1) ஐயடிகள் காடவர்கோன் (2) கழற் சிங்கர்

6. களப்பிரர் ஒருவர் — கூற்றுவ நாயனுர்.

7. சிற்றரசர் நால்வர் — (1) திருக்கோவலூரையாண்ட மெய்ப் பொருள் நாயனுர், (2) கொடும்பாளூரை யாண்ட இடங் கழியார், (3) திருமுனைப்பாடி நாட்டையாண்ட நரசிங்க முனையரையர், (4) மிழலை நாட்டையாண்ட பெருமிழலைக் குறும்பர்.

8. பல்லவர் படைத்தலைவர் — பரஞ்சோதியார் என்ற சிறுத் தொண்டர்.

9. சோழர் படைத்தலைவர் மூவர் — (1) கோட்புலியார், (2) கலிக் காமர், (3) மானக்கஞ்சாறர்.

10. பாண்டியர் அமைச்சர் — குலச்சிறையார்.

சேக்கிழார் பொறுப்புணர்ச்சி

இங்ஙனம் 63 நாயன்மாருள் அரசியல் தொடர்புடையார் 17 பேர் ஆவர். இந் நாயன்மாரைப் பற்றித் தொகை – அந்தாதி – தேவாரம் இவற்றிற் கிடைத்த குறிப்புக்கள் இவர்தம் வரலாறு களை முழுமையும் கூறப் போதியன அல்ல. ஆதலின், சேக்கிழார் பல புதிய குறிப்புக்களைத் தேடவேண்டியவரானுர். அவர் பிற நாயன்மார் வரலாற்று உண்மைகளையும் ஆராயப் புகுந்த பொழுது, கீழ்வரும் புதிய அரசர்களைப் பற்றியும் அறிய வேண்டி யவரானுர்.

1. அப்பர் வரலாற்றிற் குறிக்கப்படும் மகேந்திரவர்மன் என்ற பல்லவன்.

2. பூசலார் வரலாற்றிற் குறிக்கப்படும் இராசசிங்கன் என்ற பல்லவன்.

3. தண்டியார் வரலாற்றிற் குறிக்கப்படும் சோழ அரசன்.

4. அப்பர் — குங்குலியக் கலயர் வரலாறுகளிற் குறிக்கப் படும் சோழ அரசன்.

5. சுந்தரர் காலத்தில் பாண்டியனுடன் இருந்த சோழ அரசன்.

தமக்குமுன் ஏறத்தாழ 240 ஆண்டு முதல் 800 ஆண்டு வரை (550 வருட காலம்) உள்ள பரந்துபட்ட காலத்தில் வாழ்ந்த

நாயன்மார் வரலாறுகளைக் கூறவேண்டிய நிலைமையுண்டான தால், ***பொறுப்புணர்ச்சியுடைய*** அப்பெரும் புலவர், தமக்கு முற்பட எழுந்த மூல நூல்களை ஆராயத் தொடங்கினர்; அதன் பயனாக (1) முந் நூற்களில் குறிப்பிடப் பெறாத பல ***புதிய செய்திகளைக்*** கூறியுள்ளார்; (2) முந் நூற்கள் குறிப்பாகக் கூறியவற்றைத் தெளிவாக *விளக்கியுள்ளார்*; (3) முந் நூற்கள் குறித்த சிலவற்றை ***மாற்றிக் கூறியுள்ளார்***. இனி இவற்றை ஒவ்வொன்றாகக் கீழே காண்க :

1. சேக்கிழார் குறித்த புதிய செய்திகளுட் குறிக்கத் தக்கவை :

(1) நரசிங்க முனையரையர் சுந்தரரை மைந்தராக ஏற்று வளர்த்தமை.

(2) மூர்த்தியார் காலத்துப் பாண்டி நாட்டுக் குழப்பம், அவர் அரசராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற முறை.

(3) அப்பர் வரலாற்றில் – குணபரன் சைவனானமை – அவன் சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்தமை – குணபர ஈசுவரம் கட்டினமை.

(4) பழையாறையில் அப்பரது உண்ணாவிரதம் – சோழ அரசன் இடையீடு.

(5) அப்பூதியார் மகன் இறந்தமை – அவனை அப்பர் எழுப்பினமை.

(6) சமணர்க்கும் தண்டியடிகட்கும் நடந்த விவாதத்தில் சோழ அரசன் இருந்து கடனாற்றினமை.

(7) சிறுத்தொண்டர் பல்லவன் படைத்தலைவராய் இருந்து வாதாபியை அழித்தமை.

(8) சேரமான் பெருமாள் முதன் முதல் சுந்தரரைச் சந்தித்த வரலாறு.

(9) ஐயடிகள் வெண்பாப் பாடுதற்கு முற்பட்ட வரலாறு.

(10) கழற்சிங்கன் வடபுலப் போர் – கோவில் தொண்டு செய்தமை.

(11) கோட்புலியார் போர்மீது சென்ற விவரம்,

(12) கற்றளி கட்டிய காடவர்கோன் கனவு – அவன் பூசலாரைச் சந்தித்தமை.

(13) சுந்தரரும் நம்பியும் கூறுதுவிட்ட நாயன்மார் வாழ்ந்த பதிகள் – அப்பதிகளைக் கொண்ட நாடுகள் – அவ்விருவரும் குறியாதுவிட்ட நாயன்மார் மரபுகள் முதலியன.

2. சேக்கிழாரால் விளக்கப்பட்ட குறிப்புக்கள் :

(1) திருநீலகண்டர் இளமை துறந்த வரலாறு.

(2) மெய்ப்பொருள் நாயனுர் பொய்த் தவ வேடங்கொண்ட பகைவனுல் ஏமாற்றிக் குத்தப்பட்டமை.

(3) சுந்தரர் – பரவையார் திருமணம்; விறல்மிண்டர் இடையீட்டால் திருத்தொண்டத் தொகை பாடினமை.

(4) நந்தனுர் முனிவராதற்கு முன்பு செய்த தொண்டுகள்.

(5) சாக்கியர் காஞ்சியில் சிவனை வழிபட்டு முத்தி அடைந்தமை.

(6) கூற்றுவ நாயனுர் சிவனுடைய திருவடியையே முடியாகக் கொண்டமைக்கு உரிய காரணம்.

(7) நெல்வேலிப் போர்.

(8) போதி மங்கையில் நடந்த சைவ – பௌத்த வாதம்.

3. சேக்கிழார் மாற்றிக் கூறியவை :

(1) அமர்நீதி நாயனுரும் அவர் மனைவியாரும் அடியாரது கோவணத்துணிக்கு ஈடாகத் துலைபுக்கனர் என்று நம்பி குறித்தனர்; ஆயின், சேக்கிழார் அமர்நீதி நாயனுர், அவரது மனைவியார், அவர்கள் மகனுன சிறுவன் ஆக மூவரும் துலைபுக்கனர் என்று கூறியுள்ளார்.

(2) சம்பந்தர் விடமேறிய பெண்ணை எழுப்பினுர் என்று நம்பி குறித்தார்; ஆயின், சேக்கிழார் எலும்பைப் பெண்ணுக்கியதாகக் குறித்துள்ளார்.

(3) மூர்க்க நாயனுர் ‘ திருவேற்காட்டூர் மன்னர் ’ என்று நம்பி குறித்தார்; சேக்கிழார் அவரை ‘ வேளாண் குல முதல்வர் ’ என்றனர்,

(4) சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரே 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பது நம்பி கூற்று. 'சங்கப் புலவர்' என்ற தொடரே சேக்கிழார் காட்டவில்லை. அவர் கூற்றை உற்றுநோக்கின், பொய்யடிமை இல்லாத புலவர் *ஒருவரோ* என்று ஐயுற வேண்டுவதாகவுள்ளது.

(5) காரியார் சிவனைப் பாடிக் கயிலை புக்கவர் என்பது நம்பி கூற்று. அவர் மூவேந்தர்மீது கோவை பாடிப் பெற்ற பொருளைக்கொண்டு சிவன் கோவில் கட்டி முத்தி பெற்றவர் என்பது சேக்கிழார் கூற்று.

(6) சுந்தரர் செருத்துணை நாயனுரைத் 'தஞ்சை மன்னவன்' என்று குறித்தார்; சேக்கிழார் அவரை, 'வேளாண்குல முதல்வர்' என்று மாற்றிக் கூறியுள்ளனர்.

சேக்கிழார் இங்ஙனம் கூறிய புதிய செய்திகளும் விளக்கிய குறிப்புகளும் மாற்றிக் கூறியவையும் அவருக்குக் கிடைத்த புதிய மூலங்களைப் பொறுத்தவையாகும். அப்புதிய மூலங்கள் யாவை என இங்குக் காண்போம் :

பெரிய புராணத்திற்குரிய மூலங்கள்

தமிழர் அல்லாத பல்லவர் என்ற புதிய மரபினர் ஏறத்தாழக் கி. பி. 300 முதல் 900 வரையில் தமிழகத்தில் பேரரசராய் இருந்தனர். அவர்கள் நாடாண்ட காலமே நாயன்மார் அறுபத்து மூவரும் வாழ்ந்த காலமாகும். ஏறத்தாழக் கி. பி. 900 முதல் சேக்கிழார் காலம்வரையில் தமிழகத்தைச் சோழப் பேரரசர் ஆண்டு வந்தனர். எனவே, கி. பி. 300 முதல் சேக்கிழார் காலமாகிய 12-ஆம் நூற்றுண்டு வரையில் (கி. பி. 1113-1162 வரையில்) பொதுவாகச் சைவ சமயமும், சிறப்பாக நாயன்மார் வழிபாடும் பிறவும் எங்ஙனம் வளர்ச்சியுற்றன என்பதைக் காண்பது நல்லது. இந்த வளர்ச்சியே பெரிய புராணத்திற்கு அமைந்த மூலங்களுள் குறிப்பிடத் தக்கதாகும்.

பல்லவர் காலச் சைவம்

பொதுவாகப் பல்லவராட்சி கி. பி. 300 இல் தொடங்கினுலும், அவர்கள் காஞ்சியில் நிலைத்து ஆளத் தொடங்கிய காலம் கி. பி.

575 லிருந்துதான் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. அவ்வாறே பாண்டியரும் ஏறத்தாழ அதே காலத்திலிருந்துதான் பாண்டிய நாட்டை ஆளத் தொடங்கினரெனலாம். எனவே, கி. பி. 300 முதல் 575 வரையில் களப்பிரர் ஆட்சியில் தமிழகம் இருந்தது — கோச்செங்கணன் போன்ற அரசர் சிலர் ஆட்சியிலும் இருந்தது – தமிழரசர்க்கும், களப்பிரர்க்கும், தமிழரசர்க்கும் பல்லவர்க்கும் போர்கள் நடைபெற்றன. சுருங்கக் கூறின், அந்த மூன்று நூற்ருண்டுகளும் தென்னிந்திய வரலாற்றில் ***இருண்ட காலம்*** என்னலாம். அக்காலத்திற்ருன் கூற்றுவ நாயனர், கோச்செங்கட் சோழன், ஐயடிகள் காடவர்கோன், புகழ்ச்சோழ நாயனர், மூர்த்தி நாயனர், திருமூலர் முதலிய சிவனடியார் சிறப்புடன் வாழ்ந்தனர் என்னலாம்.

பல்லவர் காலக் கோவில்கள் : திருநாவுக்கரசர் பாடிய தலங்கள் ஏறக்குறைய 126; சம்பந்தர் பாடியவை ஏறத்தாழ 219. இவை அன்றி வைப்புத் தலங்களாகக் குறிக்கப் பெற்றவை பல வாகும். இவற்றை நோக்க, நாயன்மார் காலத்தில் இத் தமிழ் நாட்டில் ஏறத்தாழ 300 சிவன் கோவில்கள் இருந்தன என்று கூற லாம். இக்கோவில்களுள் பெரியவை சில; சிறியவை பல. பெரிய கோவில்களில் இசையும் நடனமும் வழக்கிலிருந்தன. பல கோவில்களில் விழாக்கள் நடைபெற்றன. நாயன்மார் பிறந்து தொண்டு செய்து மறைந்த ஊர்க் கோவில்களில் அவர்கள் திரு வுருங்கள் வைத்து வழிபடப்பட்டன என்று கூறலாம். கோவிலில் ஸ்ரீ பண்டாரமும் இருந்தது. திருவல்லம் சிவன் கோவிலில் திருப் பதிகங்கள் ஓதப்பெற்றன என்று கல்வெட்டுக் கூறுகிறது.

நாயன்மார் திருமேனிகள் : திருவாரூரில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில், சுந்தரர் ஒவ்வொரு நாயனரையும் தரிசித்துத் தனித்தனியே ‘ அடியேன், அடியேன் ’ என்று குறிப்பிட்டுத் திருத் தொண்டத் தொகை பாடினர் என்று பெரிய புராணம் கூறுவதை ஆழ்ந்து நோக்கின், சுந்தரர் காலத்தில் வாழ்ந்த பதின்மூன்று நாயன்மார் உயிரோடு அங்கு இருந்தனர் என்றும், ஏனையோர் திருவுருவங்கள் அங்கு எழுந்தருளப் பெற்றன என்றும் கொள் வதே ஏற்புடையது. ஒவ்வொரு திருவுருவமும் இன்னவரைக் குறிப்பது என்று தெளிவாக அறியப்பட்டமையால்தான், சுந்தரர்

ஒவ்வொருவர் பெயரையும் குறிப்பிட்டு எளிதில் திருத்தொண்டத் தொகையைப் பாடினுர் என்று கருதுதல் தகும்.

பல்லவரும் சைவமும் : பல்லவர் சைவத்தையும் வைணவத் தையும் சிறப்பாக ஆதரித்தனர். அவர்கள் குடைவரைக் கோயில் களைக் கட்டினர்; ஒற்றைக் கற்கோவில்களை அமைத்தனர்; பின்பு பெரிய கற்றளிகளை எடுப்பித்தனர். அவ்வேந்தர் பாடல்பெற்ற கோவில்கள் சிலவற்றிற்கு அறம் செய்துள்ளனர். மூன்றும் நந்தி வர்மன் என்ற கழற்சிங்கன் திருநெய்த்தானம், திருவல்லம், திருக்கடைமுடி, திருப்பராய்த்துறை முதலிய ஊர்க் கோயில் கட்குப் பொருளுதவி செய்தான் என்று கல்வெட்டுகள் தெரிவிக் கின்றன. [43] சில கோவில்களில் ஆட்சிக்குழு இருந்தது. பல கோவில்கள் ஊரவையார் பாதுகாப்பில் இருந்தன. கோவிலை அடுத்து மடங்களும் இருந்தன.

சோழர்காலச் சைவ சமயம்

சோழர் சிவப்பணிகள் : பல்லவர்க்குப் பின்பு தமிழகத்தை ஆண்ட சோழப் பேரரசருள் முதல்வனுன ஆதித்த சோழன், காவிரியாறு பிறக்கும் இடத்திலிருந்து அது கடலொடு கலக்கும் இடம்வரையில் காவிரியின் இரண்டு கரைகளிலும் இருந்த கோவில் களைக் கற்றளிகள் ஆக்கினுன் என்று அன்பில் பட்டயம் அறை கின்றது. [44] இவன் மகனுன முதற் பராந்தகன் தில்லைச் சிற்றம் பலத்தைப் பொன்வேய்ந்தான், [45] பல புதிய கோவில்களையும் எடுப்பித்தான்.

சிறந்த சிவபக்தனுன முதலாம் இராசராசன் மிக முயன்று எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோவிலில் அவனும் அவன் மனைவி மாரும் செய்த திருப்பணிகள் பலவாகும். அவ் வேந்தன் அக் கோவிலில் நாற்பத்தெட்டு ஓதுவார்களை அமர்த்தித் திருப்பதிகம் ஓதச் செய்தான். அவன் எடுப்பித்த கோவில்கள் பலவாகும்.

---

43 52 of 1895, S. I. I. III p. 93; 283 of 1901, 180 of 1907.
44 Anbil plates of Sundara Chola V. 18.
45 *திருவாலங்காட்டுச் செப்பேடுகள்; விக்கிரமசோழன் உலா, கண்ணி, 16,*

அவன் மகனுன இராசேந்திரன் கங்கைகொண்ட சோழ புரத்தை அமைத்தான். அங்குக் கட்டப்பட்ட பெரிய சிவன் கோவில் கட்டடக் கலைக்கும் சிற்ப வேலைப்பாட்டிற்கும் பெயர் போனது. முதற் குலோத்துங்கன் முதலிய சோழப் பேரரசர்கள் எடுப்பித்த கோவில்கள் சில; புதுப்பித்த கோவில்கள் பல. கண்ட ராதித்தன் மனைவியாரான செம்பியன் மாதேவியாரது கொடையி னுல் சிறப்புற்ற கோவில்கள் பலவாகும். அவரைப் போன்ற அரசமா தேவியர் பலரால் உதவிபெற்ற கோவில்கள் பல.

காலிங்கராயன் திருப்பணிகள் : முதற் குலோத்துங்கனுடைய சேனைத் தலைவருள் ஒருவனுன காலிங்கராயன் என்பவன் பல கோவில்களில் திருப்பணிகள் செய்துள்ளான். அவன் தில்லையில் செய்த திருப்பணிகள் பலவாகும்; தேவாரத்தை ஓதுவதற்கென்று அழகிய மண்டபமொன்றை அமைத்தான்; மூவர் சிலைகளையும் செய்வித்தான்; மூவர் தேவாரத்தையும் ***செப்பேடுகளில் எழுது வித்தான்.*** [46]

இப்பெருந்தகை திருவதிகையில் செய்த திருப்பணிகளுள் – திருநாவுக்கரசர் மடத்திற்கு நாற்பத்தெட்டாயிரம் குழி நிலம் தானம் செய்தமையும், திருநாவுக்கரசர்க்குத் தனிக் கோவில் கட்டினமையும் குறிப்பிடத் தக்கவை. இவ்வாறே பெருமக்கள் பலர் சிறந்த முறையில் சமய வளர்ச்சிக்குரிய திருப்பணிகள் செய்துள்ளனர்.

மடங்கள் : பாடல்பெற்ற கோவில்கள் பலவற்றில் மாத விழாக்களும் ஆண்டு விழாக்களும் குறைவின்றி நடந்தன. திரு வதிகை, திருவையாறு, திருப்புகலூர், திருவொற்றியூர் முதலிய சிறந்த சிவத்தலங்களில் மடங்கள் அமைந்திருந்தன. அவற்றில் சிவயோகியார், மாகேசுவரர், தவசிகள், வேதியர், ஆண்டார் முதலியோரை உண்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவை அடியார்க்குச் சமய அறவுரை வழங்கும் நிலையங்களாகவும் இருந்தன.

நாயன்மார் திருமேனிகளும் விழாக்களும் : பல கோவில்களில் நாயன்மார் திருவுருவங்கள் வழிபடப் பட்டன.

---

46 S. I. I. IV 225

(1) திருவதிகைச் சிவன்கோவிலுள் திருநாவுக்கரசர்க்குத் தனிக் கோவில் இருந்தது. [47]

(2) செங்காட்டங்குடியில் திருத்தொண்ட நம்பிக்கு விழா நடைபெற்றது. [48]

(3) இராசராசன் காலத்தில் திருப்புகலூரில் திருநாவுக் கரைய தேவற்குப் பூசை முதலியன புதியனவாக உண்டாக்கப் பட்டன. [49]

(4) தஞ்சைப் பெரிய கோவிலில் சண்டீசர்க்குத் தனிக் கோயில் ஏற்பட்டது; பூசை சிறப்பாக நடைபெற்றது. [50]

(5) சண்டீசர் சிவலிங்க பூசை செய்தல் — தந்தை கால் வெட்டுண்டு கீழே விழல் – சிவபிரான் உமையோடு காட்சிதரல் – சண்டீசர்க்குச் சண்டீசப்பதம் தரல் – இவற்றை விளக்கும் திரு மேனிகள் தஞ்சைப் பெரிய கோவிலில் எடுப்பிக்கப் பெற்றன. [51]

(6) தஞ்சைப் பெரிய கோவிலில் நம்பி ஆரூரனுர், நங்கை பரவையார், திருநாவுக்கரையர், திருஞான சம்பந்தடிகள் இவர்தம் திருமேனிகள் எடுப்பிக்கப் பெற்றன; பல ஆடையணிகள் வழங் கப் பெற்றன. [52]

(7) ‘ தத்தா ! நமரே காண் !’ என்ற மிலாடுடையார் படிமம் ஒன்று அதே கோவிலில் எடுப்பிக்கப் பெற்றது. [53]

(8) அதே பெரிய கோவிலில் பைரவர், சிறுத்தொண்ட நம்பி, வெண்காட்டு நங்கை, சீராளதேவர் இவர்தம் செப்புத் திரு மேனிகள் எடுப்பிக்கப் பெற்றன; பல ஆடையணிகள் வழங்கப் பெற்றன. [54]

(9) திருமழபாடிக் கோவிலில் பிள்ளையார் ஞானசம்பந் தடிகள்; திருநாவுக்கரைய தேவர், நம்பி ஆரூரனுர் திருமேனிகள் வைக்கப்பெற்றன. [55]

---

47 368 of 1921
48 59 of 1913
49 68 of 1928
50 S. I. I II 59 and 60
51 Ibid. 29
52 Ibid. 38
53 Ibid 40
54 Ibid 43 & 44
55 37 of 1920

முதல் இராசாதிராசன் காலத்தில் (கி. பி. 1046 இல்) திருவொற்றியூர்க் கோவிலில் 63 நாயன்மார் திருமேனிகள் எழுந்தருளப் பெற்றன; தினப் பூசைக்காக 75 கலம் நெல்தரப் பட்டது. [56]

(10) திருநல்லம் கோவிலில் சண்டேசர்க்குத் தனிக்கோவில் இருந்தது. [57]

(11) திரு ஆரூர்ப் பூங்கோவிலில் ஆளுடைநம்பி, பரவை நாச்சியார் திருமேனிகள் இருந்தன. அவற்றின் பூசைக்காகச் சிற்றூர் ஒன்று தானமாக விடப்பட்டது. [58]

(12) திருக்கழுமலம் (சீகாழி) கோவிலில் சம்பந்தர்க்குத் தனிக்கோவில் இருந்தது. அங்குப் பூசைகள் குறைவற நடந்தன. [59]

(13) மேற்சொன்ன ஆளுடைய பிள்ளையார் கோவிலுள் மங்கையர்க் கரசியாருக்குத் தனிச் சிறு கோவிலும் இருந்தது. [60]

(14) திருவாமூர்க் கோவிலில் திருநாவுக்கரசர் திருமேனி எழுந்தருளப் பெற்றிருந்தது. அதற்கு முன்பு விளக்கெரிக்க நில தானம் செய்யப்பட்டது. [61] இவ்வாறு அன்றிக் கல்வெட்டுகளில் குறிப்பிட வாய்ப்பு நேராத நிலையிலும் பல கோவில்களில் நாயன்மார் திருமேனிகள் இருந்திருக்கலாம் அல்லவா ?

திருப்பதிகம் : திருஎறும்பியூர், திருப்பழுவூர், திரு ஆவடுதுறை, திருத்தவத்துறை, ஆத்தூர், குமாரவயலூர், அந்துவநல்லூர் முதலிய ஊர்க் கோவில்களில் திருப்பதிகம் ஓதப்பட்டது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. தஞ்சைப் பெரிய கோவிலில் திருப்பதிகம் ஓத நியமனம் பெற்ற நாற்பத்தெண்மரும் திருவாஞ்சியம், திருவெண்நாவல், திருவாரூர், திருவாய்மூர், திருமறைக்காடு, திருவையாறு, திருவிடைமருதூர், திருவெண்காடு, தில்லை, சீகாழி முதலிய பல ஊரினராவர். எனவே, திருவாஞ்சியம் முதலிய ஊர்க் கோவில்களில் இராசராசனுக்கு முன்பிருந்தே திருப்பதிகம் ஓதப்பெற்று வந்தது என்பது தெளி

56 137 of 1912
57 658 of 1909
58 S. I. I. VII, 485
59 380 of 1918
60 375 of 1918
61 137 of 1937

வாகிறது. திருவொற்றியூர்க் கோவிலிலும் திருப்பதிகம் ஓதப் பெற்று வந்தது என்பது தெளிவாகிறது. திருவொற்றியூர்க் கோவிலில் திருப்பதிகம் ஓதப் பதினறு தேவரடியார்கள் இருந் தனர். விக்கிரம சோழன் காலத்தில் திருஆமாத்தூரில் குருடர் பதினறுபேர் திருப்பதிகம் ஓதிக்கொண்டிருந்தனர்.[63] முதல் இராசேந்திரன் ஆட்சியில் தில்லையில் மாசித்திங்கள் விழாவில் திருத்தொண்டத்தொகை பாடப்பெற்றது.[64] இவையனைத்தையும் நோக்கச் சேக்கிழார் காலத்தில் பல கோவில்களில் திருப்பதி கங்கள் ஓதப்பெற்று வந்தமை நன்கு அறியப்படும்.

முதற் குலோத்துங்கன் காலத்தில் நீடூர்க் கோவிலில் 'புராண நூல் விரிக்கும் புரிசை மாளிகை' யொன்று கட்டப்பட்டது.[66] சீகாழியில் உள்ள சிவன் கோவிலில் ***திருக்கைக் கோட்டி மண்டபம்*** என்ற பெயரில் ஒரு மண்டபம் இருந்தது; அதனில் திருமுறைகள் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. அழிந்த ஏடுகளைப் புதுக்கவும், பூசிக்கவும், நாடோறும் பாடவும் ஒருவர் இருந்தார். அவர் ***தமிழ் விரகர்*** எனப்பட்டார். அவருக்கு நிலம் மானியமாக விடப் பட்டது.[67] இவ்வாறு திருமுறைகள் சில கோவில்களிலேனும் பாதுகாக்கப்பட்டு வந்தன என்று எண்ணுதல் பொருத்தமாகும்.

ஆடல் – பாடல்கள் : இராசராசன் தான் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோவிலில் ஆடல் – பாடல்களுக்காக இசைவாணிகள் நானூற்றுவரை நியமித்தான்; ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒருவேலி நிலமும் வழங்கினன். அம்மகளிர் தமிழ் நாட்டுப் பல கோவில்களில் பணியாற்றி வந்தவர் என்பது தஞ்சைப் பெரிய கோவில் கல்வெட்டால் தெரிகிறது.[65] இதனல் இராசராசன் காலத்தும் அவனுக்கு முன்பும் பல கோவில்களில் ஆடல், பாடல் மகளிர் இருந்து வந்தனர் என்பது தெளிவாகிறது அன்றோ ?

சிற்பங்கள் : சோழர் காலக் கோவில்கள் சிலவற்றில் நாயன் மார் வரலாற்று நிகழ்ச்சிகள் ***சிற்பங்களாகச்*** செதுக்கப்பட்டன. ***மேலைக்கடம்பூர்ச்*** சிவன் கோவிலின் மூன்றுபுறச் சுவர்களிலும் இரண்டு வரிசைகளில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் வர

---

62 128 of 1912
63 S. I. I. VIII. 740
64 S. I. I. IV 223
65 S. I. I. II. 66.
66 535 of 1921
67 381 of 1918

லாற்று நிகழ்ச்சிகள் குறிக்கப் பெற்றுள்ளன. ***கீழைக்கடம்பூர்ச்*** சிவன்கோவிலில் கருவறையின் புறச் சுவரில் தனித்தனித் திருவுருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை வைக்கப் பெற்றிருந்த புரைகளின் அடியில் அச்சிலைகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ***உலகாண்ட மூர்த்தி***, (மூர்த்தி நாயனுர்), ***முருகாண்டார்*** (முருக நாயனுர்), ***திருக்குறிப்புத் தொண்டர், தண்டிப்பெருமாள்*** என்பவை நாயன்மார் பெயர்களாகும். இவை இராசராசன் காலத்தவை என்பது அறிஞர் கருத்து. [68]

முதலாம் இராசேந்திரசோழன் எடுப்பித்த கங்கைகொண்ட சோழீசுவரத்தில் உள்ள ***சண்டீசப்பதம்*** தரும் காட்சியை விளக்கும் ***சிற்பம்*** கண்ணேயும் கருத்தையும் ஈர்க்கத் தக்கது. சிவபெருமான் உமாதேவியாருடன் அமர்ந்திருக்கிருர். அவரது மடித்த காலுக்கடியில் சண்டீசர் அமர்ந்துள்ளார். சிவபெருமான் கொன்றை மாலையைச் சண்டீசர் முடியில் சூட்டி அவருக்குத் தம் கோவில் மேலாளர் பதவியைத் தருகிருர். இதனை விளக்குவதே சண்டீசப் பதம் தரும் சிற்பம்.

அதே கோவிலில் நடுமண்டபச் சுவரில் சண்டீசர் வரலாறு நான்கு வரிசையில் செதுக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் சேக்கிழாருக்கு முற்பட்ட சிற்பங்களாகும்.

ஓவியங்கள் : தஞ்சைப் பெரியகோவில் கருவறையின் புறச் சுவர்களில் நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்கும் ***ஓவியங்கள்*** தீட்டப்பட்டுள்ளன. அவை,

1. கயிலையில் சிவபிரான் இருத்தல்.

2. சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்ட வரலாறு.

3. சுந்தரர் யானைமீதும், சேரமான் குதிரைமீதும் கயிலை செல்லல்.

4. கந்தருவர் அவ்விருவர்மீதும் மலர் மழை பொழிந்து இசை முழக்கல்.

---

68 தமிழ்ப்பொழில், தொகுதி 16, பக். 234

இனி இவற்றை ஓவியங்களிற் கண்டவாறு விளக்குவோம் :

1. இது மேற்சொன்ன நான்கிலும் மேலே இருப்பது. இதனில் சிவபிரான் மான்தோல்மீது யோக நிலையில் காணப்படுகிறார். அவரைச் சுற்றிலும் அடியாரும் கணங்களும் காணப்படு கின்றனர்.

2. ஒரு மண்டபத்தில் இளைஞரும் முதியரும் கூடியுள்ளனர். அவர் மறையவர். அவர்கட்கு இடையில் இருவர் எதிர் எதிராக நிற்கின்றனர். அவருள் ஒருவர் கிழவர்; அவர் முதுகு வளைந்துள்ளது, அவரது ஒரு கையில் தாழங்குடை உள்ளது; மற்றொரு கையில் பனை ஓலை இருக்கிறது. அவ ருக்கு எதிரில் நிற்பவர் இளைஞர். அவர் அடக்கத்துடன் நிற்கின்றார். கூட்டத்தினர் முகத்தில் வியப்பும் திகைப்பும் வழிகின்றன. அக் கூட்டத்தினர்க்கு வலப்பக்கம் ஒரு கோவிலின் விமானம் தீட்டப்பட்டுள்ளது. மண்டபத்திற் குழுமியிருந்த மறையவர் அக்கோவிலுள் விரைந்து நுழை கின்றனர்.

3. வெள்ளானை பூணிட்ட நான்கு கோடுகளுடன் காண்கிறது. அதன்மீது தாடியுடைய இளைஞர் ஒருவர் இவர்ந்து செல் கிறார். அவர்தாம் சுந்தரர். அவர் கைகளில் தாளம் இருக் கிறது. இக்காட்சிக்கு வலப்பக்கம், விரைந்து செல்லும் குதிரை ஒன்று காட்சி அளிக்கின்றது. அதன்மீது அழகும் கட்டமைந்த உடலும் கொண்ட ஒருவர் காண்கிறார். அவர் தாம் சேரமான் பெருமாள் நாயனார். யானையும், குதிரையும் நீரில் நடந்து செல்கின்றன. நீரில் அலைகளும் மீன்களும் தெளிவாகக் காண்கின்றன.

4. இவ்விரு காட்சிகட்கும் மேற்புற மூலைகள் இரண்டிலும் கந்த ருவர் பலர் காண்கின்றனர். அவருள் ஒரு பகுதியார் கரி மீதும் பரிமீதும் வருபவர்மீது மலர்மழை பொழிகின்றனர், மற்றப் பகுதியார் பல்லியங்களைக் களிப்புடன் ஒலிக்கின் றனர். [69]

---

69 டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 150-151.

நூல்கள்

சேக்கிழாருக்குக் கிடைத்த மூலங்களுள் ***சைவத் திருமுறைகளே சிறப்புடையவை.*** "அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய முதல் ஏழு திருமுறைகள் இம் மூவருடைய வரலாற்றை ஏறத்தாழ ஒழுங்காக அமைக்கப் பயன்பட்டனவாகும். மேலும், இவற்றில் இம் மூவராலும் குறிக்கப்பட்ட நாயன்மார்களின் பக்திச் சிறப்பினைப் பற்றி அரிய குறிப்புக்கள் பல கூறப்பட்டுள்ளன. இவற்றால், நாயன்மார்கள் காலங்களை ஒருவாறு அறியலாம்; அவர்கள் காலத்துச் சைவ சமய நிலைமை, சமண பௌத்த சமயங்களின் நிலைமை முதலியன அறியலாம். பல தலங்கள் இன்ன ஆற்றின் கரைமீது அமைந்து உள்ளன — தலப்பெயர் இன்னது — தலச் சிறப்புக்கள் இவை, கோவிற் பெயர் இன்னது, கோவில்களில் நடைபெற்ற விழாக்கள் இவை, என்பன போன்ற — சேக்கிழார்க்குத் தேவையான — குறிப்புக்கள் இத் திருமுறைகளிலிருந்து கிடைக்கின்றன. இவற்றில் சிறப்பாகக் குறிக்கப் பெற்றவர் — கண்ணப்பர், சண்டீசர், கோச்செங்கணன், சாக்கியர், புகழ்த்துணையார், கணம்புல்லர், அரிவாள்தாயர், நமிநந்தி, தண்டியடிகள், மங்கையர்க்கரசியார், நெடுமாறன், குலச்சிறை, கோட்புலியார் என்பவர். ஏனையோர் யாவரும் பெயரளவிற் குறிக்கப் பெற்றவர்.

"எட்டாந் திருமுறையில் கண்ணப்பர், சண்டீசர் பக்திச் சிறப்பு மட்டுமே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பதாந் திருமுறையில் சண்டீசர், கணம்புல்லர், கண்ணப்பர், அப்பர், சம்பந்தர் குறிப்புக்களும், சேரமானும், சுந்தரரும் (இருவரும்) வெள்ளானைமீது சென்றமையும், தில்லைவாழ் அந்தணர் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தில் நாயன்மார்கள் பற்றிய குறிப்புக்கள் பல இல்லையாயினும், அதனுட் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவும் கோவில் அமைப்பு முதலிய சமயச் செய்திகளும் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பாடிய திருமூலரே அறுபத்து மூவருள் ஒருவர் ஆதலின், அவர் நூலைச் சேக்கிழார் படிக்கக் கடமைப்பட்டராவர்; இங்ஙனம் அழுத்தமாகப் படித்த

மையாற்ருன் அதனைத் 'திருமந்திரமாலை' எனப் பாராட்டுவா ராயினர்.'' [70]

பதினேராந் திருமுறையில் :

காரைக்காலம்மையார் பாடிய ***அற்புதத் திருவந்தாதி***, அம்மை யார் வரலாற்றை ஓரளவு சேக்கிழார்க்கு உதவியது என்னலாம். அதன்கண் – அம்மையாரது சைவப்பற்று, அவர்கண்ட கடவுட் காட்சி முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன.

ஐயடிகள் பாடிய ***சிவத்தளி வெண்பா***வில் 24 பாடல்களே உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலத்தைப் பற்றியது; 'இறக்கும் பொழுது இன்ன தலத்து இறைவனை நினை' என்று நெஞ்சிற்கு அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. இது சேக்கிழார் காலத்தில் முழு நூலாக இருந்திருத்தல் கூடும்.

சேரமான் பாடிய நூல்கள் : சேரமான், பொன் வண்ணத்து அந்தாதி, திருஆரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞான உலா ஆகிய மூன்று நூல்களையும் பாடியுள்ளார். இவற்றுள் பொன்வண்ணத்து அந்தாதி சேக்கிழாருக்குப் பயன்பட்டது என்னலாம். அதன் தொடக்கமும் முடிவும் '***பொன்வண்ணம்***' என்று அமைந்துள்ளது. அந்த அமைப்புச் சேக்கிழார் உள்ளத் தைக் கவர்ந்து, அசரீரி தந்த 'உலகெலாம்' என்ற தொடரைப் பெரிய புராணத்தில் முதலிலும் ஈற்றிலும் அமைக்கச் செய்திருக்க கலாம். இந்த அந்தாதியின் கீழ் உள்ள செய்யுளில் – சுந்தரர் வெள்ளானைமீது இவர்ந்து கயிலை சென்றமை, சேரமான் பரிமீது சென்றமை, அவர் கயிலையில் ஆதியுலா அரங்கேற்றினமை, அவர் தில்லையில் பொன்வண்ணத் தந்தாதியைப் பாடினமை என்ற குறிப்புக்கள் காணப் படுகின்றன.

நக்கீரர் முதலியோர் நூல்கள் : நக்கீரர் பாடிய நூல்களில் சண்டீசர், சாக்கியர், கோச்செங்கணன் ஆகியோரது பக்திச் சிறப்புப் பாராட்டப் பட்டுள்ளது. நக்கீரர் கண்ணப்பர்மீது பாடிய திருமறத்தில், (1) கண்ணப்பர் இயல்பாகவே நாடோறும் சிவனைப் பூசித்த பிறகே உண்பவர் என்பதும், (2) அவர் காளத்தி மலையில் தமது வேட்டை நாயுடன் தங்கிப் பூசை செய்தனர் என்பதும்,

---

70 *டாக்டர் மா. இராசமாணிக்கனர், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 178-179.*

(3) சிவனது ஒரே கண்ணில் தம் இரண்டு கண்களையும் அப்ப முயன்றனர் என்பதும் குறிக்கப்பட்டுள்ளன. *கல்லாடர்* பாடிய கண்ணப்ப தேவர் திருமறத்தில் நக்கீரர் குறிப்பிடாத சில செய்தி களைக் குறித்துள்ளார். அவை — காளத்தியில் சிவனைப் பூசித்து வந்தவர் பெயர் '*கோசரி*' என்பதும், இலிங்கத்தின் *இரண்டாம் கண்ணில்* வெளிப்பட்ட குருதியைத் தடுக்கவே கண்ணப்பர் தமது இரண்டாம் கண்ணைப் பெயர்க்க முயன்றனர் என்பதும் ஆகும்.

பட்டினத்தார் பாடிய நூல்கள் : இவர் பாடியவை – கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருஇடை மருதூர் மும்மணிக்கோவை, திருஏகம்பம்உடையார் திரு அந்தாதி, திருவொற்றியூர் ஒருபாஒருபஃது என்பன. இவற்றுள் சண்டேசர், சம்பந்தர், சாக்கியர், சிறுத்தொண்டர், சுந்தரர், திரு நாவுக்கரசர் ஆகியோரது பக்தி பாராட்டப் பட்டுள்ளது. சம்பந்தர் தந்தையோடு கோவிலுக்குச் சென்றபொழுது அவரைப் பசி வருத்தியது. அவர் 'அன்னாய்' என்று அழைத்தார். சிவன் முன்னின்று ஞான உணவு அளித்தார். தந்தை சினந்து, 'உணவு தந்தவர் யார் ?' என்று கேட்டார். சிறுவ ராகிய சம்பந்தர், 'அவனைக் காட்டுவேன்' என்று கூறித் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கிப் பாடினார். அப்பொழுது சிவபெருமான் காட்சியளித்தார். இது பட்டினத்தார் கூற்று.

நம்பி பாடிய நூல்கள் : இவர் பத்து நூல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஆறு சம்பந்தரைப் பற்றியவை; ஒன்று அப்பரைப் பற்றியது. ஒன்று கோவில் திருப்பண்ணியர் விருத்தம், விநாயகர் திரு இரட்டை மணிமாலை ஒன்று, திருத்தொண்டர் திரு அந்தாதி ஒன்றாகும். சம்பந்தர் திருவந்தாதி, சம்பந்தர் திருச்சண்பை விருத்தம், சம்பந்தர் திருமும்மணிக் கோவை, சம்பந்தர் திருவுலா மாலை, சம்பந்தர் திருக்கலம்பகம், சம்பந்தர் திருத்தொகை என் பன *சம்பந்தரைப் பற்றிய சிறு நூல்கள்*. இந்த ஆறு நூல்களி லும் சம்பந்தர் வரலாற்றுக் குறிப்புக்கள் யாவும் அடங்கியுள்ளன. இந்த ஆறு நூல்களும் சம்பந்தர் தேவாரமும் சம்பந்தர் புராணத் தைப் பெரிய அளவில் பாடச் சேக்கிழாருக்கு உதவி புரிந்தன என்னலாம். சம்பந்தர், விடம் மேவி இறந்த பெண்ணை எழுப்பினு

ரென்றும், சமணரைக் கழுவேற்றினர் என்றும் நம்பியாண்டார் நம்பி குறித்தமை கவனிக்கத்தகும்.

திரு ஏகாதச மாலை: இது திருநாவுக்கரசரைப் பற்றியது. அவர் ஆமூரில் பிறந்தமை, அவர் தமக்கையாரது நல்லுரையாற் சைவரானமை, சூலைநோய் நீங்கிக் கவிகள் பாடினமை, சமணர் அவருக்குச் செய்த தீங்குள் – கல் மிதந்தமை, தேவநடன மாதர்க்கு ஈடுபடாது சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தினமை என்ற சிறப்பான குறிப்புக்கள் இந் நூலுள் காணப்படுகின்றன. இவரைப்பற்றிய திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல்களில், இவர் திருநல்லூரில் திருவடி தீட்சை பெற்றமையும் மறைக்கதவு திறக்கப் பாடினமையும் குறிக்கப்பட்டுள்ளன. இவையும், அப்பருடைய திருமுறைகள் மூன்றும் இவரது வரலாற்றைப் பாடச் சேக்கிழார்க்குப் பெருந்துணை புரிந்தன என்னலாம்.

நம்பி பாடிய ‘கோயில் *திருப்பண்ணியார் விருத்தத்*’*தில்* (70 விருத்தங்களில்) கண்ணப்பர் பக்திச் சிறப்பு, சுந்தரரும் சேரமானும் கயிலை புக்கது, சாக்கியர் கல் எறிந்து முக்தி பெற்றது, அதிபத்தர் வரலாறு, கலிக்காமரிடம் ஆறுவேலி நிலம் கொண்டு திருப்புன்கூர்க் கடவுள் மழை பெய்வித்தது என்பன கூறப்பட்டுள்ளன.

திருத்தொண்டர் திருவந்தாதி: இது 85 பாக்களைக் கொண்ட சிறுநூல். இதன்கண் 63 தனியடியார், 9 தொகையடியார் வரலாறுகள் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. சுந்தரர் வரலாறு 15 பாக்களில் இடம் பெற்றுள்ளது. இக் குறிப்புக்களும் சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறையும் சுந்தரரது வரலாற்றைப் பாடச் சேக்கிழார்க்குப் பெருந்துணை செய்தவையாகும். எல்லா நாயன்மார் வரலாறுகளையும் ஓரளவு உணர்த்தத்தக்க முறையில் அமைந்த நூல் இதுவொன்றே ஆகும். ஆதலால் *பெரிய புராணத்திற்குப் பேருதவி புரிந்த மூலங்களுள் இதுவே சிறப்புடையதாகும்.*

பிறநூல்களுள்.

தில்லை உலா: இஃது இன்றளவும் தனி நூலாக அச்சாகி வெளி வராதது. காலஞ்சென்ற பண்டிதர் உலகநாத பிள்ளையவர்கள் இதனைத் தமிழ்ப் பொழிலில் வெளியிட்டனர். “தில்லைப் பிரான் உலாப் போகையில் திருநீற்றுச் சோழன் பரிமீது முன்

சென்றதாக இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளதும், அவன் சென்ற பரி, சேரமான், வரகுணன் II இவர்கள் வாகனங்களுடன் சென்றதாகக் கூறப்படுவதும், வேறு சோழ அரசன் குறிப்பிடப் படாமையும் நோக்க, திருநீற்றுச் சோழனுன முதற் குலோத்துங் கனே தில்லையில் இறைவன் உலா வருதலை முதன் முதல் சிறப் பாகச் செய்து காட்டினவனுகலாம் எனக் கோடல் பொருந்தும். அவனைப் பற்றிய இடங்களில் அவனது படிமம் பரிமீது சென்றது என்ற பொருளே அறியக் கிடப்பதால், அவனுக்குப் பிற்பட்ட காலத்தில் இந்நூல் பாடப் பட்டதாகலாம்; ஆயின், தில்லையைப் பற்றிய இந்நூலில் தில்லையில் செய்யப்பட்ட பெரிய புராணமோ, அதனைச் செய்த சேக்கிழாரோ, அதனைச் செய்வித்த சிவநெறிச் செல்வனுன இரண்டாம் குலோத்துங்கனே குறிக்கப்படாமையின், இது சேக்கிழார்க்கு முற்பட்ட நூலெனக் கொள்ளலாம்; அங்ங னம் கொண்டு இதனை ஆராய்வோம்.

" இந்நூலிற் குறிக்கப்பெற்ற செய்திகளாவன : (1) சிற்றம் பலக் கூரையின் பொன்தகடு ஒவ்வொன்றின்மீதும் 'சிவாய நம' என்னும் ஐந்து எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன. (2) உலா வில் பரசமய வாது வென்ற பிள்ளை (சம்பந்தர்), வஞ்சனைகள் வென்ருர் (அப்பர்), " தூது சென்று வா " என்ற தோழன் (சுந்தரர்), 'தென்னற்கு வாய்த்த திருவாதவூரர் '(மாணிக்க வாசகர்), ஆகிய இவர்கள் இந்த முறைப்படியே குறிக்கப்பட்டுள் ளனர். (3) ஆதி சிவாகமப்படி தில்லையில் பூசை நடந்தது. (4) சண்டீசர் திருமேனி, 'தந்தை இருதாள் துணித்த சைவத் திருமேனி' எனப்பட்டது. (5) சிவன் உலாப் போகையில் முன் புறம் (a) வாகீசர் தேர், (b) சுந்தரர் தேர், (c) திருவாசகப் புலவன் தேர்கள் சென்றன; ஆதியுலாச் சொன்ன நரபதியும் வர குணனும் சேவிப்பச் சிவபிரான் உலாப் போனன். (6) இவர் படிமங்கட்கு முன்பு மூவர் தமிழும் வேதமும் முரசம் முழங்கப் போயின. (7) இவ்வுலாவில் (a) சிவன் சுந்தரர்க்காகத் தூது சென்றமை, (b) கோட்புலியார் பிள்ளையைக் கூருக்கினமை, (c) சிறுத்தொண்டர் பிள்ளையைக் கொன்று சமைத்த முழு விவரம், (d) சம்பந்தர் சைவத்தைப் பரப்பப் பாண்டிநாடு சென்றமை என்பன குறிக்கப்பட்டுள்ளன.

“ இவற்றுள் (1) சுந்தரர்க்காக இறைவன் தூது சென்றமை, (2) கோட்புலியார் பிள்ளையைக் கூறுக்கினமை, (3) சிறுத் தொண்டர் மகனை அரிந்து விருந்தளித்த முழு விவரம் ஆகிய மூன்றும் நம்பி பாக்களில் தெளிவாகக் குறிக்கப் படாதவை. ஆகவே, இவை சேக்கிழார்க்குப் பெரு வியப்பு ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இக் குறிப்புக்கள் சேக்கிழாரால் நன்கு விளக்கப்பட்டிருத்தலை நோக்க, இச் செய்திகள் கூறும் உலாப் போன்ற அக்கால நூல்கள் சில சேக்கிழார்க்குக் கிடைத்தன வாகலாம் என்று எண்ண இடமுண்டாதல் காண்க.” [71]

இராஜ ராஜேசுவர நாடகம் : முதலாம் இராஜராஜன் தஞ்சையில் கட்டிய பெரிய சிவன்கோவில் இராஜராஜேசுவரம் என்பது. அக் கோவில் கட்டப்பெற்ற வரலாறு, அங்கு எழுந்தருளப் பெற்ற நாயன்மார் வரலாற்றுச் செய்திகள் முதலியவற்றைப் பல காட்சிகளாகக் கொண்டது இராஜராஜேசுவர நாடகம் [72] என்னலாம். இராஜராஜேசுவரம் என்ற தஞ்சைப் பெரிய கோவிலில் முன்பு கூறியவாறு அப்பர், சம்பந்தர், சுந்தரர், சிறுத்தொண்டர், சண்டீசர், மெய்ப்பொருள் நாயனுர் திருமேனிகள் வைத்துப் பூசிக்கப்பட்டன அல்லவா ? இந் நாடக நூலில் அவைபற்றிய பேச்சுவரும் இடங்களில் அவை குறிக்கும் நாயன்மார் வரலாறுகளும் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

இராஜ ராஜ விஜயம் : இது முதல் இராஜ ராஜனுடைய வெற்றிகளைக் கொண்ட நூல் எனலாம். இந்நூல் திருப்பூந்துருத்திப் பூங்கோவிலில் படிக்கப்பெற்றது. [73] இந்நூலில் இராஜ இராஜனுடைய சமயத் திருப்பணிகளும் இடம் பெற்றிருக்கலாம். அவற்றுள் சிறப்பாக, அவன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறைகள் தொகுத்தமை தக்கவாறு இடம் பெற்றிருக்கலாம்.

கன்னிவன புராணம்; பூம்புலியூர் நாடகம் : “ இவை முதற் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1070–1120) செய்யப்

---

71 *டாக்டர் மா. இராசமாணிக்கனர், பெரிய புராண ஆராய்ச்சி, பக் 187–189.*
72 S. I. I. II 67
73 120 of 1931; A. R. E. 1931 p. 44

பட்டவை. இவற்றின் ஆசிரியர் பரசமய கோளரிமாமுனி என்பவர். இவர் பாதிரிப் புலியூரினர். இவை இரண்டும் பாதிரிப் புலியூரைப் பற்றிய புராணமும் நாடகமுமாம். நாம் அறிந்த வரையில் அவ்வூரில் சமணப் பள்ளிகளும், பாழிகளும் இருந்தன. அப்பர் அங்குத் 'தருமசேனர்' என்ற பட்டத்துடன் சமணத் தொண்டு செய்து வந்தார். பின்பு அவர் சூலை நோய்கொண்டும் சமணருடன் மாறுபட்டும் திருவதிகை சென்று சைவரானுர்; அதனுல் மகேந்திரவர்மனுடைய தண்டனைகளைத் தாங்கினுர்; இறுதியில் கடலில் கல்லைப் புணையாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூர்க்கு அருகில் கரையேறினுர். உடனே பாதிரிப் புலியூர்ச் சிவன் கோவிலை அடைந்து, "ஈன்ருளுமாய்" என்று தொடங்கும் பதிகம் பாடினுர். மகேந்திரன் அப்பரது பெருமை யுணர்ந்து சமணத்தை விட்டுச் சைவனுனன்; பாதிரிப் புலியூரில் இருந்த பள்ளிகளையும் பாழிகளையும் தகர்த்து, அச் சிதைவுகளைக் கொண்டு திருவதிகையிற் '*குணபர ஈசுவரம்*' கட்டினுன். இவ்வரலாறு முழுவதும் பூம்புலியூரைப் பற்றியதே ஆதலின், இது பல காட்சிகளாகப் பிரிக்கப்பட்டுக் கன்னிவன புராணத்தும் பூம்புலியூர் நாடகத்தும் இடம் பெற்றிருக்கலாம் என்று நினைப்பது பொருந்தும். பெரிய புராணத்துள் வரும் அப்பர் வரலாற்றில் கூறப்பட்டுள்ள இக்குறிப்புக்கட்குரிய மூலம் திருமுறை நூல்களிற் போதிய அளவு இல்லாமையை நோக்க, உண்மை புலனுகும். நமது ஊகம் சரியாக இருப்பின், ***இவ்விரு நூல்களும் சேக்கிழார்க்குப் பயன்பட்டன என்னலாம்.***"[74]

மத்தவிலாசப் பிரகசனம்: இது திருநாவுக்கரசு காலத்துப் பல்லவ அரசனுன மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய வேடிக்கை நாடகம். அவ் வேந்தன் இந்நூலில் இசையையும் நடனத்தையும் பாராட்டியுள்ளான்; அக்காலத்துப் பௌத்தர், சமணர், காபாலிகர், பாசுபதர் நிலைகளை விளக்கியுள்ளான்; ***உயர் நீதி மன்றத்து நீதிபதிகள் கையூட்டுப் பெறத்தக்கவரென்பதைத் தெளிவாகக் கூறியுள்ளான்.*** இந்நூல் திருநாவுக்கரசர் காலத்துச் சமய உலகைப் படம் பிடித்துக் காட்டுவது.

---

74 *டாக்டர் மா. இராசமாணிக்கனுர், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 184-185.*

அவந்தி சுந்தரி கதா : இது இராஜ சிம்மன் காலத்தில் அவன் அவைப் புலவரான *தண்டி* என்பவரால் வடமொழியில் செய்யப்பட்டது. இதன்கண் இராச சிங்கன் காலத்துக் *கொடிய பஞ்சமும்* இராசசிங்கன் நல்லியல்புகளும் விளக்கப்பட்டுள்ளன. [75] இந்த இராசசிங்கனே பூசலார் வரலாற்றில் குறிக்கப்பட்ட காடவர் கோமான் என்பது அறிஞர் கருத்து. [76] இஃது உண்மையாயின், இந்நூல் அவ் வேந்தனைப் பற்றிய சில குறிப்புக்களைச் சேக்கிழார்க்கு உதவியிருக்கலாம்.

சமண — பௌத்த சமயநூல்கள் : சம்பந்தர் மதுரையில் சமணரோடும் போதி மங்கையில் பௌத்தரோடும் வாதிட்டார் என்று சேக்கிழார் கூறி, அச் சமயக் கொள்கைகளை மிக நுணுக்கமாக விளக்கியுள்ளார். [77] எனவே, இவர் பொதுவாகத் தமக்கு முற்பட்ட சிந்தாமணி, நீலகேசி, போன்ற சமண நூல்களையும்; படித்திருக்கலாம்; சிறப்பாகத் தம்காலத்துச் சமணப் பெரியார்களையும் பௌத்த அறிஞர்களையும் நேரில்கண்டு அவர் தம் சமயக் கொள்கைகளைக் கேட்டறிந்தும் இருக்கலாம். இவ்வாறு சேக்கிழார் கேட்டு அறியத்தகும் நிலையில் இவ்விரு சமயங்களும், சோழப் பெருநாட்டில் சிறந்திருந்தன, என்பதைக் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் உணர்த்துகின்றன. அவை உணர்த்தும் செய்திகளைக் கீழே காண்க :

(1) "கி. பி. 9-ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் வட ஆர்க்காட்டுக் கோட்டம் 'வெடால்' என்ற ஊரில் பெரிய *சமணப் பள்ளியும் பாழி*யும் இருந்தன. அங்கு 400-க்கு மேற்பட்ட *குரத்தியர்* (சமணப் பெண்துறவிகள்) இருந்தனர். [78] கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் தென் ஆர்க்காட்டுக் கோட்டத்துச் சிற்றுமூரில் இருந்த சமணப் பள்ளியில் *சமண சமயநூல்* படித்து விளக்கப்பட்டது. [79] (3) முதற் பராந்தகன் காலத்தில் செங்கற்பட்டுக் கோட்டத்து ஆனந்தமங்கலத்தில் *ஜினகிரிப்பள்ளி* என்ற

---

75 Dr. C. Minakshi, Administration and Social life under the Pallavas, p. 114

76 R. Gopalan, Pallavas of Kanchi, p. 109

77 *சம்பந்தர் புராணம், செ. 678-854; 904-925.*

78 S. I. I., I. III. 92   79 201 of 1902

பெயருடன் ஒரு பள்ளி இருந்தது.[80] (4) அதே காலத்தில் திருப்பான்மலை என்ற இடத்திற் சமணர் பலர் குடியிருந்தனர். அவர்கட்குக் குருவாக இருந்தவர் அரிஷ்டநேமி பட்டாரர் என்பவர். அவர் மாணவியரான ***பத்தினிக் குரத்தியடிகள்*** 'விளாப்பாக்கம்' என்ற சிற்றூரில் சமணப் பெண் துறவிகள் மடம் ஒன்றை அமைத்தார்.[81] (5) முதல் இராசராசன் காலத்தில் திருநறுங்கொண்டை, திருமழபாடி, திருமலை, குஹீர், தாதாபுரம் முதலிய ஊர்களில் ***சமணப் பள்ளிகள்*** இருந்தன.[82] (6) காஞ்சி நகரின் ஒரு பகுதியான திருப்பருத்திக்குன்றம் '***ஜினகாஞ்சி***' எனப் பெயர் பெற்றது. அங்குக் குலோத்துங்கன் காலத்தில் சமணத் துறவிமார் 'ரிஷி சமுதாயம்' என்ற பெயரால் இருந்து வந்தனர்;[83] அச்சமுதாயம் விக்கிரம சோழன் காலத்திலும் இருந்தது[84] சேக்கிழார்க்குப் பிற்பட்ட காலத்தும் இருந்தது.[85]

சோழர் காலத்துப் பௌத்தம்: நாகப்பட்டினம், பல்லவர் காலத்திற் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. அங்கு இராசசிங்கன் என்ற பல்லவ மன்னன், பௌத்த விஹாரம் ஒன்றைச் சீனர் (பௌத்த வாணிகர்) தொழுகைக்காகக் கட்டினன் என்று சீன நூல் கூறுகின்றது.[86] அத்தகைய கோவில் ஒன்று முதல் இராசராசன், முதல் இராசேந்திரன், முதல் குலோத்துங்கன் இவர்களாற் சிறப்பிக்கப் பெற்றது.[87] எனவே, அப் பௌத்த விஹாரம் நம் சேக்கிழார் காலத்தில் நன்னிலையில் இருந்ததென்னலாம். சோழப் பேரரசின் முதல் அமைச்சரான சேக்கிழார் அச் சீன வணிகருடன் அளவளாவி இருத்தல் கூடியதே என்க.[88]

சேக்கிழார் முன் நூல்களிலில்லாத நாயன்மார் பற்றிய குறிப்புக்கள் பலவற்றைத் தம் புராணத்தில் கூறியுள்ளார்.

---

80 430 of 1922
81 53 of 1900
82 385 of 1902; 288 of 1917; S. I. I. I· 67 & 68
83 382 of 1929
84 381 of 1929
85 43 of 1890
86 Dr. C. Minakshi, Administration and Social Life under the Pallavas, p. 68
87 K. A. N. Sastry, Cholas, ed. 2, p. 656.
88 *டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 190–192.*

அவற்றுட் சில செவிவழிச் செய்தியாக இருத்தல் கூடும். சேக்கிழார் மேலே கூறப்பட்ட பலவகை நூல்கள், செவிவழிச் செய்திகள், நாயன்மார் பற்றிய கல்வெட்டுச் செய்திகள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலிய பலவற்றையும் தாம் பாடிய பெரிய புராணத்திற்கு ***மூலங்களாகக் கொண்டார்*** என்பது, நுணுகி ஆராயுமிடத்து அறியப்படும் உண்மையாகும்.

சேக்கிழார், நாயன்மார் சென்று வழிபட்ட எல்லாக் கோவில்களையும் நேரிற் சென்று கண்டவர்; நாயன்மார் வாழ்ந்த ஊர்களை நேரிற் கண்டவர்; தம் காலம் வரையில் இருந்த இலக்கிய நூல்களை நன்கு பயன்படுத்தியவர்; நாயன்மார் வாழ்ந்த காலத்துத் தமிழக வரலாற்றைக் கல்வெட்டுகளின் துணையைக் கொண்டும் அரசமரபினரின் துணையைக் கொண்டும் அறிந்து, தம் நூலுள் பாடியவர். இவற்றை அடுத்த பகுதியில் எடுத்துக் காட்டுவோம்.

சொற்பொழிவு - II

சேக்கிழார் - வரலாற்று அறிஞர்

கி. பி. 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆங்கில ஆசிரியரான *தாமஸ் கார்லைல்* என்பவர் மகா பெரெடரிக் என்பவரது வரலாற்றை எழுத விரும்பினுர்; அப் பேரரசர் போரிட்ட போர்க் களங்கள், வாழ்ந்த அரண்மனைகள், பயன்படுத்திய நூல் நிலையங்கள் முதலிய அனைத்தையும் நேரிற் சென்று பார்வையிட்டார்; வல்லார்வாய்க் கேட்டுணர்ந்து பல செய்திகளை யறிந்தார்; இங்ஙனம் பலவாறு முயன்று அவ் வரலாற்றை எழுதி முடித்தார். இவ்வாறு அவர் அரும்பாடுபட்டு எழுதினமையாற்றுன் அந்நூல் சிறந்த நூலென்று மதிக்கப்படுகிறது.

தாமஸ் கார்லைல் கி. பி. 19-ஆம் நூற்றுண்டில் மேற்கொண்ட ஆராய்ச்சி முறையை நம் சேக்கிழார் பெருமான் கி. பி. 12-ஆம் நூற்றுண்டிலேயே – கார்லைலுக்கு 700 ஆண்டுகட்கு முன்பே மேற்கொண்டார்என்பதற்கு அவரது பெரிய புராணமே ஏற்ற சான்றுகும். அந்த உண்மையை இங்குக் காண்போம்.

சேக்கிழார் தலயாத்திரை : சேக்கிழார் சோழப் பேரரசனின் முதலமைச்சர் ஆதலால் தமது அரசாங்க அலுவல் முறையில் சோழப் பெருநாடு முழுமையும் சுற்றிப் பார்க்க அவருக்கு வாய்ப்பிருந்தது. அவருக்கு இயல்பாக இருந்த சைவப் பற்றினுலும், நாயன்மார் வரலாற்றுச் செய்திகளைத் தொகுக்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும் அந்த நாயன்மார் தொடர்பான ஊர்களையும் அவர் வழிபட்ட கோவில்களையும் கண்டிருக்கலாம். சேக்கிழார் காலத்தில் திருக்கோவலூர் மலையமான்கள், பல்லவ மரபைச் சேர்ந்த காடவராயர்கள், திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட முனையதரையர்கள், கொடும்பாளூரை ஆண்ட சிற்றரசர்கள் எனப் பலதிறப்பட்ட சிற்றசர்கள் சோழப் பேரரசருக்கு அடங்கி இருந்தனர்

என்பது வரலாறு அறிந்த உண்மையாகும். சேக்கிழார் தமது தலயாத்திரையின் போது இந்த மரபுகளைச் சேர்ந்த நாயன்மார் பற்றிய செய்திகளை இச் சிற்றரசர்களிடமிருந்து கேட்டுத் தொகுத் திருத்தலும் கூடியதே என்னலாம். சேக்கிழார் இங்ஙனம் தமிழகம் முழுமையும் சுற்றி, நாயன்மார் பற்றிய பல செய்திகளை யறிந்தவர் என்பதற்குப் பல சான்றுகளைக் கூறலாம்: அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம் :

(1) கண்ணப்பர் வரலாற்றைப் பாடிய பரணர், நக்கீரர். நம்பியாண்டார்நம்பி முதலியோர் ***பொத்தப்பி நாட்டின்*** சிறப்பு, உடுப்பூரின் சிறப்பு, உடுப்பூருக்கும் காளத்திக்கும் இடைபட்ட நில அமைப்பு, கண்ணப்பர் உடுப்பூரை அடுத்த காட்டிலிருந்து வேட்டை ஆடிக்கொண்டே காளத்தி வந்தமை, காளத்தி மலை வருணனை முதலியவற்றைத் தம் பாடல்களில் கூறவில்லை. ஆயின், இவையனைத்தும் சேக்கிழாரால் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உடுப்பூருக்கும், காளத்திக்கும் உள்ள தொலைவு ஏறத்தாழ 40 கல். இத் தொலைவு முழுமையும் காடுகளும் குன்றுகளும் காணப்படுகின்றன. சேக்கிழார் கூறியுள்ள பொத்தப்பி நாட்டுச் சிறப்பு முதலியன இன்றளவும் ஒத்திருத்தல் காணத் தகும். [1] சேக்கிழார் காலத்தில் பொத்தப்பி நாட்டையாண்டவன் ***மதுராந்தக பொத்தப்பிச் சோழ சித்தரசன்*** என்பவன் இவனும் இவன் முன்னோரும் பின்னோரும் காளத்திக் கோவிலுக்குச் செய்த திருப்பணிகள் பல என்பதைக் காளத்திக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. [2] சேக்கிழார் பொத்தப்பி மன்னன் உதவி கொண்டு பல இடங்களைப் பார்வையிட்டிருக்கலாம் என்று கருதுதல் பொருத்தமாகும்.

(2) சேக்கிழார் திருநாவுக்கரசரது தொண்டைநாட்டு யாத்திரையைப் பற்றிக் கூறுமிடத்து, "திருநாவுக்கரசர் திருவாலங்காடு பணிந்தார்; பின்பு பல்பதியும் நெடுங்கிரியும் படர் வனமும் கடந்து காரிக் கரையை அடைந்தார்," என்று கூறியுள்ளார். [3] திருவாலங்காட்டிற்கும் காரிக்கரைக்கும் இடையில்

---

1 C. M. Ramachandra Chediar's article in C. K, S. Mudaliars, Periyapuranam, Vol. II.

2 572 of 1907; 102, 103 and 108 of 1922.

3 *திருநாவுக்கரசர் புராணம், செ. 341-343.*

மலைகளும் காடுகளும் இடையிடையே ஊர்களும் இருத்தலை இன்றும் காணலாம். இன்று பல இடங்களில் காடுகள் அழிக்கப் பட்டன. இங்ஙனம் சேக்கிழார் அப்பர் சென்ற யாத்திரையைக் குறித்துக் கூறியுள்ள குறிப்புக்கள் சரியானவை என்பது ஆராய்ச்சி அறிஞர் முடிவாகும்.[4]

(3) சேக்கிழார் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் தொண்டை நாட்டுக் குறிஞ்சி முதலிய நிலப்பகுதிகள், அவற்றின் இயல்பு, அந்நிலப் பகுதிகளில் அமைந்துள்ள சிறப்புடைய ஊர்கள், அவ்வூர்களைப் பற்றிய சிறப்புக்கள் ஆகியவற்றை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்; திணை மயக்கம் பெற்றிருந்த பகுதி களையும் குறித்துள்ளார். இவை அனைத்தும் இன்றளவும் உண் மைக் காட்சிகளாக விளங்குகின்றன. சேக்கிழார் தொண்டை நாடு முழுமையும் நன்கு சுற்றிப் பார்த்தவர் என்பதற்கு இந்த உண்மைகள் ஏற்ற சான்றாகும்.

(4) திருநாவுக்கரசர் தமது யாத்திரையில் சில தலைமை ஊர்களில் தங்கி, அங்கிருந்து சுற்றியுள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டு மீண்டும் தாம் தங்கியிருந்த தலைமை ஊர் களுக்கு வந்து சேர்ந்தனர் என்று சேக்கிழார் குறித்துள்ளார்.[5] அவர் இங்ஙனம் குறித்த ஒவ்வொரு சிறப்புத்தலமும் அதனைச் சூழ உள்ள தலங்களும், அவர் கூறியபடியே இன்றும் அமைந் திருத்தல் கண்டு இன்புறுதற்குரியது. இங்ஙனமே சம்பந்தர், சுந்தரர் வரலாறுகளிலும் பல சிறப்புடைய தலைமைத் தலங்கள் கூறப்பட்டுள்ளன.

(5) "அப்பர் திருப்பழனத்திலிருந்து ***காவிரித் தென் கரையே சென்று*** திருநல்லூரை அடைந்தார்.[6] சம்பந்தர் தில்லை யிலிருந்து திருமுதுகுன்றம் போகையில் ***நிவாநதிக் கரைமீது மேற்கு நோக்கிச் சென்றார்;***[7] வடகரை மாந்துறை பணிந்து பிற தளிகளையும் பாடி ***மழநாட்டுப் பொன்னி வடகரைமிசைப் போய்த்***

---

4 Dr. S. K. Ayyangar, 'Manimekalai in its Historical Setting', p. 46,
5 *திருநாவுக்கரசர் புராணம், செ. 195-213, 228, 240 முதலியன*
6 *திருநாவுக்கரசர் புராணம், செ. 213*
7 *சம்பந்தர் புராணம், செ. 177*

திருப்பாச்சில் ஆச்சிராமத்தை அடைந்தார்; [8] திருவீங்கோய் மலையைத் தொழுத பிறகு ***கொங்கிற்குடபுலம்*** சென்றடைந்தார்; [9] வெஞ்சமாக் கூடலைப் பணிந்த பிறகு ***கிழக்கு நோக்கி*** வந்தார்; கருவூரை அடைந்தார்; [10] ***காவிரிக் கரைமீது சென்றே*** திருத் துருத்தி (குற்றாலம்) அடைந்தார்; பிறகு ***அந் நதிக்கரையில் உள்ள*** மூவலூரைப் பணிந்தார். [11] சுந்தரர் சேரமானுடன் சேரநாடு செல்ல ஆரூரிலிருந்து புறப்பட்டு ***மேற்பால் சென்றார்; காவிரித் தென்கரை போய்ச்*** சிவன் கோயில்கள் பல பணிந்து திருக்கண்டி யூரை அடைந்தார்; வடகரையில் திருவையாறு எதிர் தோன்றி யது ... " என்று சேக்கிழார் பெருமான் ஆற்றின் பெயர்களையும், நாயன்மார் சென்ற கரைகளையும் அக் கரைகளில் அவர்கள் வழி பட்ட கோவில்களையும், அக்கரைகள் வழியே அவர் சென்ற நாடு களையும் குறித்துள்ளதையும், அவை இன்றளவும் பொருத்தமாக இருத்தலையும் நோக்க — ***இப் புலவர் பெருமான் தமிழகத்து நில அமைப்பு, நாட்டு அமைப்பு, கோவில் அமைப்பு, முதலியவற்றை மிகத் தெளிவாக அறிந்த பெரியார்*** என்பது நன்கு விளக்க மாகும். [12]

சேக்கிழார் நாயன்மார் ஊர்கள் இன்னவை என்று ஐயத் திற்கு இடமின்றித் தெளிவாகக் குறித்துள்ளார். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க :

(1) *நந்தனார் – ஆதனூர்* : நம்பி தமது திருவந்தாதியில் நந்தனரது ஊர் ஆதனூர் என்று மட்டுமே குறித்தார். தமிழகத் தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட் டங்களில் ஏறத்தாழ 25 ஆதனூர்கள் உள்ளன. இவற்றுள் நந்தனர் எந்த ஆதனூரைச் சேர்ந்தவரென்பது படிப்பவர்க்குத் தெளிவாகத் தெரியவேண்டும் அல்லவா? சேக்கிழார், " ***கொள் ளிடத்தின் கரையிலிருப்பது ஆதனூர்; அது மேல்காநாடு என்பதைச் சேர்ந்தது*** " [13] என்று தெளிவாகக் கூறியுள்ளார். கொள்ளிடத்

---

8 ஷை 310 *9 ஷை செ. 323.*
10 ஷை செ. 338–339 *11 ஷை செ. 435–436*
12 டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 207–208
13 திருநாளைப்போவார் புராணம், செ. 1

தின் வடகரையில் உள்ள இந்த ஆதனூர்க்கு அண்மையில் திரு ஓமாம்புலியூர் என்ற பாடல்பெற்ற தலம் உள்ளது. அவ்வூர் மேல் கானுட்டைச் சேர்ந்தது என்று அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. [14]

(2) *பெருமிழலைக் குறும்பர்* ‘ மிழலை ’ என்ற ஊரினர் என்பது நம்பி கூற்று. சுந்தரர் தமது நாட்டுத்தொகைப் பதிகத்தில் “ *மிழலை நாட்டு மிழலை, வெண்ணி நாட்டு மிழலை* ” என்று பாடியுள்ளார். இதனுல் மிழலை என்ற பெயருடன் இரண்டு ஊர்கள் இருந்தமை தெளிவாகும். இதனைக் கவனித்த சேக்கிழார், குறும்ப நாயனுரது ஊர் எது என்பதை ஆராய்ந்து, “ *மிழலை நாட்டுப் பெருமிழலை* ” என்று கூறினுர். இது கும்பகோணம் வட்டத்தில் அமைந்துள்ளது.

(3) *இடங்கழி நாயனுரது ஊர் :* ***இருக்கு வேளூர்***, என்று நம்பி குறித்தார். சேக்கிழார், இடங்கழியார் ஊர் – “கோனுட்டுக் கொடி நகரம் ***கொடும்பாளூர்*** ” என்று தெளிவாகக் கூறியுள்ளார். சேக்கிழார் காலத்தில் கொடும்பாளூரை ஆண்ட சிற்றரசர் சோழரோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். ஆதலால் சேக்கிழார் கொடும்பாளூர் அரசமரபினரைக் கலந்தும் கொடும்பாளூர்க்குச் சென்று நேரில் விசாரித்தும் உண்மையை உணர்ந்திருக்கலாம்.

(4) *கணம் புல்ல நாயனுர் ஊர் .* இருக்குவேளூர் என்று நம்பி குறித்தார். சேக்கிழாரும் அதை ஒப்புக்கொண்டு, அது ***வட வெள்ளாற்றுத் தென்கரையில் உள்ளது*** என்று கூறியுள்ளார். நம்பி, இடங்கழியார் ஊரும் கணம்புல்லர் ஊரும் இருகுவேளூர் என்று கூறியிருப்ப, சேக்கிழார் இடங்கழியார் கொடும்பாளூரினர் என்றும், கணம்புல்லர் இருக்குவேளூரினர் என்றும் **கூறி**யிருத்தல், அவரது ஆராய்ச்சித் திறனை அறிவிப்பதாகும்.

(5) *மானக்கஞ்சாறர் ஊர் :* இவர் ஊரை இவரது பெயர் கொண்டு ஊகிக்கக்கூடிய அளவிலேயே சுந்தரரும் நம்பியும் குறித்தனர். ஆயின், சேக்கிழார் அஃது இன்னவூர் என்பதனை

---

14 504 and *506* of *1926.*

ஆறு செய்யுட்களால் விளக்கியுள்ளார். அவ்வூர் ஆனந்த தாண்டவபுரம் என்பது. அவ்வூரின் கீழ்ப்பகுதியில், "பஞ்சஷ்டீசர்" கோவில் ஒன்று உள்ளது. அவ்வூர் கோவிலுள் வைத்துப் பூசிக்கப்படுகின்ற *மாவிரதியார், மானக்கஞ்சாறர்* படிமங்கள் மிகப் பழையவை; அவை 45 ஆண்டுகட்கு முன்பு நிலத்தினின்றும் எடுக்கப்பட்டவை. அவ்வூரின் மேல்புறம் 'வல்லத்து வழி' எனப்படும் பகுதியில் உள்ள நிலங்களில் இப்போதும் ***கரும்புப் பயிர்*** மிகச் செழித்து விளைகிறது. இது "வயற் கரும்பின் கமழ் சாறூர் கஞ்சாறூர்" என்ற சேக்கிழார் குறிப்பை விளக்கி நிற்கிறது என்னலாம். இதனை நோக்க, '***கருப்பஞ்சாறூர்***' என்பது '***கருஞ்சாறூர்***', ***கஞ்சாறூர்*** என மருவியதோ என்று நினைக்க இடமுண்டு. அஃதாயின், இப் பகுதியின் பழைமை போற்றத் தக்க பழைமையாகும் என்பதில் ஐயமில்லை. [15]

நாயன்மார் மரபுகள் : நம்பி தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் ஏறத்தாழ இருபத்தெட்டு நாயன்மார் மரபுகளை மட்டும் கூறியுள்ளார். ஆயினும் சேக்கிழார், எறிபத்தர், குலச்சிறையார், தண்டியடிகள், திருமூலர், கணம்புல்லர், காரிநாயனர் ஆகிய அறுவர்க்கே மரபு கூறவில்லை; அவர் தலயாத்திரையின் போது அவ்வந் நாயன்மார் பிறந்த ஊர்களில் மரபுகளைக் கேட்டறிந்தவராதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட அறுவர்க்கு மட்டும் மரபு கூறுதது, அவருடைய சாத்திரீய ஆராய்ச்சி அறிவை நன்கு விளக்குவதாகும்.

மடங்கள் : சேக்கிழார் காலத்தில் பல மடங்கள் தமிழகத்தில் இருந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் மெய்ப்பிக்கின்றன. ஆயினும், வரலாற்று உணர்ச்சியுடைய சேக்கிழார் அவை அனைத்தும் நாயன்மார் காலத்தில் இருந்தன என்று கூறுமல் திருவதிகை, சித்தவடம், திருநல்லூர், திருவீழிமிழலை, மதுரை முதலிய சில இடங்களில் மட்டுமே நாயன்மார் காலத்தில் மடங்கள் இருந்தன என்று கூறியுள்ளார்.

ஓவியங்கள் : சேக்கிழார் தமக்கு முற்பட்ட தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்களைக் கண்டு அக்காட்சிகளைச் சுந்தரர் வரலாற்றில் விளக்கியுள்ளார்.

---

15 டாக்டர் மா. இராசமாணிக்கனர், பெரியபுராண ஆராய்ச்சி, பக் 212-213.

சிவபெருமான் சுந்தரரை ஆட்கொண்ட வரலாற்றை விளக்கும் ஓவியமும், சேரமான் பெருமாளும் சுந்தரரும் கயிலை சென்ற ஓவியமும், அவர்களை வரவேற்றுக் கந்தருவர் இசை முழங்குதலையும் மலர்மாரி பெய்தலையும் குறிக்கும் ஓவியமும் சேக்கிழார்க்குப் பெரிதும் பயன்பட்டன என்னலாம்.

சண்டேசப்பதம் உணர்த்தும் சிற்பம் : "சேக்கிழார் காலத்துச் சிற்பங்களில் அவரது உள்ளத்தைக் கவர்ந்தது, கங்கைகொண்ட சோழபுரத்துச் சிவன்கோவிலில் உள்ள விசார சருமர் 'சண்டேசப் பதம்' பெற்றதைக் குறிக்கும் சிற்பமாகும். இறைவன் உமையம்மையோடு அமர்ந்து, தமது மடித்தூன்றிய வலக்கால் அடியில் சண்டேசரை அமரவைத்து, தாம் சூடியிருந்த கொன்றைமாலையை எடுத்து அவர் முடிமீது சூட்டிச் சண்டேசப்பதம் அருளும் இச் சிற்பம் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பதாகும். இதற்கு வலப் புறம் கணநாதர் ஆடிப்பாடிக் களித்தலும், இடப்புறம் பசுக்கள் நிற்றலும் (பசுக்கள் வேதங்களைச் சுட்டுவன) காட்டப்பட்டுள்ளன. இச் சிற்பம் கோவில் கட்டப்பட்ட காலத்தது என்பதில் ஐயமில்லை. சேக்கிழார் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரமே சோழப் பெருநாட்டின் தலை நகரமாக இருந்தது. ஆதலின், சேக்கிழார் நாள்தோறும் இக் கோவிலைத் தரிசித்தார் எனக் கொள்ளலாம். அங்கிருந்த இச் சிற்பம் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதனால் அவர் இச் சிற்பத்து அமைப்பை இரண்டு பாக்களால் சித்தரித்து விட்டார்.[16] இச் சிற்பத்தையும்

16 (1) "*அண்டர் பிரானும் தொண்டர்தமக்*
கதிப னாக்கி 'அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காச்
சண்டே சனுமாம் பதந்தந்தோம்'
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

(2) "*எல்லா வுலகும் ஆர்ப்பெடுப்ப*
எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர்
பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச்
சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா (று) ஓங்க நாயகமாம்
நங்கள் பெருமான் தொழுதணைந்தார்."

—*சண்டேசர் புராணம்*, செ. 56, 57,

சேக்கிழார் பாக்களையும் கண்டோர் இவ்வுண்மையை நன்குணர்வர்.[17]

நாயன்மார் உருவச்சிலை : அமர்நீதி நாயனாரும் அவர் மனைவியாரும் சிவனடியார் தந்த கோவணத் துணிக்கு ஈடாகத் துலைபுக்கனர் என்று நம்பியாண்டார்நம்பி கூறினார்.[18] ஆயின், சேக்கிழார் அவ்விருவருடன் அவர்தம் ***மைந்தனும் துலைபுக்கனன்*** என்று கூறியுள்ளார்.[19] சேக்கிழார் நம்பியின் கூற்றுக்கு மாருகக் கூறக் காரணம் யாது? பழையாறை வடதளியில் அமர் நீதியார் சிலையும் அவர் மனைவியார் கைகளில் ***ஆண்மகவு*** இருத் தலைக் காட்டும் சிலையும் இன்றும் உள்ளதைக் காணலாம். சேக் கிழார் மாற்றிக் கூறியதற்கு இவ்வம்மையார் சிலையே ஏற்ற காரணமாகும்.

இதுவரையில் கூறப்பெற்ற பல சான்றுகளால், சேக்கிழார் தமிழகத்தை நன்கு சுற்றிப் பார்த்தவர் என்பதும், நாயன்மார் வாழ்ந்த ஊர்கள்; பாடல் பெற்ற கோவில்கள், அக் கோவில்களி லிருந்த ஓவியங்கள், சிற்பங்கள் திருவுருவங்கள், முதலியவற்றை ஏறத்தாழ நேரிற் கண்டவரென்பதும் தெளிவாதல் காணலாம்.

மத்த விலாசம் : திருநாவுக்கரசர் காலத்துப் பல்லவ அரசன் முதல் மகேந்திரவர்மன் என்பது வரலாறு கண்ட உண்மை. அவன் சமண முனிவர் தூண்டுதலால் திருநாவுக்கரசரை விசா ரிக்கத் தன்னிடம் அழைத்து வரும்படி தன் அமைச்சரை ஏவினான்; அங்ஙனம் ஏவும்பொழுது, " தருமசேனனிடம் (திருநாவுக்கரச ரிடம்) ***பொருள் கொண்டு விடாது*** என்னிடம் அழைத்து வருக "[20] என்று எச்சரிக்கை செய்தான் என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

முதலாம் மகேந்திரவர்மன் சிறந்த அறிஞன்; இசை, நடனம், இலக்கியம், கோவில் அமைத்தல் முதலியவற்றில் வல்லவன். பொறுப்புள்ள அப் பெருமகன் தன் அமைச்சரை நோக்கி, " அவ

---

17 டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 218.

18 திருத்தொண்டர் திருவந்தாதி, செ. 7

19 அமர்நீதி நாயனார் புராணம், செ. 40

20 திருநாவுக்கரசர் புராணம், செ. 90

னிடம் கைக்கூலி பெறுமல் அழைத்து வருக, என்று கூறினுன்,'' என்று சோழப் பேரரசின் முதல் அமைச்சரான சேக்கிழார் சான்று இன்றிக் கூறுர் அல்லவா? இதற்குச் சான்று மத்தவிலாசம் என்னும் வேடிக்கை நாடகத்தில் உள்ளது. அதனை இயற்றிய மகேந்திரவர்மன், அந் நாடகத்தில் காபாலினி ஒருத்தி கூறுவது போலக் கீழ்வரும் செய்தியைக் கூறியுள்ளான்: "பௌத்த பிட்சுமீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வது நம்மால் இய லாது. அதற்குக் காரணம், அவன் பௌத்த விகாரத்தில் சேர்ந் துள்ள பணத்தைக் கொண்டு *நீதிபதிகள் வாயை அடைத்து விடு வான்*'' என்பதே. இங்ஙனம் தனது தலைநகரில் இருந்த நீதிபதி களைப் பற்றித் தன் நூலிற் குறித்துள்ள பல்லவ மன்னன், தன் அமைச்சரிடம் அங்ஙனம் கூறியதாகச் சேக்கிழார் பாடியிருத்தல் பொருத்தமே யாகும். இதனுல் சேக்கிழார் திருமுறைகளையே அன்றிப் *பிற நூல்களையும்* ஆராய்ந்து குறிப்புக்கள் தயாரித்தவர் என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இனிச் சேக்கிழார் *கல்வெட்டுக்களை* ஆராய்ந்த திறத்தினைக் காண்போம்.

1. *மநுச்சோழன்*: சேக்கிழார் நகரச் சிறப்பைக் கூறுகை யில், திரு ஆரூரைத் தலைநகராய்க் கொண்டு சோழநாட்டை ஆண்ட மநுச் சோழனது செங்கோல் ஆட்சியை அவனது வர லாற்றுல் விளக்கியுள்ளார். அவ் வேந்தன், தன் ஒரே மகன் ஊர்ந்த தேர்க்காலில் அகப்பட்டு மடிந்த கன்றுக்காகத் தன் மகனையே அத் தேர்க்காலில் இட்டுக் கொன்ருன் என்பது கதைச் சுருக்கம். இக் கதையை மூன்று வரிகளில் முதன் முதல் நமக்கு அறிவிக்கும் நூல் சிலப்பதிகாரமாகும். இக் கதை திருமுறை களில் இடம் பெறவில்லை; 11, 12 ஆம் நூற்றுண்டுகளில் செய்யப் பட்ட பரணியிலும் உலாக்களிலும் இரண்டு மூன்று வரிகளில் கூறப்பட்டுள்ளது. சேக்கிழார் ஒருவரே இச் சோழனது முழு வரலாற்றையும் ஏறத்தாழ 38 செய்யுட்களில் விளக்கமாகக் கூறி யுள்ளார். இக் கதை சேக்கிழார்க்கு எங்ஙனம் கிடைத்தது? திரு வாரூர்ச் சிவன்கோவில் இரண்டாம் திருச்சுற்றின் வடபுறச் சுவரில் ஒரு *நீண்ட கல்வெட்டு* உள்ளது. அது *விக்கிரம சோழ னது* ஐந்தாம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1123 இல் வெட்டப்

பட்டது. அது, திருவாரூரில் கோவில் கொண்டுள்ள சிவபெருமானே மநுச்சோழன் வரலாற்றைக் கூறுவதுபோல வெட்டப்பட்டுள்ளது. அக் கல்வெட்டு வாசகத்தைக் கீழே காண்க :

"சுவஸ்திஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ.......... *ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு* யாண்டு அஞ்சாவது.......... நம் ஏவலால்" பூலோக ராஜ்யஞ் செய்கிற சூர்யபுத்ரன் *மநு* தன் புத்ரன் ஏறி வருகிற தேரில் பசுவின் கன்றகப்பட்டு ப்ரமாதப்பட, அதின் மாதாவான *சுரபி* கண்டு துக்கித்து மநுவின் வாசலில் மணியை யெறிய, அதுகேட்டு மநு தன் மந்திரி *இங்கணாட்டுப் பாலையூருடையான் உபய குலாமலனைப்* பார்த்து நீ சென்று இதனை அறிந்து......... வாயிற்புறத்து ஒரு பசு மணி எறியா நின்றது என்று சொல்ல, அது கேட்டு மநு புறப்பட்டுப் பசுவையும் பட்டுக் கிடந்த,........படி வினவி, தன் புத்ரன் ஏறின தேரிலே பட்டமை அறிந்து, அக் கன்றுக்கு நேராகத் தன் புத்ரன் *ப்ரியவ்ருத்தனைத்* தேரிலே ஊர்ந்து குடுக்கவென்று உபயகுலாமனுக்குச் சொல்ல, அவன் சந்தாபத்தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்துகொண்டு........துக்கிதனாய் மநு தானே புறப்பட்டுத் தன் புத்ரனைத் தானே தேரிலே ஊர்ந்து குடுக்க, அப்போதே *நாம் அவனை அநுக்கிரக்கித்துக் கன்றுக்கும் மந்திரிக்கும் மநு புத்ரனுக்கும் ஜீவன் குடுக்க,* அது கண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்துக்கொண்டு பசுவுக்கு காட்டிக் குடி........ா பிஷேகம் பண்ணி இவனுக்கு உபயகுலாமன் மகன் சூரியனை மந்திரியாக்கி, இவனுக்குத் தன் புத்ரன் மாளிகை......மங்கல... ...மூரும் கொடுத்து மநுவும் உபயகுலாமலனும் தபசினைத் தலை நின்றமையில், பாலையூர் உடையான் உபயகுலாமலன் வம்சத்தனாகிய பாலையூர் உடையான் சந்திரசேகரனாதி விடங்கனான குலோத்துங்க சோழ மகாபலிவாண..... வம்சாதியாக வருகிற மாளிகைமனை பழயபடி மாளிகை ஆக எடுத்துக் குடிவைப்பிப்பதாக நாம் சொல்ல......" [21]

2. *மூர்த்தியார்* என்ற வணிகர் மதுரையில் சிவத்தொண்டு செய்திருந்த பொழுது *வடுகக் கருநாடர் வேந்தன்* கடல் போன்ற தானையோடு வந்து பாண்டியநாட்டைக் கைப்பற்றிக் கொண்

21 S. I. I. V 456

டான். அவன் சமணச் சார்புடையவன் ஆதலால் மூர்த்தியாரின் சிவத்தொண்டுக்கு இடையூறு செய்தான்; சிவ வழிபாட்டை ஒழிக்க முயன்றான் என்பது சேக்கிழார் வாக்கு. [22]

கூற்றுவநாயனார் சோழநாட்டை வென்றவர். அவர் தமக்கு முடிசூட்டுமாறு தில்லைவாழ் அந்தணரை வேண்டினார். அவர்கள், 'சோழார்க்கன்றிப் பிறர்க்கு முடிசூட்டோம்' என்று கூறி மறுத்தனர்; அவரது சீற்றத்திற்கு அஞ்சிச் சேரநாடு புகுந்தனர். இது சேக்கிழார் கூற்று. [23]

இவ்வாறு தமிழ்நாட்டைக் கைப்பற்றிய வேற்று நாட்டு மன்னன் *அச்சுதவிக்கந்தன்* என்பது புத்ததத்தர் வாக்காலும் தமிழ் நாவலர் சரிதையிலுள்ள பழம் பாக்களாலும் அறியப்படும்.

> "அளவரிய வதிராசரை யகலநீக்கி யகலிடத்தைக்
> *களப்பர னெனுங்* கலியரைசன்
> கைக் கொண்டதனை யிறக்கியபின்" [24]

என்ற வேள்விகுடிச் செப்பேட்டுச் செய்தி, தமிழ் நாட்டின்மீது அயலார் படையெடுப்பை உறுதிப்படுத்துவதாகும்.

3. *குணபரஈசுவரம்* : திருநாவுக்கரசர் காலத்து அரசன் குணபரன் என்ற விருதுப் பெயரை உடையவன். அவன் முதலில் சமணனாக இருந்தவன்; பின்பு சைவனாக மாறியவன். அவன் பாதிரிப்புலியூரிலிருந்த சமணப் பள்ளியையும் பாழிகளையும் இடித்து, அச் சிதைவுகளைக் கொண்டு திருவதிகையில் *குணபர ஈசுவரம்* கட்டினான் என்பது சேக்கிழார் கூற்று.

குணபரன் என்பது முதலாம் மகேந்திரவர்மன் விருதுப் பெயர்களுள் ஒன்று என்பது கல்வெட்டுக் கூறும் உண்மை. [25] இவன் முதலில் சமணனாக இருந்து பின்பு சைவனாக மாறினான் என்பதை "*குணபரனை* மாற்று வழியிலிருந்து திருப்பிய அறிவு இந்த லிங்கத்தால் உலகில் நெடுநாள் பரவி நிலைபெறுவதாகுக." [25a]

---

22 *மூர்த்திநாயனார் புராணம், செ. 11-17.*
23 *கூற்றுவநாயனார் புராணம், செ. 2—7*
24 Ep. Ind. 17 No. 16
25 S. I. I. I. 34.

என்னும் இவனது திருச்சிராப்பள்ளிக் குகைக்கோவில் கல்வெட்டால் அறியலாம்.

திருப்பாதிரிப் புலியூரில் மகேந்திரனுக்கு முன்பே சமண மடம் இருந்து வந்தது. சர்வநந்தி என்ற திகம்பர சமணர் அம்மடத்திலிருந்து 'லோகவிபாகம்' என்ற நூலைக் கி. பி. 5 ஆம் நூற்றுண்டின் இடையில் எழுதினுர்[26] என்று அந்நூலின் முகவுரை கூறுகிறது.

4. *வாதாபிப் படையெடுப்பு* : பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் தமது பல்லவ அரசனுக்காக வாதாபியின்மீது படையெடுத்து, அந்தகரத்தை அழித்து, பெருஞ்செல்வத்தையும், கரி, பரி முதலியவற்றையும் கைக்கொண்டு வந்து தம் அரசன் முன்னிலையில் வைத்தார் என்பது சேக்கிழார் வாக்கு.[27] சாளுக்கியர் தலைநகரமான வாதாபியை அழித்த பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மன். வாதாபிப் படையெடுப்பும் அழிவும் கி. பி. 642 இல் நடந்ததாகத் தெரிகிறது. அந் நகரம் அதுமுதல் 13 ஆண்டுகள் பல்லவர் ஆட்சியில் இருந்தது. வாதாபி நகரத்து அழிவுபற்றி முதலாம் விக்கிரமாதித்தன், அவன் மகன் விநயாதித்தன், அவனுக்குப் பின்வந்த கீர்த்திவர்மன் ஆகியோர் பட்டயங்கள் முறையிடுகின்றன.[28] பல்லவன் வாதாபியில் நாட்டிய வெற்றித்தூணும் இவ் வெற்றியை உரைக்கின்றது.[29] பல்லவர்களுடைய கூரம் செப்பேடுகளும் உதய சந்திரமங்கலம் செப்பேடுகளும் வேலூர்ப்பாளையச் செப்பேடுகளும் இவ் வெற்றியைக் குறிப்பிடுகின்றன.[30] இவற்றை நோக்க, சேக்கிழார் கூறிய வாதாபிப் படையெடுப்பு இத்தகைய வரலாற்றுச் சான்று உடையது என்பது நன்கு துணியப்படும்.

5. *நெல்வேலிப் போர்* : திருஞான சம்பந்தர் பாண்டியனையும் பாண்டிய நாட்டையும் சைவ நெறிக்கு மாற்றிப் பல ஆண்டுகள்

25a. Ibind. 33.
26 Mysore Archaelogical Report, 1909-10, p 45
27 *சிறுத்தொண்டர் புராணம், செ. 6*
28 Heras, Studies in Pallava History, p, 34; Ind, Art, 19, 151-152; Ind. Ant. 8-23,
29 Ind. Ant, 9, p. 199.
30 S. I. I. p. 152; Ind, Ant. 8, p. 277; S. I. I. II. p, 508

கழிந்த பின்பு *வடபுலத்து முதல் மன்னன்* (King of the First Rate Power) பாண்டி நாட்டின்மீது படையெடுத்தான். நெல்வேலியில் போர்நடந்தது. பகைவர் படை கடல் போன்றது: போரில் இருதிறத்து வீரரும் இரண்டு கடல்களைப்போலப் போரிட்டனர்; யானைகள் யானைகளோடு போரிட்டன; குதிரைகள் குதிரைகளோடு போரிட்டன. *வெற்றிமகள்* இருவர் பக்கமாக ஊசலாடிக் கொண்டிருந்தாள். இறுதியில் வடபுலத்து முதல் மன்னன் படை சரிந்தது. பாண்டியன் வெற்றி பெற்றான். இது சேக்கிழார் தரும் செய்தி. [31]

"சேக்கிழார் 'வடபுலம்' என்பது, பல்லவர் நாட்டுக்கும் வடக்கேயுள்ள சாளுக்கிய நாட்டைக் குறிக்கும் என்பது, முன்பு சிறுத்தொண்டர் புராணத்துட் கூறிய '*வடபுலத்து* வாதாவி' என்ற தொடர் விளக்கத்தால் அறிக: அறியவே, நெடுமாறனோடு நெல்வேலியிற் போரிட்ட பகைவன் *சாளுக்கிய அரசன்* என்பது பெற்றாம். நெடுமாறன் காலம் கி. பி. 640–680. கி. பி. 642-இல் வாதாபிப் படையெடுப்பு நடந்தது. அது முதல் கி. பி. 654 வரை வாதாபி, பல்லவர் கையில் இருந்தது: அதனால். சாளுக்கியர் வலியற்றவராய்க் கிடந்தனர். வாதாபிப் படையெடுப்பில் தோற்ற இரண்டாம் புலிகேசியின் மகனான *முதலாம் விக்கிரமாதித்தன்* காலம் கி. பி. 654 – 680. நெடுமாறன் காலமும் இத்துடன் ஒத்து வரலால், நெல்வேலிப் போரில் ஈடுபட்ட வடபுலத்து முதல் மன்னன் இவனாகவே இருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

"இம் முதலாம் விக்கிரமாதித்தன் பரமேசுவர வர்மனை (கி. பி. 670 – 685)-ப் போரில் தோற்கடித்துக் காஞ்சியைக் கைப்பற்றிப் பல்லவ நாட்டின் தென் எல்லையான உறையூரில் தங்கினான்; அங்ஙனம் தங்கிய ஆண்டு கி. பி. 674 என்று அவன் உறையூரிலிருந்து விட்ட கத்வல் பட்டயம் குறிக்கிறது. [32] அது, சாளுக்கியன் பரமேசுவரவர்மனை வென்றதை மட்டுமே குறிக்கிறது; பாண்டியன் எதிர்த்ததைக் குறிக்கவே இல்லை. ஆயின், அவனைப் பெருவளநல்லூரில் பரமேசுவரவர்மன் எதிர்த்துக் கடும் போர் புரிந்து வென்றான் என்பதைக் கூரம் பட்டயம் விளக்க

---

31 *நெடுமாற நாயனார் புராணம், செ. 1—7*
32 Ep. Indica, Vol. X No. 22, 101.

மாகத் தெரிவிக்கிறது. சாளுக்கியனுடைய கேந்தூர்ப் பட்டயங்கள் அவன் *சேர, சோழ, பாண்டியருடன்* போரிட்டதைக் குறிக்கின்றன.[33] இவற்றை நோக்க, முதலில் பரமேசுவரவர்மனைத் தோற்கடித்த விக்கிரமாதித்தன், உறையூரில் தங்கினான் என்பதனால், அவன் சோழநாட்டையும் வென்றவனாதல் வேண்டும். அப்பொழுதாண்ட சோழன் மங்கையர்க்கரசியாரின் தந்தை அல்லது உடன் பிறந்தான் ஆகலாம். உறையூர் வரை வெற்றிகொண்ட சாளுக்கியன் எஞ்சியிருந்த பாண்டியனையும் தாக்க முனைந்திருத்தல் இயல்பே. சாளுக்கியன் – பாண்டியன் போர் நெல்வேலியில்[34] நடந்தது. சாளுக்கியன் தோல்வி அடைந்தான். இப்போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் பரமேசுவரவர்மன் பெரும் படையுடன் வந்து பாண்டியர் பக்கம் சேர்ந்திருக்கலாம். முதற்போர் நெல்வேலியில் பாண்டியற்கு வெற்றியளித்தது; இரண்டாம் போர் பெருவளநல்லூரிற் பல்லவனுக்கு வெற்றியளித்தது.

"முதலில் பரமேசுவரனைத் தோற்கடித்துப் பெரு வெற்றியுடன் வந்த சாளுக்கியனை நெடுமாறன் எதிர்த்து நெல்வேலியில் தோற்கடித்ததாற்றான், பின்னர்ப் பரமேசுவரன் அவனை எளிதிற் பெருவளநல்லூரில் எதிர்த்து வெற்றி பெற்றான் என்னலாம்: இப்போரில் பாண்டியன் தோற்றிருப்பின், முழுத் தமிழ்நாடும் சாளுக்கியர் கைப்பட்டிருக்கும். சிறந்த சைவ அரசனாகிய நெடுமாறன் வடபுலத்துப் பேரரசனை வென்று தன்னாட்டு உரிமையைக் காத்ததோடு சைவத்தைத் தமிழ் நாட்டில் நிலைக்கச் செய்தான் என்ற செய்தி சுந்தரர் காலம்வரை நன்றாய்ப் பரவி இருந்ததாற்போலும் அந்நாயனார் தமது தொகையில்,

> "*நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற*
> நின்றசீர் நெடுமாறன்"

என்று பாண்டியனை ஏத்தெடுப்பாராயினர்.

"இங்ஙனம் சுந்தரர் குறித்ததன் கருத்தை நம்பி அறியாவிடினும், அரசியல் அறிவு நிரம்பப்பெற்ற சேக்கிழார் அரும்பாடு

---

33 Ep. Ind. Vol. IX p, 205

34 *சோழ மண்டலத்துத் தென்கரைப் பனையூர் நாட்டு–***நெல்வேலி நாட்டு 'நெல்வேலி'** *இதுவாக இருத்தல் கூடும். –276 of 1916*

பட்டு ஆராய்ந்து, இந் நெல்வேலிப் போரை விளக்கமாக ஐந்து பாக்களில் விளக்கியுள்ளமை வியந்து பாராட்டற்பாலது. சேக்கிழார் குறிக்கும் நெல்வேலிப் போர் வருணனையும் கூரம் பட்டயம் குறிக்கும் பெருவளநல்லூர்ப் போர் வருணனையும் பல இடங்களில் ஒன்றுபட்டிருத்தல் படித்து இன்புறத்தக்கது. இந் நெல்வேலிப் போர், விக்கிரமாதித்தன் கத்வல் பட்டயம் வெளியிட்டபிறகு ஏறத்தாழக் கி. பி. 674 அல்லது 675 இல் நடந்தது என்னலாம்.[35]

6. *பூசலார்* : (1) இவர் திருநின்ற ஊரினர்; (2) இவர் சிவன்கோவில் கட்ட விரும்பிப் பணம் தேட முயன்றார்; முயற்சி பயன்படவில்லை. (3) இவர் மனத்தால் கோவில் அமைத்துக் குறித்த ஒரு நாளில் குடமுழுக்கு விழாச் செய்ய விழைந்தார். அக்காலத்துக் காஞ்சி அரசனான காடவர் கோமான் அதே நாளில் தான் கட்டிய கற்றளிக்குக் குடமுழுக்கு விழா நடத்தத் தீர்மானித்தான். சிவபெருமான் அவன் கனவிற்சென்று பூசலார் குறித்த நாள் தவிர்த்து வேறொரு நாளைக் குறிக்கும்படி கூறினார். அரசன் மறுநாள் நின்றவூர் சென்று, பூசலாரைக் கண்டு, அவர் கட்டியது மனக்கோவில்தான் என்பதை அறிந்து வியந்தான். (4) காஞ்சியில் கற்றளி எடுத்த காடவர்கோன் அதன்பக்கத்து இடங்களையும் அக்கோவிலுக்கு ஆக்கி அதற்குப் பெருஞ் செல்வம் வழங்கினான். இது சேக்கிழார் கூறியுள்ள செய்தியாகும்.[36]

(1) திருநின்றவூர் என்பது சென்னையிலிருந்து ஆர்க்கோணம் செல்லும் இருப்புப்பாதையில் அமைந்துள்ள ஊராகும். இங்குள்ள பெருமாள் கோவில் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.[37] இங்குள்ள சிவன்கோவில் இராசசிங்கன் காலத்தது என்று சொல்லும்படி அவனுக்கே உரிய நின்ற கோலத்திலுள்ள சிங்கத் தூண்களைப் பெற்றிருக்கிறது. கோவிலில் பூசலார் சிலையும் இராச சிங்கன் உருவச்சிலையும் உள்ளன. கோவிலின் பெயர் 'மனக் கோவில் கொண்டார் கோவில்' எனப்படுகிறது. இவ்வூரின்

---

35 *டாக்டர் மா இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக். 231-'33*

36 *பூசலார் நாயனார் புராணம், செய் 1—16.*

37 *பெரிய திருமொழி, 2. 5. 2; 7. 10 5*

பழைமையை இவ்வூரைச்சுற்றி வயல்களிலும் கொல்லைகளிலும் உள்ள சிவலிங்கங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்.

(2) பூசலார் கோவில்கட்ட விழைந்து பொருள்தேட, முயன்றும் கிடைக்கவில்லை என்பது சேக்கிழார் வாக்கு. இதற்குக் காரணம் காஞ்சியில் கயிலாசநாதர் கோவில் கட்டிய இராசசிங்கன் காலத்தில் (பூசலார் காலத்தில்) நாட்டில் உண்டான ***பஞ்சமே*** என்னலாம். அப் பஞ்சத்தின் கொடுமையைப் பல்லவனது அவைப்புலவரான *தண்டி* தாம் எழுதியுள்ள அவந்தி சுந்தரீ கதையில் கீழ்வருமாறு கூறியுள்ளார்.

"தமிழ்நாடு வற்கடத்தால் வாடியது, குடும்பப் பெண்கள் கொடுமையாக நடத்தப்பட்டார்கள்; வேள்விகள் குறைந்தன; களஞ்சியங்கள் காலியாயின; வீடுகட்கு உரியவர் வெளியே விரட்டப்பட்டனர்; நாநயம் கெட்டது; தோட்டங்கள், யாக மேடைகள் முதலியன அழிக்கப்பட்டன; பணக்காரர் கொல்லப் பட்டனர்; சாலைகள் பழுதுபட்டன. உற்றார் உறவினர் இன்றியும் நண்பரால் துறக்கப்பட்டும் தண்டி நாடு முழுவதும் அலைய நேரிட்டது."[38]

இப் பஞ்சம் ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் இருந்தது என்றும் கி. பி. 689 இல் காஞ்சியை அடைந்த வச்சிரபோதி என்ற பௌத்த துறவியார், பல்லவன் வேண்டுகோள்மீது தமது வழிபாட்டின் மூலம் மழையைப் பெய்வித்தார் என்றும் சீனநூல் ஒன்று கூறுகின்றது. இதனுல் பஞ்சத்தின் காலம் கி. பி. 686 முதல் 689 வரையில் என்பது புலனுகும்.[39]

(3) கச்சியில் முதன் முதல் கற்றளி எடுப்பித்த இராசசிங்கன், "இக் கலியுகத்தில் ***அசரீரி கேட்டது*** வியப்பே" என்று கயிலாசநாதர் கோவில் கல்வெட்டுக் கூறுகிறது.[40] இவன் சிறந்த சிவபக்தன் – ஆகமப்பிரியன் – சிவ சூடாமணி அதாவது உருத்திராக்கத்தால் ஆன இலிங்க வடிவத்தையே முடியாக அமைத்து அதனைத் தலையில் அணிந்திருந்தவன். இதிலிருந்து இவனது சைவப்பற்றினை நன்கு அறியலாம். சிவபிரான் இவன்

---

38 Dr. C Minak... Administration and Social life under the Pallavas p. 114

39 Ibid. pp. 115-117. 40 S. I. I. No. 24

கனவிற் சென்று கூறியதாகச் சேக்கிழார் குறித்தமையே, இவன் அசரீரி கேட்டான் என்ற கல்வெட்டுக் குறிப்பாகலாம்.[41]

(4) சேக்கிழார், கயிலாசநாதர் கோவில் ஆகிய கச்சிக் கற்றளியைப் பற்றிக் கூறுகையில்,

" காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாம் சிவனுக் காகப் *பெருஞ்செல்வம்* வகுத்தல்
செய்வான் "[42]

என்று குறித்துள்ளார். ஆயின், அநபாயன் பாட்டனுன முதற் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1070–1120), எக்காரணம் கொண்டோ, கயிலாசநாதர் கோவில் மூடப்பட்டது; அதற்குரிய நிலங்கள் விற்கப்பட்டன; கோவில் திரு விருப்பு, திருமடை விளாகம் முதலியன அண்மையில் உள்ள அனேயபதங்கா உடையார் கோவிலுக்குத் தரப்பட்டன; இங்ஙனம் சிறுமையுற்று மூடப் பட்ட கோவில் சக ஆண்டு 1286 (கி. பி. 1364) ஆடி முதல் திறக்கப்பட்டு விழா நடப்பதாகுக. இதற்கு முருங்கையூர் சர்வ மானியம் ஆகட்டும் என்று கம்பண உடையார் கட்டளை பிறப் பித்தார் என்பது அக்கோவில் கல்வெட்டு ஒன்றால் அறியக் கிடக்கின்றது.[43] இக் கல்வெட்டுச் செய்தி, சேக்கிழார் காலத் தில் (கி. பி. 1133 – 1150) இப்பெருங்கோவில், வெளிச்சுற்று திருமடை விளாகம் முதலியன இல்லாமல் அழகு இழந்து பூட்டப் பட்டு கிடந்தமையை உணர்த்துகிறது. அப்படியிருக்க, சேக் கிழார் மேலே கூறப்பெற்றவாறு பாடியிருப்பதற்குச் சான்று யாது? கயிலாசநாதர்கோவில் கல்வெட்டுக்கள் சில இக் கேள் விக்கு விடை பகர்கின்றன. அவற்றைக் கீழே காண்க:

(a) " இக்கோவில் இராசசிம்மனது புகழையும் சிவனது முறு வலேயும் ஒத்துள்ளது. இஃது அழகில் கயிலாயத்தை வென் றது.[44]

(b) "விக்கிரமாதித்த சத்யாஸ்ரயன் (2 ஆம் விக்கிரமாதித் தன்) காஞ்சியைக் கைப்பற்றியபின்பு, இராச சிம்மேசுவரத்தின்

41 R. Gopalan, Pallavas of Kanchi. p. 109
42 *பூசலார் நாயனர் புராணம், செ. 9*
43 S. I. I. I 86
44 S. I. I. I. 24

செல்வத்தைப் பார்வையிட்டு மகிழ்ந்தான்; அதனை அக் கடவுளுக்கே அளித்துவிட்டான்." [45] இது காஞ்சியைக் கைப்பற்றிய இரண்டாம் விக்கிரமாதித்தனது கன்னடக் கல்வெட்டாகும். இவற்றைக்கொண்டு, கயிலாசநாதர் கோவிலுக்கு இராசசிங்கன் செய்த சிறப்பினை நன்கு அறியலாமன்றோ? அக் கோவில் சோழர் காலத்தில் 'பெரிய கற்றளி' எனப் பெயர் பெற்றது.

சேக்கிழார், தம் காலத்தில் மூடப்பட்டிருந்த ***அக்கோவிலைத் திறந்து***, அங்கு இருந்த கல்வெட்டுக்களைப் படித்தும் அதன் பழம் பெருமையைக் கேட்டறிந்தும் மேலே காட்டப்பெற்ற இரண்டு வரிகளைப் பாடினார் என்று கொள்வது பொருத்தமாகும்.

7. *கழற்சிங்கன்* : மூன்றாம் நந்திவர்ம பல்லவனே கழற்சிங்கன் ஆகலாம் என்பது முன்பே விளக்கப்பட்டது அன்றோ?

"குவலயத் தரனார் மேவுங் ***கோயில்கள் பலவுஞ் சென்று***
தவலரு மன்பிற் றாழ்ந்து ***தக்கமெய்த் தொண்டு***
செய்வார் " [46]

என்று சேக்கிழார் கழற்சிங்கரைப்பற்றிக் கூறியுள்ளார். மூன்றாம் நந்திவர்மன் பல கோவில்களுக்குத் தொண்டு செய்தான் என்பதைக் கீழ்வரும் கல்வெட்டுச் செய்திகள் உணர்த்துகின்றன.

(1) இவன் தனது ஆறாம் ஆட்சியாண்டில் பொன்னேரிக்கு அடுத்த திருக்காட்டுப் பள்ளியில் புதிதாய்க் கட்டப்பட்ட சிவன் கோவிலுக்கு அச் சிற்றூரையே தேவதானமாக வழங்கினான். [47]

(2) இம் மன்னன் திருவதிகை வீரட்டானேசுவரர் முன்பு விளக்கு எரிக்க நூறு கழஞ்சு பொன் கொடுத்தான். [48]

(3) இவ் வேந்தன் தன் விருதுப் பெயர்களுள் ஒன்றான 'குமார மார்த்தாண்டன்' என்ற பெயர்கொண்ட விளக்கு ஒன்றைத் திருவிடை மருதூர்க் கோவிலுக்கு உதவினான். [49]

---

45 Ep. Ind. III. p. 360
46 *கழற்சிங்க நாயனார் புராணம், செ. 3*
47 S. I. I. II. 98. 48 S. I. I. VIII. 309 49 197 of 1907

(4) இவன் திருவொற்றியூர்ச் சிவன் கோவிலுக்கு விளக்கு எரிக்கப் பொன் உதவினன்.[50]

(5) இப் பெருமகன் திருத்தவத்துறை மகாதேவர் கோவிலில் விளக்கு எரிக்கப் பொன் அளித்தான்.[51]

(6) இவ்வரசன் திருக்கடைமுடி மகாதேவர்க்கு நிலதானம் செய்தான்.[52]

8. *நரசிங்க முனையரையர்* : (1) இம் மரபினரைப் பற்றிய கல் வெட்டுக்கள் சிலவாகும். அவற்றுட் பழைமயானது மூன்றும் நந்திவர்மன் மகனை நிருபதுங்கனது (கி. பி. 865–900) 16-ஆம் ஆட்சி ஆண்டுக் (கி. பி. 880) கல்வெட்டாகும். அத் திருவதிகைக் கல்வெட்டில், "*முனைப் பேரரையர் மகன் முனையர்கோன் இளவரையன்*"[53] என்பது காண்கிறது. நிருபதுங்கன் தந்தையரான கழற்சிங்கரும் சுந்தரரும் அவரை வளர்த்த நரசிங்க முனையரையரும் ஏறத்தாழ ஒருகாலத்தவர் (கி. பி. 840–865) என்பது சேக்கிழார் கூற்று. ஆதலின், மேற்சொன்ன கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள 'முனைப் பேரரையர்' நமது நரசிங்க முனையரையர் ஆகலாம் எனக் கோடல் தவருகாது. 'முனையர்கோன் இளவரையன்' அவர் மகனுகலாம். இங்ஙனம் கொள்ளற்குக் காலம் (16 ஆண்டுகள்) இடந்தருதல் காண்க.

(2) "அபராசிதன் ஆட்சியில் '*முனையதரையன்* அபராசிதன் குலமாணிக்கப் பெருமானுர்' என்று ஒருவன் இருந்தான் என்று திருநாவலூர்க் கல்வெட்டுக் குறிக்கிறது.[54] இவ்வரச மரபினர் தொடர்ந்து சோழராட்சியிலும் இருந்துவந்தனர்.

(3) "வீரராசேந்திரன் ஆட்சியில் 'வீரராசேந்திர *முனையதரையன்* என்பவன் இருந்தான்.[55]

(4) விக்கிரமசோழன் (கி. பி. 1118–1135) ஆட்சியில் அமைச்சனுகவும் தானைத் தலைவனுகவும் ஒரு முனையதரையன் இருந்தான்.[56]

---

50 162 of 1938
51 27 of 1931
52 11 of 1899
53 S. I. I. VIII. 308
54 S. I. I. VIII. 999.
55 S. I. I. 529
56 *விக்கிரமசோழனுலா, கண்ணி 71.*

எனவே, சேக்கிழார் நரசிங்க முனையரையரைப்பற்றித் தமது தலயாத்திரையின்போது, திருநாவலூரிற் கேட்டதேயன்றி, இம் முனையரையனையோ இவன் மகனையோ கேட்டுப் பல செய்திகளைப் பொதுவாகவும், நரசிங்கர் சுந்தரரைத் தம் மகனாக ஏற்று வளர்த்தனரா என்ற நுட்பமான செய்தியைச் சிறப்பாகவும் கேட்டறிந்தனர் எனக் கோடல் பொருத்தமே ஆகும்.

திருவாரூர்க் கல்வெட்டு : இது சேக்கிழார் காலத்தது. இதனில், "சுந்தரர் தாயாரான இசை ஞானியார் திருவாரூரிற் பிறந்தவர்; அவர் *திருவாரூர் – ஞானசிவாசாரியார்* மகளார். இசை ஞானியார், சடையனார், சுந்தரர் ஆகிய இம் மூவர் படிமங்களையும் இரண்டாம் குலோத்துங்கன் ஆரூர்க் கோவிலில் அமைத்தான்," என்பது காணப்படுகின்றது.[56a] இக் கல்வெட்டுச் செய்தியால், சேக்கிழார் காலத்தில் சுந்தரர் வரலாறு அறிந்த சிவாசாரிய மரபினர் அல்லது இசை ஞானியார் மரபினர் திருவாரூரில் இருந்தனர் எனக் கொள்ளலாம். கொள்ளின், சேக்கிழார் அவர்கள் வாயிலாகச், (1) சுந்தரர் முனையரையரால் வளர்க்கப் பட்டமை, (2) சுந்தரர் – பரவையார் திருமணம், (3) திருத்தொண்டத்தொகை பாடிய சந்தர்ப்பம், (4) பரவையார் ஊடல் தீர்க்க இறைவன் முயன்றமை போன்ற – ***வேறு நூல்களிலிருந்து அறியப்படாத*** – பல குறிப்புகளைக் கேட்டறிந்தனர் என்பதை நம்பலாம்.

(1) சிற்றரச மரபினரான நரசிங்க முனையரையர் ஆதி சைவராகிய சுந்தரரை வளர்த்தனர் என்பதை நமக்கு முதன் முதல் அறிவிப்பவர் சேக்கிழார்தாம்.[57] (2) அவர் அத்துடன் நில்லாது, சுந்தரர் திருமணத்திற்கு ஓலை போக்கின போதும், "***கொற்றவர் திருவுக்கேற்பக்*** குறித்துநாள் ஓலை விட்டார்,"[58] என்று கூறினர்; (3) பரவையாரை மணந்த பிறகு சுந்தரர் ***அரச குமாரனைப் போல*** ஊர்வலச் சிறப்புடன் கோவிலை அடைந்தார்,[59] என்று கூறியுள்ளார்; பல இடங்களில் '***நாவலூர் மன்னன்***' என்று புகன்றுள்ளார். இங்ஙனம் சுந்தரர் அரசர் செல்வாக்குப் பெற்றவர் என்று சேக்கிழார் பல இடங்களிலும் தெளிவாகக்

56a. 73 of 1890; S. I. I. IV 397.
57 *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 5.*
58 *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 9.*
59 *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 186-187*

கூறற்கு, அவர் முனையரையர் மரபினரிடமும் சுந்தரர் மரபினரிடமும் கேட்டறிந்த செய்திகளே தக்க சான்றாக இருத்தல் வேண்டும்.

நரசிங்கரும் திரு ஆதிரை விழாவும் : நரசிங்க முனையரையர் கழற்சிங்கனை மூன்றாம் நந்திவர்மன் காலத்தவர் அல்லவா? அவர் திருவாதிரை விழாவில் அடியாரை உபசரித்து ஒவ்வொருவர்க்கும் நூறு பொன்னுக்குக் குறையாமல் கொடுத்து உண்பித்தவர் என்பது சேக்கிழார் வாக்கு.[60] இங்ஙனம் அவர் காலத்தில் திருவாதிரை விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது, அடியார்க்கு உபசாரம் செய்யப்பட்டது என்பதைக் கல்வெட்டால் அறியலாம். "வழுவூரான் என்பவன், குன்றாண்டார் கோவிலில் (புதுக்கோட்டைச் சீமை) நடைபெற்ற திருவாதிரை விழாவில் நூறு பேர்க்கு உணவளிக்க அரிசிதானம் செய்தான்,"[61] என்று மூன்றாம் நந்திவர்மனது 3-ஆம் ஆட்சி ஆண்டுக் (சுமார் கி. பி. 842) கல்வெட்டுக் கூறுகிறது.[62]

9. *மறையவர் சிற்றூரவைகள்* : 'சேய்ஞலூர், தில்லை, திருவெண்ணெய்நல்லூர் என்னும் மூன்று இடங்களில் அந்தணர் அவைகள் இருந்தன. அவை ஊர் வழக்குகளை ஆய்ந்து முறை வழங்கின,' என்று சேக்கிழார் முறையே சண்டீசநாயனார் புராணத்திலும், திருநீலகண்ட நாயனார் புராணத்திலும், தடுத்தாட்கொண்ட புராணத்திலும் கூறியுள்ளார். நாயன்மார் காலமாகிய பல்லவர் காலத்தில் தமிழகத்தில் குடிமல்லம், கூரம், திருமுக்கூடல், திருக்கோவலூர், திருவல்லம், தொண்டூர், திருநின்றவூர், திருகோடிகா, திருத்தவத்துறை, திருத்தணிகை முதலிய ஊர்களில் ஊர் அவைகள் இருந்தன என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.[63] இவ்வூர் அவையினர் 'ஆளுங்கணத்தார்' எனவும் 'கணப்பெருமக்கள்' எனவும் பெயர் பெற்றனர்.[64]

---

61 347 of 1914. 60 *நரசிங்கமுனையரையர் புராணம், செ. 4.*

62 *டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண* **ஆராய்ச்சி,** *பக். 244–246*

63 228 of 1902, 37 of 1900, 179 of 1915, 277 of 1902, S. I. I. 3. p. 93, 183 of 1916, 168 of 1938, 22 of 1913, 84 of 1892, 435 of 1905.

64 Ep. Ind. Vol. II, pp. 223 and 257 of 1912.

இவற்றை நோக்க, சேக்கிழார் குறித்த மூன்று ஊர்களிலும் ஊராட்சி மன்றங்கள் இருந்தனவென்று கொள்வது பொருத்தமே யாகும்.

திருவெண்ணெய் நல்லூர் அவையினர் சுந்தரர்க்கும் கிழ வேதியர்க்கும் உண்டான வழக்கினை ***ஆட்சி, ஆவணம், அயலார் சாட்சி*** என்ற மூன்றையும் கொண்டு நன்கு சோதித்தனர்; கிழ வேதியர் காட்டிய ***படி ஓலை, மூல ஓலைகளைச்*** சோதித்தனர்; அம் மூல ஓலை எழுத்தும் ***அரண் தரு காப்பில்*** இருந்த சுந்தரர் பாட்டனார் எழுதி இருந்த ஓலை எழுத்தும் ஒன்றாக இருத்தலைக் கண்டு, சுந்தரர் அக் கிழவேதியருக்கு அடியவரே என்று தீர்ப்புக் கூறினர். அந்த ஊரவையில் ***கரணத்தான்*** என்பவன் ஒருவன் இருந்தான்.[65] ஊராட்சி மன்றத்தில் ஊர் ஆவணங்களைப் பாது காக்கத் தக்க இடம் இருந்தது என்பதும், அந்த அவையில் இருந்த எழுத்தாளன் 'கரணத்தான்' என்று பெயர் பெற்றான் என்பதும் ஆயஊர் ஆட்சி நடைமுறையைச் சோழர்காலக் கல் வெட்டுகொண்டு விளக்கமாக அறியலாம். எனவே, ஊராட்சி மன்றங் களைப்பற்றிச் சேக்கிழார் கூறிய யாவும் வரலாற்று உண்மைகளே என்பது இங்கு அறியத்தகும்.

10. ***உடன் இறத்தல்:*** (1) திருநாவுக்கரசர் தாயார் தம் கணவருடன் உடன்கட்டை ஏறினார்[66] என்றும், (2) சேரமான் சுந்தரரோடு கயிலைக்குச் சென்றதைக்கண்ட அவர்தம் மெய்காவல் படையினர் வாளால் குத்திக்கொண்டு இறந்தனர்[67] என்றும் சேக்கிழார் கூறியுள்ளார். சேக்கிழார் இவற்றைக் கூறாமலே சென்றிக்கலாம். இவை கூறாமையால் அப்பர்க்கோ, சேரமான் பெருமாளுக்கோ இழுக்கொன்றும் நேரிடாது. அங்ஙனம் இருந்தும், சேக்கிழார் இவற்றைக் கூறியுள்ளதை நோக்கத் ***தக்க சான்றுகள்*** இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. அவற்றை இங்கு ஆராய்வோம்.

(1) திருநாவுக்கரசர் காலத்திற்கு முற்பட்ட பெருங்காவியமாகிய ***மணிமேகலையில்*** கணவனை இழந்த பத்தினிப் பெண்டிர்,

---

65 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 42-62.
66 திருநாவுக்கரசர் புராணம். செ. 27-28
67 வெள்ளானைச் சருக்கம், செ. 37-38

உடனே உயிர் விடுவர் அல்லது எரி மூழ்குவர் அல்லது கைம் பெண் நோன்பு நோற்பர் என்பது கூறப்பட்டுள்ளது. இவற்றுள் முதல் வழியைத் திருநாவுக்கரசருடைய தாயார் கைக்கொண்டார்; மூன்றும் வழியை அவருடைய தமக்கையார் பின்பற்றினுர். மனைவி கணவனுடன் இறக்கும் பழக்கம் நாயன்மார்க்குப் பிற் பட்ட சோழர் காலத்திலும் இருந்தது என்பது கல்வெட்டுக்களால் அறியலாம். சுந்தரசோழன் இறந்ததும் முதல் இராசராசன் தாயாரான வானவன்மாதேவி உடன்கட்டை ஏறினுள் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.[68] திரு நாவுக்கரசர்க்கு முற்பட்ட மணிமேகலை காலத்திலும் அவருக்குப் பிற்பட்ட சோழர் காலத்திலும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததைக் காணப் பல்லவர் காலத்திலும் இப்பழக்கம் இருந்து வந்தது என்று கொள்வது பொருத்தமாகும்.

(2) சேரமானுடைய படைவீரர் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்ட செய்தி கவனிக்கத் தக்கது. இப்படையினர் மன்ன னது நம்பிக்கைக்கு உடையவர். எப்பொழுதும் அவனைச் சூழ இருந்து பாதுகாத்தலும், அவன் இறப்பின் உடன் இறத்தலும் இவர் கடமையாகும். இவ்வாறு தம் மன்னனுக்காகத் தம்மைத் தியாகம் செய்யும் ***வேளை***யை எதிர்பார்த்து நின்றமையால், இப் படையினர் ***வேளைக்காரர்*** எனப்பட்டனர். இவ் வேளைக்காரப் படையினர் சேரமானுக்குப் பிற்பட்ட முதலாம் இராசராசன் காலத் திலும் இருந்தனர்.[69] பாண்டிய மன்னரிடம் இருந்த இப் படை யினர், ***தென்னவன் ஆபத்துதவிகள்*** என்று பெயர் பெற்றனர்.[70] சோழரிடமும் பாண்டியரிடமும் வேளைக்காரப் படைகள் இருந் ததை நோக்கச் சேரமான் பெருமாளிடமும் இப் படையினர் இருந் தனர் என்று கொள்வது பொருத்தமாகும்.

11. ***சமணர் கழுவேற்றம்*** : மதுரையில் சம்பந்தர்க்கும் சமணர்க்கும் சமயவாதம் நடைபெற்றது. வாதத்தில் தோற்றால் தாம் கழு ஏறுவதாகச் சமணர் கூறினர். அவர்கள் வாதில் தோற்றதும், பாண்டியன் நெடுமாறன் தன் அமைச்சரைக்

---

68 *சுலோகம்* 65-66; 236 of 1902
69 K. A. N. Sastry, Cholas, vol. II, part I, p. 225
70 Ibid. 'Pandyan Kingdom', pp. 196-197,

கொண்டு அவர்களைக் *கழு ஏற்றினன்.* 'வேந்தனது *அச் செயல் மிகையன்று*' என்று எண்ணிய சம்பந்தர் அவனை அச் செயலி லிருந்து விலக்காதிருந்தார் என்பது சேக்கிழார் கூற்று. [71] நம்பி யாண்டார் நம்பி இச் சமணர் கழு ஏறியதைப் பற்றித் தம் நூல் களில் பல இடங்களில் குறித்துள்ளார். சேக்கிழார் அவற்றைச் சான்றாகக் கொண்டும் மதுரையில் நன்கு விசாரித்தும் மேலே குறிப்பிடப்பட்ட செய்தியைக் கூறியிருத்தல் வேண்டும்.

(1) தமது சமயத்திலிருந்து மாறிய திருநாவுக்கரசரைச் சமணர் கொடுமை செய்தனர்; பல்லவ மகேந்திரவர்மன் அதற்கு உடந்தையாக இருந்தான்.

(2) மதுரையில் சமணர், சம்பந்தர் தங்கியிருந்த மடத் துக்குத் தீவைத்தனர். இவ்விரண்டும் சமணர் சைவர்க்குச் செய்த தீமைகளாகப் பெரிய புராணம் எடுத்துக் காட்டுகின்றது.

பல்லவ மகேந்திரவர்மன் சைவனாய் மாறியவுடன் சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துத் தள்ளினன், நெடுமாறன் சைவனாய் மாறியவுடன் சமணரைக் கழுவேற்றினன் என்பன பெரியபுராணம் கூறும் செய்திகள். இவை இரண்டும் சைவர் சமணருக்குச் செய்த கொடுமைகள் என்னலாம். இக் கொடு-மைகள் நடந்திருக்குமா என்பது இங்கு ஆராயத்தகும்.

வைணவர் சமயக் கொடுமை : (1) நாகையில் பல்லவர் காலத்தில் பௌத்தவிகாரம் ஒன்று இருந்தது. அவ் விகாரத்தில் பொன்னால் செய்யப்பட்ட புத்தர் சிலை வைத்து வழிபடப்பட்டது. *திருமங்கை யாழ்வார்* அச் சிலையைக் கவர்ந்துவந்து, அதைக்கொண்டு பல கோயில் திருப்பணிகள் செய்தனர் என்று குரு பரம்பரை கூறு கின்றது.

(2) அவர் காலத்தவரான *தொண்டரடிப் பொடியாழ்வார்* சமணர்களையும் சாக்கியர்களையும் வெட்டித்தள்ளுவதே நல்லது என்ற கொள்கையை உடையவர் என்பது கீழ்வரும் அவர் பாடலால் அறியலாம் :

" வெறுப்பொடு *சமணர் முண்டர்*
விதியில்*சாக் கியர்கள்* நின்பால்

---

71 *சம்பந்தர் புராணம்,* செ. 798, 853-855.

பொறுப்பரி யங்கள் பேசில்
போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகில்
கூடுமேல், *தலையை ஆங்கே*
அறுப்பதே கருமம் கண்டாய்
அரங்கமா நகரு ளானே.[72]

(3) திருமங்கையாழ்வார் காலத்தவனுன இரண்டாம் நந்திவர்மன் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலைப் புதுப்பித்த சிறப்புடையவன். அவன் சிறந்த வைணவ பக்தன். அம் மன்னன் தர்மசாத்திர முறைக்கு மாருன கொள்கையுடைய *மக்களை அழித்து, அவர்கள் நிலத்தை வரியிலியாக வேதியர்க்கு அளித்தான்* என்று உதயேந்திரப் பட்டயம் உரைக்கின்றது. இப் பட்டயத்தை ஆராய்ந்த *தாமஸ் போக்ஸ்* என்ற அறிஞர், "இந்த நிலத்திற்கு உரியவர் சமணர். பரமேசுவரவர்மன் அவர்களை அழித்து அந் நிலத்தை மறையவர்க்கு வழங்கினமை அவனது வரலாற்றில் ஒரு களங்கத்தை உண்டு பண்ணியதாகும். *இச்செயல் அக்கால நிலையை ஒட்டியதுபோலும்.*"[73] என்று குறித்துள்ளார்.

(4) காஞ்சியிலுள்ள வைகுந்தப் பெருமாள் கோவில் உட்புறச் சுவர்களில் அழகிய சிற்பங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று, துறவிகள் இருவர் கழுவேற்றப்படுதலை உணர்த்துகிறது. அவர்களுக்கு எதிரில் அரசன் அரியணையில் அமர்ந்திருப்பது போன்ற சிற்பம் காணப்படுகின்றது. இச் சிற்பத்தை ஆராய்ந்த அறிஞர், "சமணர், பௌத்தர் போன்ற புறச்சமயத்தாரை அழித்து வைணவத்தை நிலைநாட்ட முயன்றதையே இச் சிற்பம் உணர்த்துகின்றது. இதனுல் பல்லவமல்லன் செயல் நன்கு விளங்குகின்றது. *இஃது அக்காலத்தை ஒட்டிய செயல் போலும்!* வென்றவர் கோவிலில் இத்தகைய நிகழ்ச்சியைச் சிற்பங்கள் வாயிலாகக் காட்டுதல் அக்காலத்திற்கு ஏற்றதாக அமைந்தது போலும்!"[74] என்று கூறியுள்ளதும் கவனிக்கத் தகும்.

---

72 *திருமாலை, திருவரங்கப் பதிகம், செ- 8*
73 Ind. Ant. Vol VIII, p. 281.
74 Dr. Meenakshi, Administration and Social Life under the Pallavas, p. 172.

இதுகாறும் கூறப்பெற்ற இலக்கிய சான்றுகளையும் செப் பேட்டுச் சான்றையும் சிறப்புச் சான்றையும் நோக்க, சேக்கிழார் குறிப்பிட்ட சமணர் செய்த கொடுமைகளும் சைவர் செய்த கொடு மைகளும் *நிகழ்ந்திருக்கலாம்* என்று சொல்லுவது பொருத்த மாகும். தோற்றவர் கழுவேறுதல் அல்லது ஏற்றப்படுதல் அக் கால நிலைக்கு பொருந்தியது. ஆதலாற்றான் "சம்பந்தர், '*மிகை படா வேந்தன் செய்கை விலக்கிடாதிருந்தார்*" என்று சேக்கிழார் கூறியிருத்தல் மேலே கூறப்பெற்ற சான்றுகளால் பொருத்த மாதல் காண்க.

12. ஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்றபொழுது பாண்டியன் அமைச்சரான *குலச்சிறையார்* பாண்டிமாதேவியைச் சம்பந்த ருக்கு அறிமுகப்படுத்தும் பொழுது, அவர் இன்னவர் மகளார் என்று கூற விரும்பி, "பருங்கை *யானைவாழ் வளவர்கோன்* பாவையர்" [75] என்று கூறினர்.

சோழ அரசனுக்கு எத்துணையோ சிறப்புக்கள் இருப்ப, அவற் றைக் கூறாமல், பொறுப்புள்ள பாண்டியன் அமைச்சர், 'யானையை உடைய வளவர்கோன்' என்று கூறியதாகச் சோழப் பேரரசின் முதலமைச்சரான சேக்கிழார் கூறியிருத்தல் ஏற்புடைய தாகுமோ என்பது ஆராயத்தகும் :

சம்பந்தர் வாழ்ந்த கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவராட்சி திருச்சிராப்பள்ளி வரையில் பரவியிருந்தது என்பது கல் வெட்டுக்கள் உணர்த்தும் செய்தியாகும். தமது நாட்டையிழந்த சோழர், பல்லவர் தயவினால் பழையாறையைத் தலைநகராய்க் கொண்டு சிறு நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். அப் பழை யாறையிலிருந்தே பிற்கால விஜயாலயனும் அவன் மகனான ஆதித்த சோழனும் அரசியல் உலகில் தலைதூக்கினர் என்பது வரலாறு. எனவே, களப்பிரர் காலம் முதல் ஆதித்த சோழன் எழுச்சிவரையில் பல நூற்றாண்டுகளில் வாழ்ந்த சோழர் *தமக் குரிய முடியை இழந்து சோழநாட்டையும் இழந்து* சிற்றரசராய்க் காலங்கழித்தனர் என்பது தென்னிந்திய வரலாறு கண்ட உண்மையாகும். ஆதலாற்றான் வரலாற்றுணர்ச்சி கொண்ட

---

75 *சம்பந்தர் புராணம், 670.*

சேக்கிழார், சிற்றரசன் மகளான பாண்டிமாதேவியை. 'யானை உடைய வளவர்கோன் பாவை' என்று மட்டும் கூறி அமைச்சர் அறிமுகப் படுத்தியதாகப் பாடியிருத்தல் சாலப் பொருத்தமாகும்.

முடிவுரை : மேலே கூறப்பெற்ற செய்திகளால் சேக்கிழார் சைவத் திருமுறைகள், பிற நூல்கள், தக்கவர் வாயிலாகக் கேட்ட செய்திகள், தமது தலயாத்திரை அறிவு, கல்வெட்டுச் செய்திகள் சிற்ப ஓவியங்கள் ஆகிய பலவற்றின் துணையைக் கொண்டே நாயன்மார் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்தார் என்பது தெளிவாகும். இவ்வாறு சேக்கிழார் பெருமுயற்சியை மேற்கொண்டு குறிப்புக்கள் தொகுத்தமையாற்றான் பெரிய புராணம் *வரலாற்றுச் சிறப்புடைய நூலாக* ஒளிர்கின்றது. சேக்கிழார் '*குணபரஈசுவரம்*' என்னும் தொடரைக் குறித்திராவிடின், அப்பர் காலத்தை அறிந்திருத்தல் இயலாது; இங்ஙனமே *வாதாபிப் போரைக்* குறியாதிருப் பின், சம்பந்தர் காலத்தை அறிந்திருத்தல் இயலாது. ***சேக்கிழார் வரலாற்று உணர்ச்சியுடையவர்*** என்பதற்கு இவ்விரண்டு வரலாற்றுக் குறிப்புக்களே ஏற்ற சான்றாகும். சுருங்கக் கூறின், ***வரலாற்றுக் குறிப்புக்கள் என்னும் செங்கற்களைக் கொண்டு கட்டப்பெற்று, சைவசமயம் என்னும் நறுஞ்சாந்து பூசப்பெற்ற பேரின்ப மாளிகையே பெரிய புராணம்*** என்று கூறுதல் பொருத்தமாகும்.

சொற்பொழிவு - III

சேக்கிழார் - பெருங்காவியப்புலவர்

சேக்கிழார் சைவத்திருமுறைகள், பிற நூல்கள், செவிவழிச் செய்திகள், கல்வெட்டுச் செய்திகள், நாயன்மார்பற்றிய சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றின் துணையைக் கொண்டு சுந்தரர்ப் பற்றிய வரலாற்றைத் *திருத்தொண்டர் புராணம்* என்னும் பெயர்கொண்ட *பெருங்காவியமாகச்* செய்தாரென்பது முன்பு நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகளில் தெளிவாக்கப்பட்டது. இச் சொற்பொழிவு, சேக்கிழார் பெருங் காப்பிய ஆசிரியராக எங்ஙனம் விளங்குகிறுர் என்பது சுருக்கமாக விளக்கப் பெறும்.

பெருங்காப்பியம் :

பெருங்காப்பியத்தில் கடவுளை வாழ்த்துதல், கடவுளுக்கு வணக்கம் கூறுதல், உரைக்கும் பொருள் இன்னது என்று உணர்த்துதல் ஆகிய மூன்றனுள் ஒன்று முதலில் அமைந்திருக்கும்; அல்லது இரண்டு, மூன்று வரினும் தவறில்லை. பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் பயக்கும் முறையில் அமைந்திருக்கும்; ஒப்பற்ற தலைவனை அல்லது தலைவியைக் காவியத் தலைவனுகவோக, தலைவியாகவோ பெற்றிருக்கும். மலை வருணனை, கடல் வருணனை, நாட்டு வருணனை, நகர வருணனை, பருவகாலங்களின் வருணனை, கதிரவன் தோற்ற வருணனை, மதியின் தோற்ற வருணனை போன்ற பல வருணனைகளைப் பெற்றிருக்கும்; அந் நூலின்கண் மந்திரம் கூறல், தூது விடுத்தல், செலவு (யாத்திரை செய்தல், போர்மேற் செல்லுதல்)

போர்செய்தல், வெற்றி பெறுதல் முதலியன பேசப்பட்டிருக்கும். அந்நூல் தன் உட்பிரிவுகட்குச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பெயர்களுள் ஒன்றினைப் பெற்றிருக்கும்; உவகை, பெருமிதம், அழுகை, வியப்பு, நகை, அச்சம், இளிவரல், வெகுளி என்னும் எட்டு வகைப்பட்ட சுவைகளைப் பெற்றிருக்கும்.

இத்தகைய தகுதிகள் பெற்ற பெரியநூல் பெருங்காவியம் என்று கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் செய்யப்பெற்ற *தண்டியலங்காரம்* என்னும் தமிழ் இலக்கணநூல் கூறுகின்றது. அந்நூல் கி. பி. 7-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 8-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த *தண்டி* என்ற வடமொழி ஆசிரியர் செய்த *காவ்யாதர்சம்* என்ற வடமொழி அலங்கார நூலின் மொழிபெயர்ப்பாகும். எனவே, இப்பெருங் காப்பியத்தின் இலக்கணம் கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றுண்டில் தமிழகத்தில் அறியப்பட்டது என்பது தெளிவாகும்.

இந்த இலக்கணத்தைப் பின்பற்றிச் சீவக சிந்தாமணி முதலில் நாட்டுப் படலம், நகரப் படலம் என்று தொடங்கப் பெற்றுப் பிறவெல்லாம் இடையிடையே அமையப்பெற்றுள்ள முதல் பெருங் காப்பியமாகும். சங்க காலத்தில் இயற்றப்பட்ட மணிமேகலை சிலப்பதிகாரம் ஆகிய பெருங்காப்பியங்கள் தொடக்கத்தில் நாட்டுப் படலம், நகரப்படலம் என்பவற்றைப் பெறுதவை. சிலப்பதிகாரம் என்னும் பெருங்காவியம் கோவலன் – கண்ணகி திருமணத்தை முதலாகக் கொண்டு தொடங்குகிறது. மணிமேகலை என்னும் பெருங்காவியம் இந்திர விழாவை முதன்மையாகக் கொண்டு தொடங்குகிறது. இந்த இரு நூல்கள் பாடப்பெற்ற முறைகளையும், பிற்காலச் சிந்தாமணி பாடப்பெற்ற முறையையும் நோக்க, சிந்தாமணி, வடமொழி இலக்கணம் கூறிய காவிய அமைப்பைக் கொண்டு பாடப்பட்டது என்பது தெளிவாகும். காலத்தால் பிற்பட்ட இந்தக் காவிய இலக்கணத்தைப் பின் பற்றியே சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் பாடினுர் என்பது நூலின் அமைப்பைக்கொண்டு அறியப்படும்.

பெரியபுராணம் - பெருங்காப்பியம்

திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணம் பெருங் காப்பிய இலக்கணப்படி கடவுள் வாழ்த்தும் வணக்கமும் நூல் நுதல் பொருளும் முதலில் பெற்றுள்ளது.

திருத்தொண்டர் புராணம் என்பது சுந்தரர் பற்றிய புராண மாகும். சுந்தரர், சிவபிரானுக்குத் தோழரானமை பற்றித் 'தம்பிரான் தோழனுர்' என்று பெயர்பெற்ருர் எனின், அவர் தன்னேரில்லாத் தலைவர் என்பதில் ஐயமுண்டோ ?

சுந்தரர் தாயார் *இசைஞானியார்* என்பவர். அவர் *திருவா ரூர்ச் சிவன்கோவில் குருக்களான ஞானசிவாசாரியார் மகளார்*. அவர் கணவர் திருநாவலூர்ச் சிவன்கோவில் குருக்களாவர். அவர் பெயர் ***சடையனுர்*** என்பது. அவ்விருவருக்கும் பிறந்தவரே சுந்தரர். இசை ஞானியார் தம் பெற்ருேர் வீட்டிலேயே சுந்தர ரைப் பெற்றிருக்கலாம். அதனுல் பாட்டுடைத் தலைவராகிய சுந்தரருக்குச் சேக்கிழார் சோழ நாட்டை உரிமையாக்கி *நாட்டுச் சருக்கம்* பாடியுள்ளார்; அவ்வாறே சுந்தரர் பிறந்த திருவா ரூரைச் சிறப்புடை நகரமாகக் கொண்டு *திருநகரச் சிறப்புப்* பாடியுள்ளார்.

பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் பயனையும் தருவதாய் அமைதல்வேண்டும் என்பது விதி. ***அறம்*** – இல்லறம், துறவறம் என இருவகைப்படும். சுந்தரர் – பரவையார் இல்லறமும் பிற நாயன்மார் இல்லறமும் இல்லறம் என்னுந் தலைப்பில் அடங்கும். "அடியேன் வேண்டுவன் தவ-நெறியே" என்று சுந்தரர் கூறுவதில் துறவற உணர்ச்சியைக் காணலாம். திருநாவுக்கரசு நாயனுர் துறவறத்தில் சிறந்தவர்.

பொருள் — அகம், புறம் என இருவகைப்படும். சுந்தரர் செய்துகொண்ட காதல் திருமணங்கள் இரண்டும் அகப்பொருள் பற்றியவை. புராணத்துள் வரும் அறம் பொருள் வீடு பற்றிய செய்திகள் அனைத்தும் புறப்பொருளாகும். ***இன்பம்*** என்பது கற்பியலில் வைத்து எண்ணப்படுவது. அது சுந்தரர் – பரவையார் வாழ்வில் சிறக்கக் காணப்படுவதாகும்.[1] ***வீடு*** என்பது இவ் வுலகப் பற்றினின்றும் விடுதலை பெறுதல். அஃதாவது, முடி வில்லாத இறைவனது அருளில் திளைத்தல் ஆகும். இதற்கு இந் நூலில் உள்ள நாயன்மார் வரலாறுகள் அனைத்தும் ஏற்ற சான் ருகும் என்று துணிந்து கூறலாம்.

---

1 *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 181*

மலை வருணனை – கயிலை பற்றிய ‘திருமலைச் சிறப்பு’ என்னும் பகுதியில் சிறப்புறக்காணலாம் (செ. 1–12). இதுவன்றிக் கண்ணப்ப நாயனர் புராணத்திலும், திருக்குறிப்புத் தொண்டர் புராணத்திலும் மலை வருணனை இடம் பெற்றுள்ளது.

கடல் வருணனை திருக்குறிப்புத்தொண்டர் புராணம் (செ. 39-41), அதிபத்தர் புராணம் (செ. 7), திருநாவுக்கரசர் புராணம் (செ. 132) ஆகிய இடங்களில் காணப்பெறும்.

பருவ காலங்களின் வருணனை : கார்காலம், கூதிர் காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் எனப் *பெரும்பொழுது* ஆறுவகைப்படும். ஒவ்வொன்றும் இவ்விரண்டுமாத அளவுடையது. கார்காலம் என்பது ஆவணி, புரட்டாசி மாதங்களைக்கொண்டது; ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர்காலம் எனப்பட்டது; மார்கழியும் தையும் முன் பனிக்காலம்; மாசியும் பங்குனியும் பின்பனிக்காலம்; சித்திரையும் வைகாசியும் இளவேனிற்காலம்; ஆனியும் ஆடியும் முதுவேனிற் காலமாகும். இப்பெரும் பொழுதுகளுள் சில பெரியபுராணத்துள் பேசப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சான்றினை இங்குக் காண்க :

(1) **கார்காலம் :**

“ நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக் *காரெ*ன்னும் பருவ நல்லாள். ” 1a

(2) **முன்பனி :**

“ ஆங்குடைய பிள்ளையார் அமர்ந்துறையு நாளின்கண்
தூங்குதுளி முகிற்குலங்கள் சுரந்துபெயல் ஒழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெரு விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் *பனிப்பருவம்* எய்தியதால்.”

“ அளிக்குலங்கள் சுளிந்தகல அரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மையெனத்

1a ஆனயநாயனர் புராணம் செ. 19

துளித்தலைமேல் லறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியாற்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய
குன்றுகளும்,"

" ***மொய்பனி***கூர் குளிர்வாடை
முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளும்
குலைந்தசையக் குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க
மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவு
மடங்குவது மாகுமால்." [2]

(3) முதுவேனில் :

" மகிழ்ந்த தன்றலை வாழுமந் நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைப்புணர் ஓரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் ***முதிர்ந்தது வேனில்.***"[3]

மாலை, யாமம், வைகறை, எற்படுகாலை, நண்பகல் எனச் ***சிறுபொழுது*** ஐந்தாகும். இவற்றுள் சில பெரிய புராணத்துள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், வகைக்கு ஒன்றனை இங்குக் காண்போம் :

(1) வைகறை :

" ***மாலை யாமம் புலர்வுறும் வைகறை***
வேலை செய்வினை முற்றுவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்(து)
ஏல அஞ்செழுத் தோதி எழுந்தனர்." [4]

(2) நண்பகல் :

" வெண்டிருநீற் றணிதிகழ
விளங்குநூல் ஒளிதுளங்கக்

---

2 திருஞானசம்பந்தர் புராணம், செ. 328-330
3 சம்பந்தர் புராணம், செ. 384
4 சம்பந்தர் புராணம், செ. 208

கண்டவர்கண் மனமுருகக்
கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேற்
பொருந்தமனை தொறும்புக்குக்
கொண்டுதாம் விரும்பியாட்
கொண்டவர்முன் கொடுவந்தார்.”[5]

(3) மாலை ;

உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை யிளைப்பஞ்சி னுன்போலக்
கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன்.”[6]

கதிரவன் தோற்றம் :

“மொய்காட்டு மிருள்வாங்கி முகங்காட்டுந் தேரிரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி எழும்பொழுதில்.”[7]

மதியின் தோற்றம் :

“மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினல்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பாரென்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா.”

“தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்று மின்பமுந் தன்மையுந் தந்துபோய்
ஆற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா.”[8]

---

5 ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், செ. 178
6 சம்பந்தர் புராணம், செ. 192
7 கண்ணப்ப நாயனார் புராணம், செ 134
8 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 160, 162

மந்திரம் :

உருத்திர பசுபதிநாயனுர் வரலாற்றில் வரும் பின்வரும் இரண்டு செய்யுட்களும் மந்திரத்தைப் பற்றியவை ஆகும்.

" தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்திரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் *உருத்திரம்* குறிப்பொடு
பயின்ருர். "

" அரும றைப்பய ணுகிய உருத்திர மதனை
வருமு றைப்பெரும் பகலும்எல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்திட உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார்."[9]

தூது : சுந்தரர் சங்கிலியாரை மணந்துகொண்டதை அறிந்த பரவையார் சுந்தரர்பால் மிக்க சீற்றம்கொண்டார். சுந்தரர் வேண்டுகோளின்படி பரவையாரது சீற்றத்தைத் தணிக்க ஆரூர்ப்பெருமான் பரவையாரிடம் தூது சென்ருர். [10]

செலவு : செலவு என்பது செல்லுதல் எனப் பொருள்படும். அது, யாத்திரை செய்தல், போர்மேற் செல்லுதல் முதலாகப் பல வகைப்படும். பெரியபுராணத்துள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ***தலயாத்திரை*** மிகப் பல செய்யுட்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

போர்மேற் செலவு : சிறுத்தொண்டர், புகழ்ச்சோழர் புராணங்களில் பேசப்பட்டுள்ளது. [11]

போரும் வெற்றியும் : பெரிய புராணத்துள் குறிக்கப்படும் போர்களுள்ளும் வெற்றிகளுள்ளும் புகழ்ச் சோழர்க்கும் அதிகனுக்கும் இடையில் நடைபெற்ற போரும் சோழர் பெற்ற

9 உருத்திரபசுபதி நாயனுர் புராணம், செ. 6, 7
10 ஏயர்கோன் புராணம், செ, 326-345
11 சிறுத்தொண்டர் புராணம், செ. 5-6; புகழ்ச்சோழர் புராணம், செ. 17-19

வெற்றியும், [12] வடபுலத்து முதல் மன்னனுக்கும் பாண்டியன் நெடுமாறனுக்கும் இடையில் நடைபெற்ற நெல்வேலிப் போரும் பாண்டிய வெற்றியும் [13] குறிப்பிடத்தக்கவை.

சுவைகள் – (1) *உவகை* :

"எண்ணரும் பெருமைத் தொண்டர் யாவரும் ***மகிழ்ச்சிஎய்திப்***
புண்ணியப் பிள்ளை யாரைப் புகழ்ந்தடி போற்றிப் போத
மண்ணெலாம் உய்ய வந்த வள்ளலார் தம்மைக் கண்டு
கண்ணிறற் பயன்கொண் டார்கள் கன்னிநாட் டவர்கள்
எல்லாம்."[14]

(2) *பெருமிதம்* : பெருமிதம் – மேம்பாடு. கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கிலும் மேம்படுதல் பெருமிதம் எனப்படும். இங்குக் கல்வி பற்றிய பெருமிதத்திற்குச் சான்று காண்க :

"தவமுயன் றரிதில் பெற்ற தனியிளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடைந்து தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
கவனவாம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் ***கற்றுப்***
பவமுயன் றதுவும் பேறே எனவரும் பண்பில் மிக்கான்."[15]

(3) *அழுகை* : திருமருகலில் அரவுகடித்து வணிகன் இறந்த பொழுது, அவனை மணந்துகொள்ளும் ஆர்வத்துடன் உடன் போக்கில் வந்த வணிகன் மகள், தான் உடன் வந்ததையும் தனது துன்பத்தையும் கூறிச் சிவபெருமானை வேண்டுகின்ற முறையில் அமைந்த செய்யுட்கள் ***அழுகைச் சுவை*** நிரம்பியவை.

"அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன்போந்தேன் அரவால் வீடி
என்னைஉயிர் விட்டகன்ருய் யானென் செய்கேன்
இவ்விடுக்கண் தீர்க்கின்ருர் யாரு மில்லை

12 புகழ்ச்சோழ புராணம், செ. 20-32
13 நெடுமாறர் புராணம், செ. 3-7
14 சம்பந்தர் புராணம், செ. 862
15 திருநகரச்சிறப்பு, செ. 18

மன்னியசீர் வணிகர்குல மணியே! யானும்
வாழேன்என் றென்றயர்வாள் மதியி னுலே
சென்னியிளம் பிறைஅணிவார் கோயில் வாயில்
திசைநோக்கித் தொழு*தழுதாள்* செயலொன்
றில்லாள். ''[16]

(3) *வியப்பு* : சுந்தரர் திருஆரூர்க் கோயிலில் நல்வினை கூட்டப்பரவையாரை முதற்கண் கண்டார்;

'' கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்''என் ***றதிசயித்தார்***''[17]

(5) ***நகை*** : இது நகைச்சுவை. சுந்தரர் பரவையாரைக் கண்டு காதல்கொண்ட அன்று இரவு வெண்ணிலா தோன்றியது. சேக்கிழார் அதன் தோற்றத்தைக் கீழ்வருமாறு கூறியுள்ளார் :

'' குற்றமற்ற எண்ணங்களையுடைய சுந்தரர், பரவையார் நினைவால் வருந்தினுர். 'தம்பிரான் தோழராகிய சுந்தரரே இங்ஙனம் வருந்தினர் எனின், பரவையாரைக் காணும் பிறருள் பிழைப்பவர் யார்!' என்று இருளாகிய நங்கை புன்சிரிப்புக் கொண்டாற்போல வெண்ணிலவின் தோற்றம் காணப்பட்டது. ''

'' மறுவில் சிந்தைவன் தொண்டர் வருந்தினுல்
இறும ருங்குலார்க்கு யார்பிழைப் பார்''என்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா.'' [18]

(6) ***அச்சம்*** :

'' ***அச்ச மெய்தி***க் கறியமுதாம் என்னும் அதனு லரும்புதல்வன்
உச்சி மோவார் மார்பின்கண் அணைத்தே முத்தந் தாமுண்ணுர்

---

16 சம்பந்தர் புராணம், செ. 478
17 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 140
18 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 160

பொச்ச மில்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக்
கறிஅமைக்க
மெச்சு மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு
கொண்டணைவார்.'' [19]

(7) *இளிவரல்* : இச்சுவை மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்னும் நான்கை அடிப்படையாகக் கொண்டு பிறப்பது. சிறந்த சிவபக்தராகிய ஏனாதிநாதருடன் அவர்பால் பகைமை கொண்ட அதிசூரன் வாட்போர் புரிந்தான். அதுபற்றிச் சேக்கிழார் கூறும் செய்யுளடிகளில் அமைந்துள்ள வருத்தம் பற்றிய இளிவரல் சுவையைக் காண்க :

'' மற்றவர்தஞ் செய்கை வடிவாள் ஒளிகாணச்
சுற்றிவரும் வட்டணையில் தோன்று வகைகலந்து
பற்றியடர்க் கும்பொழுதில் தானும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க் குடைந்து புறகிட்டான். ''

'' போன அதிசூரன் போரில் *அவர்க்கழிந்த*
மானமிக மீதூர மண்படுவான் கண்படான். '' [20]

(8) *வெகுளி* : இயற்பகை நாயனார் தம் மனைவியாரைச் சிவனடியாருடன் கூட்டி அனுப்பிவிட்டனர் என்பதை அறிந்த அவர் உறவினர், சிவனடியாரைத் தடுத்து நிறுத்த முயன்றனர். அதனை அறிந்த இயற்பகையார் வாளுடன் விரைந்து வந்தார். உறவினர் அவரை நோக்கி, அவரது செய்கைக்குத் தமது வருத்தத்தைக் கூறி அவ்விடம்விட்டு நகர மறுத்தனர். அந் நிலையில்,

'' மற்றவர் சொன்ன மாற்றம் கேட்டலும் மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க, உங்கள் உடற்றுணி எங்குஞ் சிந்தி
முற்றுநும் உயிரை எல்லாம் முதல்விசும் பேற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவேன்''என் றெழுந்தார்
நல்லோர்.'' [21]

---

19 சிறுத்தொண்டர் புராணம், செ. 61
20 ஏனாதிநாயனார் புராணம், செ 29, 30
21 இயற்பகை நாயனார் புராணம், செ. 19

சருக்கங்கள் : சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை *பதினொரு* செய்யுட்களையுடையது. ஒவ்வொரு செய்யுளிலும் ஏறத்தாழ நாயன்மார் அறுவர் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பத்தாம் செய்யுளில் மட்டும் தொகை அடியார் எழுவர் குறிக்கப் பெற்றுள்ளனர். சேக்கிழார் ஒவ்வொரு செய்யுளின் முதற்சீரை அல்லது முதலிரண்டு சீர்களைச் சருக்கங்களின் பெயர்களாக அமைத்துள்ளார்; அச்செய்யுளில் குறிக்கப்பட்ட நாயன்மார்களின் வரலாறுகளை அச்செய்யுளுக்குரிய சருக்கத்தில் விவரித்துள்ளார். அவர் இங்ஙனம் திருத்தொண்டத் தொகையின் பதினொரு செய்யுட்களையும் பதினொரு சருக்கங்களாகக் கொண்டுள்ளார். அவற்றைக் கீழே காண்க :

	திருத்தொண்டத்தொகைப் பாடலின் முதல்	*திருத்தொண்டர் புராணம் சருக்கத்தின் பெயர்*
(1)	தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்	'தில்லைவாழ் அந்தணர்' சருக்கம்.
(2)	இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்	'இலைமலிந்த' சருக்கம்.
(3)	மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்	'மும்மையால் உலகாண்ட' சருக்கம்.
(4)	திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட	'திருநின்ற' சருக்கம்.
(5)	வம்பறு வரிவண்டு மணமாற மலரும்	'வம்பறு வரிவண்டு' சருக்கம்.
(6)	வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே	'வார்கொண்ட வனமுலையாள்' சருக்கம்.
(7)	பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்	'பொய்யடிமை இல்லாத புலவர்' சருக்கம்.
(8)	கறைக்கண்டேன் கழலடியே காப்புக் கொண்டிருந்த...	'கறைக்கண்டன்' சருக்கம்.
(9)	கடல்சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்	'கடல்சூழ்ந்த' சருக்கம்.

(10)	பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்	'பத்தராய்ப் பணிவார்' சருக்கம்.
(11)	மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்	'மன்னியசீர்'ச் சருக்கம்.

சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையின் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும்,

"ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே,"

என்று தம்மைப்பற்றிப் பாடியுள்ளார். நம்பியாண்டார்நம்பி தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் ***இதே முறையைப் பின்பற்றிச்*** சுந்தரரைப் பதினொரு இடங்களில் குறித்து அவரது வரலாற்றை முடித்துள்ளார். இந்த அற்புத அமைப்பு முறையைக் கூர்ந்து கவனித்த சேக்கிழார் பெருமான், ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் சுந்தரரைப்பற்றிப் பாடிச்சென்று, ***பெரியபுராணம் ஒரு தொடர்நிலைச் செய்யுள்*** என்பதைக் கூறுமறக்கூறி வற்புறுத்தியுள்ளார். இவையனைத்தையும் நோக்க, ***பெரியபுராணம் ஒரு பெருங்காவியமே யாகும்*** என்பது ஐயமற விளங்குதல் காணலாம்.

தமிழ்நூற் புலவர்

ஒரு நூலை இயற்றும் புலவன் தனக்குக் காலத்தால் முற்பட்ட நூல்களை இயலும் வரையில் படித்திருத்தல் நல்லது; அவற்றிலுள்ள சிறந்த கருத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் தான் இயற்றும் நூலில் எடுத்து ஆளுதல் தொன்றுதொட்டு வரும் முறையாகும். மணிமேகலை என்னும் காவியத்தைச்செய்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் தமது காவியத்துள்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"[22]

என்று திருவள்ளுவரது திருக்குறள் ஒன்றை அப்படியே எடுத்து ஆண்டிருத்தல் காணத்தகும். இங்ஙனமே கி. பி. 12 ஆம் நூற்

22 *சிறைசெய் காதை, வரி 59-61.*

ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் தமக்குக் காலத்தால் முற்பட்ட தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, இறையனுர் களவியல் உரை முதலிய நூல்களைப் பிழையறப் படித்த பெரும்புலவர் என்பது, அவரது காவியம்கொண்டு உணரப் படும். அவர் இந்நூற் கருத்துக்களைத் தம் நூலுள் எங்ஙனம் ஆண்டுள்ளனர் என்பதை விளக்க, நூலுக்கு இரண்டொரு சான் றுகள் கூறுதல் பொருத்தம் ஆகும். அச் சான்றுகளைக் கீழே காண்க :

தொல்காப்பியம் : (1) தொல்காப்பியம், உவமவியல் பதினேராம் நூற் பாவில் வரும் 'பல்குறிப்பினவே' என்ற மிகையை விளக்கப் போந்த *இளம்பூரணர்*, '***அத்து***' என்பதும் உவம உருபாகவரும் என்பதற்குக் கலித்தொகை 14-ஆம் செய்யு ளில் உள்ள,

"துணைமலர் எழில்*நீலத்(து)* ஏந்தெழில் மலருண்கண்"

என்ற அடியைக்காட்டி, அதில் வரும் ***அத்து*** என்பது ***போல*** என்னும் பொருளில் வந்த உவமை உருபு என்றுர். இது மிகவும் நுட்பமான மேற்கோளும் விளக்கமுமாகும். சேக்கிழார்; திரு மலைச் சிறப்பினைக் கூறுங்கால் (செ. 12),

"செய்யகோல் அபயன் திரு*மனத்* ***தோ***ங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு"

என்று பாடியுள்ளார். இங்கு அவர் ***அத்து*** என்பதை உவமை உருபாக அமைத்துள்ளமை கண்டு மகிழத்தகும். தொல்காப்பிய உரையாசிரியருள் இளம்பூரணரே முற்பட்டவர். அவர் காலம் ஏறத்தாழக் கி. பி. 11 ஆம் நூற்றுண்டு என்னலாம். சேக்கிழார் அவர்க்குப் பிற்பட்டவர் ஆதலின், தொல்காப்பியத்தையும் இளம் பூரணர் உரையையும் கருத்தூன்றித் படித்தவர் என்று கருதுதல் பொருத்தமாகும்.

(2) காடும் காடுசார்ந்த நிலமும் ஆகிய முல்லைக்கு உரிய தெய்வம் மாயோன் என்னும் கருத்தில்,

"***மாயோன்*** மேய காடுறை உலகம்"

என்று தொல்காப்பியர் குறித்துள்ளார்.[23] சேக்கிழார் இக்கருத்தினைத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் (செ. 18),

" ... ... முல்லையின் தெய்வமென் றருந்தமிழ் உரைக்கும்
செங்கண்மால் "

என்று கூறியிருத்தல் காணத்தகும். இங்கு 'அருந்தமிழ்' என்றது அருந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் என்று கொள்வது பொருத்தம் ஆகும்.

நற்றிணை : கண்ணப்பருடன் சென்ற வேட்டை நாய்கள் தம் நாக்களை நீட்டியும் சுருக்கியும் தொங்கவிட்டுக்கொண்டு ஓடின. அக்காட்சி, வேடரது வில்மீது பொருந்தும் வெற்றி மகளது சிவந்த அடிகள் முன்போய் மீளுதல் போல இருந்தது என்று சேக்கிழார் (செ. 69) கூறியுள்ளார்.

" வன்தொடர்ப்பி ணித்தபாசம் வன்கைமள்ளர் கொள்ளவே
வென்றிமங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதம்முன்
சென்றுமீளு மாறுபோல்வ செய்யநாவின் வாயவாய்
ஒன்றரொன்று நேர்படாமல் ஓடுநாய்கள் மாடெலாம்."

இக்கருத்து,

" முயல்வேட் டெழுந்த முடுகுவிசைக் கதநாய்
நன்னுப் புரையும் சீறடி "

என்னும் நற்றிணைச் செய்யுள் (252) அடிகளோடு ஒத்து வருதல் காணத்தகும்.

ஐங்குறு நூறு : திருநீலகண்ட நாயனர் பரத்தையைச் சேர்ந்து மீண்டதை அறிந்த அவர் மனைவியார், அவரோடு உடனுறை வாழ்வை விரும்பாராய்த் தம்மைத் தீண்டலாகாது என்று ஆணையிட்டார் (செ. 5, 6), இக்கருத்து,

" எந்நலந் தொலைவ தாயினுந்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே "

என்வரும் ஐங்குறு நூற்றுச் செய்யுள் (63) அடிகளின் கருத்தோடு ஒப்ப நோக்கத்தகும்.

---

23 *அகத்திணையியல், நூ. 5*

கலித்தொகை : மானக்கஞ்சாறர் புராணத்தில் வரும் (செ. 11).

" மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி "

என்னும் தொடரின் கருத்து,

"அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே "

என்னும் கலித்தொகைச் செய்யுள் (39) அடியின் கருத்தோடு பொருந்துதல் காணலாம்.

அகநானூறு : முருக நாயனர் புராணத்தில் (செ. 4),

" வண்டுபாடப் புனல்தடத்து மலர்ந்துகண்ணீர் அரும்புவன"

என்று கூறப்பட்டிருத்தல்,

" வண்டுபோ தவிழ்க்குந் தண்கமழ் புறவு"

என்னும் அகநானூற்றுச் செய்யுள் (74) தொடரை ஒத்திருத்தல் காணத்தகும்.

புறநானூறு : சேக்கிழார், புகழ்ச்சோழர் புராணத்தில் (செ. 33) மன்னன் தன் நாட்டு உயிர்களுக்கு உயிர் என்னும் பொருள்பட,

" மண்ணுக் குயிரா மெனுமன் னவனர் "

என்று குறித்துள்ளார். இக்கூற்று,

" நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம் "

என்ற புறநானூற்றுச் செய்யுள் (186) கூற்றோடு ஒத்துவருதல் காணத்தகும்.

மதுரைக்காஞ்சி : மானக்கஞ்சாறர் புராணத்தில் 'கஞ்சாறு' என்ற நகரத்தின் சிறப்புக் கூறுகையில்,

" புகல்முழவம் கனைசாறு மிடைவீதி "

என்ற (செ. 6) தொடரின் பொருள், மதுரைக்காஞ்சியில் வரும்

" முழவிமிழும் அகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகில் "

என்னும் (வரி 327–8) வரிகளின் பொருளுடன் ஒத்து வருதல் காண்க.

பட்டினப்பாலை : சேக்கிழார் சண்டீசர் புராணத்தில் காவிரி யாற்றின் சிறப்பை,

" பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யா தளிக்கும்
புனல்நாடு "

என்று (செ. 1) பாராட்டியுள்ளார். இது,

" வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய
கடற்காவிரி "

எனவரும் பட்டினப்பாலை அடிகளோடு (5–6) ஒப்புத நோக்கத் தகும்.

திருக்குறள் : சேக்கிழார் ஐம்பதுக்கு மேற்பட்ட திருக் குறள் கருத்துக்களைத் தமது நூலுள் ஆண்டுள்ளார். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்க :

(1) இயற்பகை நாயனுர் புராணத்துள் வந்துள்ள,

" செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர் போக"

" செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான் "

என்ற செய்யுள் (28, 29) அடிகளின் கருத்து,

" செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார் "

என்ற குறட்பாவின் கருத்துடன் ஒன்றுபடுதல் காண்க.

(2) அப்பூதி அடிகள் திருநாவுக்கரசருடன் நேரில் கலந்து பழகாதிருந்தும் அவரிடம் பெருமதிப்புக் கொண்டு அவரையே எப்பொழுதும் நினைந்திருந்தனர் என்பதைக் கூற வந்த சேக்கிழார்,

" காண்டகைமை இன்றியுமுன் கலந்தபெருங்
கேண்மையினுர் "

(செ. 203) என்று கூறியுள்ளார். இக் கருத்து,

" புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் "

என்ற குறட்கருத்துடன் ஒன்றுபடுதல் காணத்தகும்.

(3) சுந்தரர் சங்கிலியாருடன் இன்புற்றிருந்த நிலையைச் சேக்கிழார்,

" கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினுல் "

என்று (ஏயர்கோன், செ. 267) கூறியுள்ளார். இக் கருத்து,

" கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள "

என்ற குறட்கருத்துடன் ஒன்றுபடுகிறதன்றோ ?

சிலப்பதிகாரம் : (1) கண்ணப்பரது கன்னிவேட்டை விழாவைக் காணவந்த வேட்டுவச் சிற்றரசர் குறிஞ்சிநிலப் பொருள்களை எடுத்துவந்து தம் அரசனுக்குக் காணிக்கையாகத் தந்தனர் என்று சேக்கிழார் குறித்துள்ளார்.

" மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர்
கொணர்ந்தார் எங்கும். " 23a

தன் நாட்டு மலைவளத்தைக் காணச் சென்ற செங்குட்டுவனைக் காணவந்த வேட்டுவக்குடிகள் குறிஞ்சிநிலப் பொருள்களைக் கொண்டுவந்தனர் என்று இளங்கோவடிகள் குறிக்கின்றுர்.[24] இவ்விரு செய்திகளும் ஒன்றுபடல் காணத்தகும்.

23a கண்ணப்பர் புராணம், செ. 31
24 சிலப்பதிகாரம், காட்சிக்காதை, வரி 37-55

(2) கரிகாற் சோழன் இமயம் சென்று அதன்மீது புலிப் பொறி பொறித்து மீண்ட செய்தியைச் சேக்கிழார் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் :

" என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்*கரி காற்பெரு வளத்தோன்*
வந்தி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை "[25]

என்று கூறியுள்ளார்.

இதே கருத்து காலத்தாற் முற்பட்ட சிலப்பதிகாரத்திற் காண லாம்.

மணிமேகலை : (1) சேக்கிழார் திருநாட்டுச் சிறப்பில் (செ. 2) அகத்திய முனிவனது கமண்டலத்திலிருந்து வெளிப்பட்ட நீரே காவிரி ஆருகப் பெருக்கெடுத்தது என்பதைக் கீழ்வருமாறு கூறியுள்ளார் :

" ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி. "

இதே கருத்து கீழ்வருமாறு மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது :

" அமர முனிவன் அகத்தியன் தனுஅது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை "[25a]

(2) சுந்தரர் தம் பிள்ளைப் பருவத்தில் " ஐம்படைச் சதங்கை சார்த்தி " இருந்தார் என்பது பெரியபுராணம்.[26] இத் துடன்,

" அமளித் துஞ்சும் *ஐம்படைத் தாலிக்*
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர், "

எனவரும் மணிமேகலை அடிகள் ஒப்பு நோக்கத்தக்கன.[27]

---

25 திருக்குறிப்புத் தொண்டர் புராணம், செ. 85
25a பதிகம், வரி 11-12
26 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 4
27 துயிலெழுப்பியகாதை, வரி 56-57

சிந்தாமணி : (1) கண்ணப்பர் சிவலிங்கத்தை விட்டு வாராமைக்கு அவருடன் சென்ற நாணன்,

" வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்பென்ன நீங்கான் "

என்று உடும்புப் பிடியை உவமையாகக் கூறினான். இந்த உவமை (செ. 116),

" திண்கிறப் பறித்த போதும் தானளை விடுத்தல் செல்லா
நிணப்புடை *உடும்ப*ன் னுரை "

என்னும் சிந்தாமணிச் செய்யுள் (2883) அடிகளிலுள்ள உவமையை நினைவூட்டுகிறதன்றோ ?

(2) பசிய வயல்களுக்கிடையில் இருந்த தாமரை மலர்கள் மேல் சங்குகள் இருந்த தோற்றம் — *ஊர்கோளால்* சூழப்பட்ட திங்களின் தோற்றத்தை ஒத்திருந்தது என்பது சேக்கிழார் வாக்கு.

தளைத்த டம்பணை எழுந்தசெந் தாமரைத் தவிசின்
இளைத்த சூல்வளை கண்படுப் பனஇடை எங்கும்
விளைத்த பாசொளி விளங்குநீள் விசும்பிடை *ஊர்கோள்*
வளைத்த மாமதி போன்றுள மருதநீர் வைப்பு "[8]

சேக்கிழார்க்கு முற்பட்ட சிந்தாமணி ஆசிரியர் இதே உவமையை,

" கட்டழற் கதிரை *ஊர்கோள்*
வளைத்தவா வளைத்துக் கொண்டார் "

என்று (1136) ஆண்டிருத்தல் காண்க.

இறையனார் களவியல் உரை : (1) சுந்தரர்க்குப் பெண்தர விரும்பிய சடங்கவி சிவாச்சாரியார் சுந்தரருடைய குலம் முதலிய வற்றை ஆராய்ந்து,

" *ஒத்த பண்பி*னால் அன்பு நேர்ந்தார் "

என்பது கூறப்பட்டுள்ளது.[29] '*ஒத்த பண்பு*' என்று சேக்கிழார் கூறியுள்ள தொடருடன்,

---

8 *திருக்குறிப்புத் தொண்டர் புராணம், செ. 26*
29 *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 8*

'இவனும் பதினுருட்டைப் பிராயத்தனுய் இவளும் பன்னீ ராட்டைப் பிராயத்தளாய் *ஒத்த பண்பும்* ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையவராய்......" எனவரும் களவியல் உரை (சூ. 1) ஒப்பு நோக்கத் தகும்.

(2) நங்கை பரவையார் திருவாரூர்க் கோவிலில் சுந்தரரை முதன் முதலில் கண்டார்; காதல் கொண்டார். உடனே மனத்தில் அடக்க முடியாத *ஒரு வேட்கை,* தான் அதுகாறும் கைக்கொண்டு ஒழுகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்மைக் குணங்கள் ***நான்கினையும் அடக்கி*** மேலே எழுந்தது என்னும் பொருள்படச் சேக்கிழார் கீழ்வரும் செய்யுளைப் பாடி யுள்ளார் :

" கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கும் மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத ***தொருவேட்கை***
மண்கொள்ளா நாண்மடம்அச் சம்பயிர்ப்பை
வலிந்தெழலும் " [30]

இக் கருத்தினைக் கீழ்வரும் களவியல் (நூ. 2) உரையில் காண்க :

" ***வேட்கை*** என்பது என்னேவெனின், ஒருவரை ஒருவர் இன்றி யமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் ***தானேயாய்*** நாண்வழிக் காசு போலவும் நீர்வழி மிதவைபோலவும் பான்மைவழிக் கூடி இருவர் உயிரை யும் புணர்விக்கும் ..... நாணம் முதலிய ***நான்கும்*** புனல் ஓடு வழியிற் புல் சாய்ந்தாற்போல வேட்கையால் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பன. "

சமயநூல் புலவர்

சேக்கிழார் பெருமான் சம்பந்தர் பாடிய முதல் மூன்று திரு முறைகளையும், அப்பர் பாடிய அடுத்த மூன்று திருமுறைகளையும், சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறையையும், மணிவாசகர் பாடிய எட்டாம் திருமுறையையும், திருமூலர் பாடிய பத்தாம் திரு

30 *தடுத்தாட்கொண்ட புராணம், செ. 143*

முறையையும் நன்கு படித்தவர் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். அவர் முதல் ஏழு திருமுறைகளையும் தாம் பாடிய புராணத்தில் பல முறைகளில் கையாண்டுள்ளார். வகைக்கு ஒரு சான்றினை இங்குக் காண்போம் :

1. சேக்கிழார், நாயன்மார் இன்ன முதலையுடைய திருப் பதிகத்தைப் பாடினார் என்று பொருள்படும் முறையில் ***பதிக முதற் குறிப்பை*** மட்டும் பல இடங்களில் சுட்டியுள்ளார். கீழ் வருவனவற்றைக் காண்க :

(1) " அருவிகண் வார்வுறப் பாடலுற்றார்
'*அங்கமும் வேதமும்*' என்றெடுத்து "[31]

(2) " '*மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும்*' என்னும்
கோதறு தண்டமிழ்ச் சொல்லால்
குலவு திருப்பதி கங்கள். "[32]

(3) " '*பித்தாபிறை சூடீ*'எனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உய எடுத்தார்"[33]

2. சேக்கிழார் சில இடங்களில் நாயன்மார் ***பதிகங்களின் முதலும் இறுதியும்*** குறித்துள்ளார்.

(1) " செம்மைபெற எடுத்ததிருத்
'*தோடுடைய செவியன்*' எனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம்
பிரமபுரம் மேவினார்
தம்மைஅடை யாளங்க
ளுடன்சாற்றித் தாதையார்க்(கு)
எம்மைஇது செய்தபிரான்
'*இவனன்றே*'என இசைத்தார். "[34]

---

31 சம்பந்தர் புராணம், செ. 486
32 திருநாவுக்கரசர் புராணம், செ. 384
33 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 74
34 சம்பந்தர் புராணம், செ. 76

(2) " '*ஈன்ருளு மாய்எனக் கெந்தையு*
மாகி ' எனவெடுத்துத்
'*தோன்ருத் துணையாய் இருந்தனன்*
தன்னடி யோங்கட் கென்று
வான்தாழ் புனற்கங்கை வார்சடை
யானைமற் றெவ்வுயிர்க்கும்
சான்ரும் ஒருவனைத் தண்டமிழ்
மாலைகள் சாத்தினரே. "[35]

3. சேக்கிழார், நாயன்மாரது பதிகச் செய்யுளைத் தம் புராணச் செய்யுளில் திறம்பட அமைத்துள்ளார்.

(1) " *சடையானை* எவ்வுயிர்க்கும் தாயா னுனைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் ருனை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவி னுனும்
பாம்பணையில் துயின்ருனும் பரவும் கோலம்
உடயானை '*உடையானே தகுமோ இந்த*
ஒள்ளிழையாள் உள்மெலிவெ'ன் றெடுத்துப்
பாட. "[36]

(2) " செய்யமா மணிஒளிசூழ் திருமுன்றின்
முன்தேவா சிரியன் சார்ந்து
'*கெய்யுலா மலர்ச்சோலைக்*
குயில்கூவ மயில்ஆலும் ஆரூராரைக்
கையினுல் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேன்'என்
றெய்தரிய கையறவால் திருப்பதிகம்
அருள்செய்தங் இருந்தார் அன்றே. "[37]

4. சிறந்த ஒரு பதிகத்தின் கருத்தைப் பல செய்யுட்களில் விளக்குதல் சேக்கிழார் வழக்கமாகும். சம்பந்தர் 'தோடுடைய'

---

35 *அப்பர் புராணம், செ. 134*
36 *சம்பந்தர் புராணம், செ. 482*
37 *அப்பர் புராணம், செ. 224*

என்று தொடங்கிப் பாடிய முதற் பதிகத்தின் கருத்தைச் சேக்கிழார் பல செய்யுட்களில் விளக்கிக் கூறுதல் படித்து இன்புறத் தகும்.[38]

5. மதுரையில் சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர் தீ வைத்தனர். சம்பந்தர் சிவபெருமானை நினைந்து ஒரு பதிகம் பாடி,

"*பையவே* சென்று பாண்டியர்க்காக"

என்று முடித்தார். சம்பந்தர் 'பையவே' என்று குறித்தமைக்குச் சேக்கிழார் காட்டும் காரணங்கள் படித்து இன்புறத்தக்கவை. அக் காரணங்களைக் கொண்டுள்ள செய்யுளைக் கீழே காண்க :

"பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்
அரசன்பால் அபராத முறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆத லாலும்
தீப்பிணியைப் '*பையவே செல்க*' என்றார்"[39]

6. சேக்கிழார், நாயன்மார் பாடிய *பதிக வகைகளை அப்படியே தம் பாக்களில் வைத்துப் பாடியுள்ளார்.*

(1) திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தி மடத்தில் தங்கியிருந்தபொழுது கீழ்வருவனவற்றைப் பாடினார் எனவரும் சேக்கிழார் பாக்களைக் காண்க :

(அ) "நின்ற*திருத் தாண்டகமும்* நீடு*தனித் தாண்டகமும்*
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்து*திருத் தாண்டகமும்*
கொன்றைமலர்ச் சடையார்பால் குறைந்த*திரு நேரிசையும்*
துன்று*தனி நேரிசையும்* முதலான தொடுத்தமைத்தார்."

38 சம்பந்தர் புராணம், செ. 75-78
39 சம்பந்தர் புராணம், செ. 705

(ஆ) " ஆருயிரின் *திருவித்தம் தசபுரா ணத்தடைவும்*
பார்பரவும் *பாவநா சப்பதிகம்* பன்முறையும்
நேர்படநின் றறைகூவுந் *திருப்பதிகம்* முதற்பிறவும்
பேரருளின் கடலளிக்கும் பெருமானைப் பாடினார்."[40]

(2) சம்பந்தர், அப்பரை முதன்முதல் சீகாழியில் சந்தித்து அங்குத் தங்கியிருந்தபொழுது பலவகைப் பதிகங்கள் பாடினார் என்பதைச் சேக்கிழார் கீழ்வரும் செய்யுட்களில் குறித்துள்ளார் :

(அ) " செந்தமிழ் *மாலை* விகற்பச் செய்யுட்க ளான்*மொழி மாற்றும்*
வந்தசொற் *சீர்மாலை மாற்றும்* வழிமொழி எல்லா *மடக்கும்*
சந்த வியமகம் ஏகபாதந் தமிழ்இ *ருக்குக்குறள்* சாத்தி
எந்தைக் *கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு.*"

(ஆ) " *நாலடி மேல்வைப்பு* மேன்மை நடையின் முடு*குமி ராகம்*
சால்பினில் *சக்கரம்* ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினார் ஞானசம் பந்தர்."[41]

7. சேக்கிழார், *நாயன்மார் பாடிய சந்தத்திலேயே* அப்பதிகங்களைக் குறிக்கும் செய்யுட்களைச் சில இடங்களில் பாடியிருத்தல் படித்து இன்புறத் தகும்.

(1) சுந்தரர் '*பித்தா பிறைசூடீ*' என்ற பதிகத்தை இந்தளம் என்ற பண்ணில் பாடினார். சேக்கிழார் அச் செய்தியை அதே பண்ணில் அமைத்துப் பாடியிருத்தல் காண்க :

(அ) " கொத்தார்மலர்க் குழலாளொரு
கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ்
வயன்நாவலர் பெருமான்

40 [illegible] 411 - 41[illegible]
41 சம்பந்தர் புராணம், செ. 276 - 277

'*பித்தாபிறை சூடி*'எனப்
பெரிதாம்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல
கெல்லாம்உய எடுத்தார்." [42]

(2) அப்பர் திருவையாற்றைத் தரிசிக்கையில் 'மாதர்ப்பிறைக் கண்ணியானை' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். சேக்கிழார் அச் செய்தியை *அதே சந்தத்தில்* அமைத்துப் பாடியுள்ளார்.

"*மாதர்ப் பிறைக்கண்ணி யானை*
மலையான் மகளொடும்' என்னும்
கோதறு தண்டமிழ்ச் சொல்லால்
குலவு திருப்பதி கங்கள்
'*வேத முதல்வர்ஐ யாற்றில்*
விரவுஞ் சராசரம் எல்லாம்
காதல் துணையொடும் கூடக்
கண்டேன்' எனப்பாடி நின்றார்." [43]

8. சேக்கிழார் நாயன்மார் பாடிய திருப்பாடல்களைக் கவியின் கூற்றாக அமைத்துச் சில இடங்களில் பாடியுள்ளார். அப்பர் நமிநந்தி அடிகளின் சிறப்பைத் திருவாரூர்ப் பதிகத்தில் கீழ்வருமாறு பாடியுள்ளார்.

"ஆராய்ந் தடித்தொண்டர் *ஆணிப்பொன்*
ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் *நம்பிநந்தி*
நீரால் திருவிளக் கிட்டமை
நீணா டறியு மன்றே." [44]

---

42 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 74
43 திருநாவுக்கரசர் புராணம், செ. 384
44 நான்காந்திருமுறை, 102-திருவாரூர்ப் பதிகம், 2

சேக்கிழார் இதனை நினைவிற்கொண்டு, நமிநந்தியடிகள் புராணத்தில் கீழ்வருமாறு பாடியுள்ளார் :

" நீறு புனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதி யாகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாம் செய்து மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப்புற்றில் இருந்தார் ***தொண்டர்க் காணி***யெனும்
பேறு திருநாவுக் கரசர் விளம்பப் பெற்ற பெருமையினார்."[54]

9. சேக்கிழார் தேவாரப் பதிகங்களின் ***உட்குறிப்பை*** நன்கு அறிந்தவர் என்பதற்குக் கீழ்வரும் எடுத்துக்காட்டு ஏற்ற சான்றாகும்.

" கரிய கண்டர்தங் கோயிலை
வலங்கொண்டு காதலாற் பெருகன்பு
புரியும் உள்ளத்தர் உள்ளணைந்
திறைவர்தம் பூங்கழல் இணைபோற்றி
அரிய செய்கையில் அவனியில்
விழுந்தெழுந் தலைப்புறும் மனைவாழ்க்கை
சரிய வே'***தலைக் குத்தலை***
மாலை'என் றெடுத்தனர் தமிழ்மாலை."

" எடுத்த அத்திருப் பதிகத்தின் *உட்குறிப்(பு)*
: ***இவ்வுலகினிற் பாசம்***
அடுத்த வாழ்க்கையை அறுத்திட
வேண்டும்என் றன்பரன் பினிற்பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தம்
கயிலையிற் கணத்தவ ருடன்கூடத்
தடுத்த செய்கைதான் முடிந்திடத்
தங்கழற் சார்புதந் தளிக்கின்றார்."[46]

10. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடிய திருப்பதிகங்களின் கருத்துக்கள் அந் நாயன்மார் காலம் முதலே சைவப் புலவர்கள் வழியே வந்தனவாதல் வேண்டும். சேக்கிழார் அத்

---

45 நமிநந்தியடிகள் புராணம், செ. 31
46 வெள்ளானைச் சருக்கம், செ. 29-30,

த்தைய கருத்துக்களை நன்கறிந்தவர் என்பதற்குச் சில பதிகங்களுக்கு அவர் தரும் விளக்கமே ஏற்ற சான்ருகும். சம்பந்தர் வையையாற்றில் ஓர் ஏட்டினை விட்டார். அந்த ஏடு சம்பந்தர் எழுதிய பதிகத்தைத் தன்னகத்தே கொண்டது. அதன் முதல் செய்யுளைக் கீழே காண்க :

" வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. "

இத்திருப்பதிகத்தில் பன்னிரெண்டு செய்யுட்கள் உள்ளன. இறுதிச் செய்யுள் சம்பந்தரது முத்திரை பெற்றது. எஞ்சிய பதினெரு செய்யுட்களுக்கும் சேக்கிழார் பெருமான் தந்துள்ள விளக்கம் படித்து இன்புறத்தகும். அவர் சம்பந்தர் புராணத்தில் இப்பதினெரு பாடல்களுக்கும் உரிய விளக்கத்தை இருபத்து மூன்று செய்யுட்களில் உரைத்துள்ளார்;[47] முதற் செய்யுளுக்குரிய விளக்கம் நான்கு செய்யுட்களில் அமைந்துள்ளது; இரண்டாம் பாவிற்குரிய விளக்கம் மூன்று செய்யுட்களில் கூறப்பட்டுள்ளது; மூன்ரும் செய்யுளுக்குரிய விளக்கம் நான்கு பாக்களில் தரப்பட்டுள்ளது; நான்காம் செய்யுளுக்குரிய விளக்கம் இரண்டு பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது; ஐந்தாம் செய்யுளுக்குரிய விளக்கம் நான்கு பாக்களில் தரப்பட்டுள்ளது; எஞ்சிய ஆறு செய்யுட்களுக்கும் உரிய விளக்கம் ஒவ்வொரு செய்யுளில் ஓதப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், ***சேக்கிழார் திருப்பதிகங்களின் விளக்க உரையாசிரியர்*** என்று கூறுவதற்கு இவ் விளக்கம் பெருந்துணை புரிகிறது என்னலாம். இத்தகைய இடங்கள் பல வாகும்.

திருவாசகம் : (1) மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் ' திருத்தோள் நோக்கம் ' என்னும் பகுதியில்,

" சித்தஞ் சிவமாக்கிச் *செய்தனவே தவமாக்கும்*
அத்தன் கருணையினுல் தோணேக்கம் ஆடாமோ "

---

47 செ. 821-843.

என்று பாடியுள்ள கருத்தினைச் சேக்கிழார் சண்டீசர் புராணத்தில் (செ. 59),

" x x x x ஈறிலாதார் தமக்கன்பு
தந்த அடியார் *செய்தனவே தவமாம்* அன்றே
சாற்றுங்கால் "

என்று ஆண்டிருத்தலைக் காண்க.

(2) " சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் ***திருப்பாதப் போதுக் காக்கி***
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி "

என்னும் திருச்சதகச் செய்யுள் (30) அடிகளின் கருத்து,

" ஆங்கவர் மனத்தின் செய்கை *அரனடிப் போதுக் காக்கி*
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக்
காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க் காகப்
பாங்குடை உடையுங் கீளும் பழுதில்கோ வணமும்
நெய்வார். "

என்னும் நேசநாயனார் புராணச் செய்யுளில்[48] அமைந்திருத்தல் காண்க.

திருமந்திரம் ; (1) திருமூலர் தமது வரலாற்றைத் திருமந்திரப் பாயிரத்தில் (செ. 71-94) விரித்துக் கூறியுள்ளார். சேக்கிழார் திருமூலர் வரலாற்றைப்பாட அச் செய்யுட்கள் பெரிதும் துணை புரிந்தன என்னலாம்.

(2) சண்டீசருக்கு ஐந்து வயதானதும் ஞானவுணர்வு பெருகியது என்பதைச் சேக்கிழார்,

" முந்தை அறிவின் தொடர்ச்சியினால்
முகைக்கு மலரில் வாசம்போல்

---

48 நேசநாயனார் புராணம், செ. 3

சிந்தை மலர உடன்மலரும்
செவ்வி உணர்வு சிறந்ததால் "[49]

என்று உவமை வாயிலாக விளக்கியுள்ளார். இவ்வுவமையும் பொருளும்,

" *பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்*
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது "

என்னும் திருமந்திரச் செய்யுளில் இருத்தல் காணத்தகும்.

சைவசித்தாந்தம் : (1) சேக்கிழார், 'மானக்கஞ்சாறர், தம் செல்வம் அனைத்தினுக்கும் உடையவர் சிவனுக்கு அடியாராகும் பெருந்திருவுடையவர் என்று எண்ணி அவர்களை வழிபட்டு *அவர்களோடு பழகி* அவர்தம் குறிப்பறிந்து தம் செல்வத்தை வழங்கினர்', என்னும் கருத்தில்,

" மாறில்பெருஞ் செல்வத்தின் வளம்பெருக மற்றதெலாம்
ஆறுலவுஞ் சடைக்கற்றை அந்தணர்தம் *அடியாராம்*
ஈறில்பெருந் திருவுடையார் உடையாரென்
றியாவையும்நேர்
கூறுவதன் முன்னவர்தங் குறிப்பறிந்து
கொடுத்துள்ளார். "[50]

என்று பாடியுள்ளார். இக் கருத்தைச் சேக்கிழாருக்குப் பின்புவந்த மெய்கண்டார் தமது சிவஞானபோதத்துள் (சூ. 12) கீழ்வருமாறு கூறியுள்ளார் :

" செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ *யன்பரோடு மரீஇ*
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே." என்று.

(2) சிவனடியாராதல் பெறத்தக்க பேறு என்பது சேக்கிழார் கூற்று.

" பணிவுடைய வடிவுடையார் பணியினெடும் பனிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க் *காளாகும் பதம்பெற்ற*

---

49 *சண்டீசர் புராணம், செ. 13*
50 *மானக்கஞ்சாறர் புராணம், 9*

தணிவில்பெரும் ***பேறுடையார்*** *தம்பெருமான் கழல்சார்ந்த*
துணிவுடைய தொண்டர்க்கே ஏவல்செயுந்
தொழில்பூண்டார். [51]

சேக்கிழார்க்குப்பின் வந்த மெய்கண்டார்க்கு மாணவரான அருள்நந்தி சிவாசாரியார் தமது *சிவஞான சித்தியாருள்*,

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடு *சைவமாம் சமயம் சாரும்*
ஊழ்பெறல் அரிது" [52]

என்று இதனை விளக்கிக் கூறியுள்ளார்.

சேக்கிழார் காலம் கி. பி. 1135–1150 என்பது முன்பே கூறப் பட்டது. மெய்கண்டார் மூன்றாம் இராசராசன் காலத்தவர். (அவர் பெயர்கொண்ட கல்வெட்டுக் கி. பி. 1232 இல் வெளியிடப் பட்டது.) [53] எனவே, சிவஞான போதமும் சிவஞானசித்தியா யாரும் சேக்கிழாருக்குப் பிற்பட்டவை என்பது தெளிவு. ஆதலால் சேக்கிழார் சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தமக்கு முற்பட்ட திருமந்திரம், அதுபோன்ற பிறநூல்கள் ஆகியவற்றிலிருந்து கொண்டனராதல் வேண்டும். இராசசிங்கன் (கி. பி. 685–720) என்ற பல்லவன் சைவசித்தாந்தத்தைப் பின்பற்றுபவன் [54] என்று காஞ்சி கயிலாசநாதர் கோவில் கல்வெட்டுக் கூறுகின்றது. எனவே, அவன் பின்பற்றத்தக்க முறையில் அவன் காலத்தில் ***சைவசித்தாந்த நூல்கள் இருந்திருத்தல் வேண்டும்*** என்பது தெரி கிறது. சேக்கிழார் இத்தகைய நூல்களைப் படித்தே சைவ சித்தாந்தக் கருத்துக்களை உணர்ந்தார் எனக்கருதுதல் பொருத்த மாகும்.

பலகலைப் புலவர்

இசைக்கலை : சங்க நூலாகிய பரிபாடலில் வரும் பாடல் களுக்கு இசை வகுக்கப்பட்டுள்ளது. மாதவியின் காலத்தில்

---

51 *மானக்கஞ்சாறர் புராணம், செ. 8*
52 *சூ. 2, மேற்கோள் செய்யுள் 11*
53 *திரு. மு. இராகவய்யங்கார், சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக். 97-98*
54 S. I. I. 1 p. 20

இசைக்கலை சிறந்திருந்தது என்பதனை அரங்கேற்றுகாதையாலும் சேக்கிழார்க்குப் பின்வந்த அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியப்படுகின்றது. அடியார்க்கு நல்லார் காலம் ஏறத்தாழக் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு என்னலாம். எனவே, அவர்காலத்தில் இருந்த இசைநூல்கள் அனைத்தும் அவர்க்கு முற்பட்ட சேக்கிழார் காலத்திலும் இருந்தனவாகும். எனவே, அவர் அந் நூல்களின் துணையைக்கொண்டு இசைபற்றிய பல செய்திகளைத் தமது பெருங்காவியத்தில் குறித்துள்ளார் என்பது பொருத்தமாகும்.

(4) சிவபெருமாஞல் தடுத்து ஆட்கொள்ளப்பட்ட சுந்தரர் முதன் முதல் பாடிய 'பித்தா பிறைசூட' என்று தொடங்கும் பதிகத்தை *இந்தளம்* என்ற பண்ணில் பாடிஞர் என்பதைக் கூறுமிடத்துச் சேக்கிழார் விளக்கும் பண்வகை முதலியன அவரது இசைப் புலமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

" முறையால்வரு மதுரத்துடன் மொழி*இந்தள* முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையிஞல்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிகர் இல்லான்."[55]

(2) பதமான மூங்கிலைத் தேர்ந்தெடுத்துப் புல்லாங்குழல் செய்யும் முறை, ஆனுயஞர் அப் புல்லாங்குழலை வாசித்த முறை, அக்குழல் இசையால் உயிர்கள் அடைந்த இன்பம் என்பவை ஆனுயர் புராணத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.[56] நாம் இப்பாடல்களிலிருந்து சேக்கிழாரது இசைக்கலையறிவை நன்கு அறியலாம்.

நடனக் கலை : திருநாவுக்கரசர் திருப்புகலூரில் தம் இறுதி நாட்களைக் கழித்துக்கொண்டிருந்த பொழுது சிவபெருமான் அவரது உள்ளத்தைப் பரிசோதிக்க விரும்பித் தேவலோக நடன மாதர் சிலரை ஏவினர். அம்மகளிர் அவர் முன்பு தோன்றி ஆடல் பாடல்களை நிகழ்த்தினர். சேக்கிழார் இவற்றை விளக்குமிடத்துத் தமது நடனக் கலையறிவை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

---

55 தடுத்தாட்கொண்ட புராணம், செ. 75
56 செ. 13, 22-36

"கற்பகப்பூந் தளிரடிபோய் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடுவார்."[57]

வானநூற்கலை :

"மகிழ்ந்த தன்தலை வாழுமந்த நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு ***துணைப்புணர் ஓரை***யுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையில் நிலவுமேழ் கடல்நீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்."

இஃது சேக்கிழாரது வானநூற் புலமையை விளக்க ஏற்ற சான்றுகும்.

சூரியன் மிதுனராசியில் சேர்ந்ததால், வெயிலின் கொடுமை மிகுதியாயிற்று; அதனுல் முதுவேனிற்காலம் தொடக்கமாயிற்று என்பது பொருள். மிதுனம் இரட்டை ஆதலால் சேக்கிழார் அதனைப் 'துணைப்புணர் ஓரை' என்று குறித்தார்.[58]

மருத்துவக் கலை: சேக்கிழார் தாம் இயற்றிய புராணத்துள் சூலைநோய், பாம்புக்கடி, கண்நோய், முயலகன் என்ற நோய், பனிநோய், வெப்புநோய் என்பவற்றை மிகத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார். ***சூலைநோய்*** திருநாவுக்கரசர் புராணத்திலும்,[59] ***கண்நோய்*** கண்ணப்பர் புராணத்திலும்,[60] ***பாம்புக்கடி*** அப்பூதியடிகள் புராணத்திலும்,[61] அடுத்துள்ள மூன்று நோய்கள் சம்பந்தர் புராணத்தும்[62] இடம் பெற்றுள்ளன. சேக்கிழார் ஒவ்வொரு நோய்க்குரிய காரணங்களையும், அவற்றின் இயல்புகளையும், அதனை மாற்றும் முறைகளையும் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். அவர் கூறியவற்றையே மருத்துவ நூல்களும் கூறுகின்றன என்பதை நோக்க, அப் புலவர் பெருமானது மருத்துவக்கலைநூலறிவை என்னென்பது! இப் பலவகை நோய்களுள் சூலை நோயைப்பற்றிய விவரங்களை மட்டும் இங்குக் காண்போம் :

---

57 *திருநாவுக்கரசர் புராணம், செ. 420*
58 *சம்பந்தர் புராணம், செ. 384*
59 *திருநாவுக்கரசர் புராணம், செ. 49-78*
60 *செ. 176*
61 *செ 25-28*
62 *செ. 311-319; 333-335; 704, 711-713*

சூலை நோய் : ஒருவகைக் கொடிய வயிற்றுவலி; வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் தத்தம் நிலை மாறுவதால் இந் நோய் உண்டாகும். இது சிகிச்சைக்கு வசப்படாதது. வயிற்றுக் குடச்சல், இரைச்சல், நாவறட்சி, மூர்ச்சை, பொருமல், வயிறு மந்தமாக இருத்தல், வாய் சுவையுணர்வு அற்று இருத்தல், கபம் மிகுதியால், பெருமூச்சு விடுதல், விக்கல் உண்டாதல் ஆகியவை இந் நோய்க்குரிய துன்பங்களாகும். [63]

இத்துன்பங்கள் சூலைநோயால் வருந்திய அப்பருக்கு உண்டாயின என்பதை அப்பர் பதிகத்தாலும் சேக்கிழார் பாக்களாலும் தெளிவாய் அறியலாம். [64]

அரசியல் சட்டங்கள் : சேக்கிழார் சோழப் பெருநாட்டின் முதல் அமைச்சராய் இருந்தவர் ஆதலால் அரசியல் சட்டங்களை நன்கு அறிந்திருந்தனர் என்பதற்குக் கண்ணப்பர் புராணத்திலிருந்து ஒரு சான்றினைக் காட்டலாம். அது மிகவும் நுட்பமானது.

(1) கன்னி வேட்டையின்பொழுது கண்ணப்பருடன் சென்ற வேடர்கள், உடுக்கை போன்ற கால்களை உடையனவும் மடிந்த காதுகளையுடையனவும் ஆகிய யானைக் கன்றுகளையும் பிற விலங்குகளின் சிறிய குட்டிகளையும், தள்ளாடி நடந்துவரும் சூல்கொண்ட விலங்குகளையும் வேட்டையாடவில்லை [65] என்று சேக்கிழார் குறித்துள்ளார். இச் செய்யுள், வேட்டுவர் தம் ***வேட்டையில் கையாண்ட நீதி முறையை*** எடுத்துக் காட்டுவதாகும். இக்காலத்திலும் யானைகளின் பாதுகாப்புச் சட்டம் முதலிய வேட்டைக்குரிய சட்டங்களும், காட்டு இலாக்காச் சட்டங்களும் இவ்வடிப்படையில் அமைந்துள்ளதைக் காணலாம்.

(2) சிவபெருமான் சுந்தரரைத் தடுத்து ஆட்கொள்ள முயன்ற பொழுது நடைபெற்ற ***ஊரவையார்*** விசாரணை, அக்கால ஊராட்சி மன்ற நடைமுறைகளைப் பிழையற எடுத்துக்காட்டுவதாகும்.

---

63 மாதவநிதானம் (மருத்துவநூல்), பக். 88
64 திருநாவுக்கரசர் புராணம், செ. 49-51, 57
65 செ. 86

பண்பட்ட நூலாசிரியர்

(1) முத்திநாதன் என்ற பகைவன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல விரும்பி, மாறுவேடம் அணிந்து அரண்மனையுள் நுழைந்து 'அவரைக் கொன்றுவிட்டான்' என்பதைச் சேக்கிழார் கூறாமல், "*நினைந்தஅப் பரிசே செய்தான்*" [66] என்று கூறினார். ஏனாதி நாயனாரின் பகைவன் அவர் தலையை வாளால் வெட்டினான். சேக்கிழார் இந்த நிகழ்ச்சியை இப்படி வெளிப்படையாகக் கூறாமல், "*தன்கருத்தே முற்றுவித்தான்,*" [67] என்று குறித்தார். இவை இரண்டும், சேக்கிழார் தீயதைக் கூற அஞ்சும் இயல்பினர் என்பதை எடுத்துக் காட்டுவன என்னலாம்.

(2) நயம்பட உரைப்பதிலும் சேக்கிழார் பண்பட்டவர். திருநீலகண்டர் பரத்தையர் இன்பத்தில் தாழ்ந்தார் என்பதை வெளிப்படக் கூறாமல்,

"இளமை மீதூர இன்பத்துறையினில் எளியர் ஆனார்" [68]

என்று குறித்தார்.

(3) **வருணனை :** இடத்தையும் நிகழ்ச்சிகளையும் வருணிப்பதில் சேக்கிழார் சிறந்து விளங்குகின்றார். அவர் ஆதனூர்ச் சேரி வருணனை, [69] நாகை நுளைப்பாடி வருணனை, [70] உடுப்பூர் வேடர் சேரி வருணனை [71] ஆகிய மூன்றையும் சொல்லோவியங்களாகத் தீட்டியுள்ள அருமைப்பாடு படித்துப் படித்துச் சுவைக்கத் தகும்.

(4) சேக்கிழார் எளிய நடையில் தம் பாக்களைப் பாடியுள்ளார். அவற்றைப் படித்து அறிவது எளிது. எளிய நடை வேண்டும் என்று இக்காலத்தார் கூறுவதைச் சேக்கிழார் அக்காலத்திலேயே செயற்படுத்தினார் என்பதற்கு பெரியபுராணம் ஏற்ற சான்றாகும். சான்றாகக் கீழ்வரும் பாடலைக் காண்க :

---

66 மெய்ப்பொருள் நாயனார் புராணம், செ. 15
67 ஏனாதிநாயனார் புராணம், செ. 40
68 திருநீலகண்டர் புராணம், செ. 3
69 திருநாளைப்போவர் புராணம், செ. 6-10
70 அதிபத்தர் புராணம், செ. 5-9
71 கண்ணப்பர் புராணம், செ. 3-6

“மற்றவர் தம்மை நோக்கி,
‘மானுடம் இவர்தாம் அல்லர்;
நற்பெருந் தெய்வ மாதல்
நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன்; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்ம்மின்’ என்ருன். [72]

(5) **வினைக நூலைப் பெருக்கும் தன்மை :** சேக்கிழாரிடம் காணுதல் அருமையாகும். கண்ணப்பரைக் காளத்தி மலையிலிருந்து அழைத்துச்செல்ல வந்த பெற்ருேர் பயனின்றி மீண்டதைச் சேக்கிழார் ஒரே செய்யுளில் கூறியிருப்பது பாராட்டத் தகும். அச் செய்யுளைக் கீழே காண்க :

“நாணனொடு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊனுமுறக் கமுமின்றி அணங்குறைவா னையுங்கொண்டு
பேணுமக ஞர்தம்பால் வந்ததெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி வாராமல் கைவிட்டார்.”[73]

(6) சேக்கிழார் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் ***நானிலத்து ஐந்திணை வளத்தை*** நாற்பத்திரண்டு செய்யுட்களில் கூறியுள்ளார்; தொண்டை மண்டலத்து நிலப்பிரிவுகள், அந் நிலங்களில் அமைந்த தலங்கள், அவற்றின் சிறப்புக்கள் முதலியவற்றை நன்கு விளக்கியுள்ளார்; இவற்றுடன் திணைமயக்கமும் வியப்புறுவகையில் கூறியுள்ளார். நெய்தலும் குறிஞ்சியும் மயங்குதல் (செ. 41), மருதமும் குறிஞ்சியும் மயங்குதல் (செ. 42), முல்லையும் குறிஞ்சியும் மயங்குதல் (செ. 43), முல்லையும் நெய்தலும் மயங்குதல் (செ. 44), முல்லையும் மருதமும் மயங்குதல் (செ. 45), நெய்தலும் மருதமும் மயங்குதல் (செ. 46) ஆகியவற்றைக் கூறியுள்ள திறன், வேறு தமிழ்க் காவியங்களில் காணுதல் அருமையாகும். சேக்கிழாரது இவ்வரிய திறனை,

---

72 *காரைக்கால் அம்மையார் புராணம், செ. 47*
73 *கண்ணப்பர் புராணம், செ. 153*

" திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந்
திணைவளமும் தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் *குன்றைநகர்*
குலக்கவியே வல்லான் அல்லால்
கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு
தெரிந்துரைப்பார். "[74]

என்று, வியத்தகு முறையில் காஞ்சிப்புராணம் பாடிய பெரும் புலவராகிய *சிவஞான முனிவரே* பாராட்டியுள்ளார் என்பது இங்கு அறியத்தகும்.

முடிவுரை : திருத்தொண்டர் புராணம் சுந்தரரைப்பற்றிய புராணமே ஆயினும் அவரால் பாடப்பெற்ற நாயனமார் பலருடைய வரலாறுகளும் இப் புராணத்துள் இடம்பெற்றிட வேண்டும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இவற்றுள் சைவசமய குரவரான திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தரிசித்த தலங்கள் பல; பாடிய பதிகங்கள் ஏறத்தாழ அறுநூறு. சேக்கிழார் இவையனைத்தும் நினைந்து அந் நாயன்மார் இன்ன முறையில் தலயாத்திரை செய்து இன்ன இன்ன பதிகங்களைப் பாடினர் என்று தமிழகம் முழுமையும் சுற்றி, நன்கு ஆராய்ந்து, முறைப் படுத்திக் கூறியிருத்தலும், சில இடங்களில் அக் குரவர்தம் பதிகங்களுக்கு விளக்கவுரை தந்திருத்தலும், கல்வெட்டுச் செய்திகளுக்குப் பொருந்த வரலாற்றுச் சிறப்புடைய நாயன்மார் வரலாறுகளைக் கூறியிருத்தலும் அவருடைய அரிய உழைப்பையும் ஆராய்ச்சி நுட்பத்தையும் நன்கு உணர்த்துவனவாகும். அரிய செய்திகளை எவர்க்கும் விளங்கும் எளிய நடையில் பாடும் திறனும் அப்புலவர்பால் அமைந்திருந்தமை வியக்கத்தகுவது. பல்லவர் காலத்துத் தமிழகம் முழுமையையும் படம்பிடித்துக் காட்டும் பெருநூல் இஃதொன்றே என்பது அறியத்தகும். அப் பல்லவர்கால அரசியல் செய்திகள், நாட்டு அமைப்புக்கள், நகரங்கள், ஊர்கள் பற்றிய விபரங்கள், பலதிறத் தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்த மக்களின் ஒழுகலாறுகள் போன்ற பல செய்திகளை விளக்கமாகக் கூறத்தகும் நூல் இதுவொன்றேயாகும். இவ்வரிய பண்புகளால்

---

74 *காஞ்சிப்புராணம், நாட்டுப் படலம், செ. 130*

இத் திருத்தொண்டர் புராணம் வரலாற்றுச் சிறப்புடைய பெரு நூலாக விளங்குகின்றது. ஆதலால் இக் காவியம் தமிழர் அனைவர்க்கும் உரிய பொதுநூல் என்னலாம். இதனைப் படித்துப் பயன்பெறுதல் தமிழர்தம் கடமையாகும்.

வரலாற்றுச் சிறப்புடைய இவ்வரிய காவியத்தை இயற்றித் தந்த சேக்கிழார் பெருமானுக்கு நமது நன்றியும் வணக்கமும் உரியவாகும்.

8 - OCT

சரஸ்வதி பிரஸ், கடலூர் - 2